
ஜெய்சக்தி
புள்ளிகளும்
கோடும்

## பொருளடக்கம்


1. புள்ளிகளும் கோடும் ........ 5
2. அன்பெனும் வலைக்குள் ........ 12
3. பூமராங் ........ 20
4. மேஜை விளக்கு! ........ 30
5. புதுப் பணம் ........ 38
6. அக்கா ........ 46
7. டாக்டர் ஷீலா ........ 55
8. அம்மா அப்படி என்னதான் செய்தாள்! ........ 62
9. புது வருஷப் பொறப்பு ........ 75
10. சின்னஞ்சிறு கதைகள் பேசி...! ........ 82
11. கலா சொன்னது நினைவிருக்கட்டும்! ........ 88
12. ஒரு நாள்... ஒரு கனவு ........ 96
13. காயங்கள் ........ 101
14. சுகமா? சுருக்கா? ........ 108
15. அப்போதும் இப்படித்தான்...! ........ 118
16. கிளைப் பாதை ........ 123
17. புரியுதா, புள்ளே?! ........ 129
18. வானமே கூரை ........ 137
19. நீ, நீயாக! ........ 145
20. கனவுக் கதாநாயகன் ........ 153


●●●



# 1

## புள்ளிகளும் கோடும்...!

"சொன்னாக் கேட்டாத்தானே! நாலஞ்சு நாள் லீவு வரும்போது போகலாம்னு சொன்னேன். இல்ல இப்பவே போலாம்னு பிடிவாதம் பிடிச்சுப் போய் வந்தாச்சு. இப்பப் பாரு, ரொம்ப டயர்டா இருக்கே. இனி இரண்டு நாள் படுத்துப்பே. நா வேறே நாளைக்குக் காலேஜுக்குப் போகணும்."

கார் கதவை அறைந்து சாத்திவிட்டு இறங்கி ஓட்டலை நோக்கி நடக்கும்போது என் மனைவி மீனாட்சி மீது ஒரு பார்வையைச் செலுத்தியபடி புலம்பிக் கொண்டு நடந்தேன். களைப்பாகத் தெரிந்தாலும் அதை மீறிய ஒரு திருப்தியும் அவள் முகத்தில் தெரிந்தது.

"பரவாயில்லே. நீங்க காலேஜுக்குப் போனப்புறம் ரெஸ்ட் எடுக்கறதைத் தவிர என்ன வேலை? மீனாட்சியம்மன் தரிசனம் அற்புதமா கிடைச்சது. திருப்பரங்குன்றம் அழகர்மலை, பழனி எல்லாம் திருப்தியாப் பாத்தாச்சு. அது போதும். இன்னும் ஒன்றரை மணி நேரப் பயணம். இங்க சாப்பிட்டுட்டுப் போனா அக்கடான்னு போய்ப் படுக்கவேண்டியதுதான்" என்றாள்.

நான் ஒன்றும் சொல்லவில்லை. இரவு ஒன்பது மணி உடுமலைப்பேட்டையில் ஒரு நல்ல ஹோட்டலாகப் பார்த்து சாப்பிட உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். உனக்கென்ன வேணுமோ சொல்லிக்க மீனா! எனக்கென்ன ஒரு பிளேட் இட்லி போதும்." என்று சொல்லி விட்டு சேரில் சாய்ந்து அமர்ந்தேன். என் மனைவியைச் சொல்லியும் குற்றமில்லை. திருமணமாகிப் பன்னிரண்டு வருடங்களாயிற்று. குழந்தையில்லை. எனக்காவது நான் பேராசிரியர் என்பதால் கல்லூரிப் பணி கருத்தரங்கில் கட்டுரை படிப்பது, விழாக்களில் கலந்துகொள்வது என்று நேரத்தை உருப்படியாகச் செலவிட வாய்ப்பு இருந்தது. என் மனைவிக்கு வசதிக்குக் குறைவில்லை என்றாலும், எத்தனை நேரம்தான் வீட்டில் பொழுதைக் கழிக்க முடியும்.

எங்காவது போகலாம் என்று துளைத்தெடுத்துக் கொண்டிருந்தவளை சேர்ந்தாற்போல் நாலு நாள் விடுமுறை கிடைக்கட்டும் என்று சொல்லியே வாயடைத்துக் கொண்டிருந்தேன். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தவள், "எல்லாம் இரண்டு நாள் போதும்" என்று வற்புறுத்தி அழைத்ததும் வேறுவழியின்றிக் கிளம்பி விட்டேன்.

சாப்பிட்டுக் கொண்டே சுற்றிலும் நோட்டம் விட்டேன். நேரெதிர் மேசையில் அளவான குடும்பம் ஒன்று அமர்ந்திருந்தது. தாய், தந்தை, மகன் அவ்வளவே, மகன் சென்னா பட்டூரா, ஃப்ரைடு ரைஸ், ஐஸ்க்ரீம் என்று ஆர்டர் செய்து கொண்டிருந்தான். எகிறப் போகிற பில்லை எண்ணிக் கணவன் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாற்போல் எனக்குத் தோன்றியது.



"சார்! கொஞ்சம் கையை எடுக்கறீங்களா?" என்ற சிறு வயதுப் பையனின் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன்.

நான் சாப்பிட்ட தட்டை எடுப்பதற்காக ஒரு சிறுவன் நின்றுகொண்டிருந்தான். குழந்தைத்தனமான முகம், பத்து வயதுதான் இருக்கும். என்னுடையதும் சேர்த்து நான்கைந்து தட்டுகளாய் கையில் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு போனான்.

என் மனமெல்லாம் கரைந்து போனது. என் மனைவி மீனாட்சியோ அந்தக் குழந்தை போகவர வேலை செய்வதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அடுத்த பிளேட் கொண்டு வந்தபோது,

"தம்பி! இங்கே வா" எனக் கூப்பிட்டேன்.

"என்னப்பா, நீ பள்ளிக்கூடம் போறதில்லையா?"

"இல்லை." வெட்கத்துடன் தலையசைத்தான்.

"அப்பா, என்ன பண்றாரு?"

"அப்பா இல்லை."

"ஓ... வீட்டில் கஷ்டமா?"

"ஆமா! என்று சொல்லிக்கொண்டே கல்லாவில் அமர்ந்திருந்தவரைத் திரும்பத் திரும்ப பார்த்தபடி நகர்ந்து விட்டான். அடுத்த சில நிமிடங்களில் பக்கத்து டேபிளுக்கு வந்தவனை நான் கிசுகிசுப்பான குரலில் அழைத்தேன்.

"இங்க வா, முதலாளிகிட்டே நான் சொல்லிக்கறேன்" என்றதும் அருகில் வந்தவுடன், "அப்பா பேர் என்ன?" என்று கேட்டேன்.

"அப்பா பேர், வரதராசு" என்றான்.

உடுமலைப்பேட்டையில் எனக்குத் தெரிந்த வரதராசு கூட இருந்தார். அவராயிருக்குமோ என்ற சந்தேகம்

எழுந்தது. 'அவருக்கு ஏது பத்து வயதில் மகன்? இருக்கக் கூடாதா? எத்தனையோ பேருக்கு லேட்டாகக் குழந்தை பிறப்பதில்லையா? அப்படியிருக்கலாமே' என்று எண்ணியபடி,

"யாரு வைஸ்சேர்மன் வரதராசுவா?" என்றேன்.

குழந்தை கண்களை அகல விரித்தான்.

"ஆமா! எங்கப்பாவைத் தெரியுமா?" என்று. அப்போதே நான் முடிவு செய்து கொண்டேன். அடுத்த நாள் கல்லூரிக்கு விடுமுறை என்று.

பின்புறத்தில் "மங்கி ஃபால்ஸ்" தனக்கேயுரிய இரைச்சலுடன் விழுந்து கொண்டிருந்தது.

நானும், மீனாட்சியும் ஒரு ஓரத்தில் மரங்களின் நடுவே கிடைத்த இடத்தில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம்.

சந்தர் - அதுதான் ஹோட்டலில் பார்த்தோமே அவன் பெயர். அவன் ஒரு சிறிய துண்டை விரித்துக் கொண்டு, பிக்னிக் வருவதற்காக மீனாட்சி கொண்டு வந்திருந்த அத்தனை தின்பண்டங்களையும் கடை பரப்பிக் கொண்டு அமர்ந்திருந்தான்.

அவனைச் சுற்றி ஒரு பத்துப் பன்னிரண்டு குரங்குகள் இருந்தன. ஒவ்வொரு வாழைப்பழமாக உரித்து ஒவ்வொரு குரங்குக்காய் கொடுத்துக் கொண்டிருந்தான். சற்று தூரத்தில் இரண்டு கைகளையும் பின்கழுத்துப் பக்கம் கோத்துக் கொண்டு ஒரு பாறை மேல் சாய்ந்து கொண்டு காலை நீட்டி அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த எனக்கு இந்தக் காட்சி ஆச்சரியமாய் இருந்தது.

குரங்குகள் அவன் மேலே விழுந்து பிடுங்காமலிருக்க வேண்டுமே என்று மீனாட்சி பதைபதைத்தாள்.



சந்தரோ அவன் அப்பாவுடன் வந்து அடிக்கடி பழக்கப் பட்டவனாம். அதனால் இந்த அசாதாரண காட்சிக்குக் கதாநாயகனாய் அமர்ந்து கொண்டிருந்தான். கடந்த இரண்டு நாள் நிகழ்வுகளும் என் மனதில் படமாய் விரிந்தது.

அன்றிரவு ஹோட்டலில் அவன் அப்பாதான் வைஸ்சேர்மன் வரதராசு என்றவுடன் நான் ஆடிப்போய் விட்டேன்.

அந்த மனிதரை எனக்கு நன்றாகத் தெரியும்.

எங்கள் குடும்ப நண்பர். என்னைக் காட்டிலும் பதினைந்து வயது மூத்தவர். நான் கோவைக்கு வந்து செட்டிலாகி இந்தப் பத்துப் பன்னிரண்டு ஆண்டு இடைவெளியில் தொடர்பு விட்டுப் போயிற்று. அற்புதமான மனிதர். தனக்கென்று சில வாழ்க்கை முறைகளை வைத்திருந்தவர். இரண்டு பெண்கள். அடுத்தடுத்து கல்யாண வயதில். ஒன்பது வயதுக் குழந்தையாக இந்தச் சந்தர் என்ற நிலையில் அவர் திடீரென்று ஆக்ஸிடெண்டில் இறந்துபோனாராம் அதனால்தான் குடும்பத்துக்கு இப்படியொரு நிலைமை என்று அவரது மனைவி கலங்கிக் கண்ணீர் விட்டபடி சொன்னபோது என் மனதில் பெரிய பாறாங்கல் வந்து அமர்ந்து கொண்டது.

வாழ்க்கையின் நியதிகள் அதற்கப்பாற்பட்ட சக்தி என்றெல்லாம் சொல்கிறார்களே, அந்தச் சக்தியின் செயல்பாடுகள் குறித்து எனக்குப் பெருத்த கேள்விகள் எழுந்தன.

குழந்தைக்காக நானும் என் மனைவியும் ஏங்கிக் கொண்டிருக்கிறோம். ஒரு குழந்தைக்கு எல்லாவித வசதிகளையும் கொடுத்து வளர்க்கக்கூடிய சக்தி படைத்த எங்களுக்கு இல்லாமல் செய்துவிட்டு காலங்

கடந்து பிறக்கச் செய்ததோடு இந்தக் குழந்தையை எச்சில் தட்டு தூக்கச் செய்துவிட்டானே என்று எரிச்சல் என்னுள் பொங்கிக் கொண்டிருந்தது.

எனக்கு இல்லாமல் போவதற்கு என்ன பாவம் செய்த பரம்பரையில் வந்தேனா? இல்லையே! எனது தாத்தா எங்கள் கிராமத்துக்குக் கிணறு வெட்டிக் கொடுத்தவர். சத்திரம் கட்டியவர். அப்பா பள்ளிக்கூடம் கட்டியவர். நானும் எவ்வளவோ நல்லது செய்கிறவன். ஆனால், கைக்கும், வாய்க்குமாய் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த மனிதனுக்குக் குழந்தையைக் கொடுத்து அதன் தலையில் சுமையும் வைத்துவிட்டானே என்று எண்ணி எண்ணி மாய்ந்து கொண்டிருந்தேன்.

என் மனைவி எத்தனையோ முறை ஒரு குழந்தையை தத்தெடுக்கலாமென்று கெஞ்சிக் கேட்டு விட்டாள். நான் தீர்க்கமாய் மறுத்து விட்டேன். எனது பாரம்பரியப் பெருமை என்னுள் அழுந்தப் பதிந்திருக்க வேண்டும். அந்த வழி வந்தவர்களில் எப்படி ஏதோ ஒரு ஜீவனை இடைபுகுத்த முடியும் என்ற கேள்விதான் என்னைத் தயங்கச் செய்ததற்குக் காரணமாய் இருந்திருக்க வேண்டும்.

சந்தர் ஓடிவந்தான், "சார்! பழம்லாம் தீர்ந்து போச்சு சார்!" என்று கள்ளமில்லாமல் சிரித்தபடி.

அமராவதி அணையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது கார். சந்தர் சந்தோஷமாய் மீனாட்சியுடன் ஒட்டி அமர்ந்து கொண்டிருந்தான். அணைக்குப் போய்ச் சேர்ந்தோம். ஒரு இடத்தில் அமர்ந்து சாப்பிட்டோம். பட்டாம்பூச்சியைத் துரத்தித் துரத்தி ரசித்த சந்தரை "டேய், பயலே, இங்க வாடா?" என்று கூப்பிட்டேன்.

"என்னங்க சார்" என்றபடி வந்தான்.



"ஏண்டா, வாழைப்பழம், சாக்லெட்லாம் வாங்கிக் குடுத்தா நீ சாப்பிடுவியா... அதை விட்டுட்டுக் குரங்குக்குக் குடுக்கறே?" என்றேன் அதட்டலாக.

"அது... அது... சார்?"

"என்ன சொல்லு?" என்றேன்.

"அது... சொன்னா... சொன்னாக் கோபிச்சுப்பீங்களா?" என்றான்.

"இல்லடா சொல்லு."

"சார், ஓட்டல்ல சாப்பிட வர்றவங்க நிறைய பேர், எனக்கு டிப்ஸ் குடுப்பாங்க சார். அதை வாங்கும் போதெல்லாம் எப்பப் பாரு நமக்கு யாரோ கொடுக்கறாங்களே, நாம யாருக்காவது ஏதாவது குடுக்கணும்னு நெனச்சுப்பேன் சார். அதுதான் இன்னைக்கு..." என்று இழுத்தான்.

எனக்குள்ளே மின்னல் வெட்டியது. பிஞ்சு உள்ளத்தின் எண்ணத்தின் உயரம் விசுவரூபமாய் வளர்ந்தது.

கல்லூரியில் 'வறுமையில் செம்மை' என்று வார்த்தைக்கு வார்த்தை இலக்கியப் பாடல்களுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்த எனக்கு இந்தக் கணத்தில் இயற்கையின் நியதி புரிந்தது.

வாழ்க்கைப் பாடம் புரிந்தது.

பன்னிரண்டு வருஷமாய்க் குழந்தையில்லாமல் ஏங்கிக் கொண்டிருந்த எனக்குள் அன்பு உணர்வு பெருக்கெடுத்தது.

எல்லா வசதிகளும் இருந்தும் குழந்தையில்லாமல் தவித்துக் கொண்டிருந்த நான்!

மிக அற்புதமான மனம் படைத்த ஒரு நல்ல மனிதருக்குக் காலம் தப்பிப் பிறந்த குழந்தை!

இயல்பாகவே பெருந்தன்மையோடு திகழும் அந்தக் குழந்தை!

இந்த எல்லாப் புள்ளிகளும் மூன்று தனித்தனி புள்ளிகளாய் இல்லாமல் ஒரு கோடாய் இணைகிறாற் போன்று எனக்குள் ஒரு தோற்றம் தெரிந்தது.

# 2

## அன்பெனும் வலைக்குள்

"கொஞ்சம் கூட்டுப் போட்டுக்கடா...!" என்றார் அம்மா!

"அம்மா, போதும்மா இப்படி கிண்ணத்தோட கவுத்தா எப்படிம்மா சாப்பிடுவேன்" என்றான் சபாபதி.

"சாப்பிடுடா! உடம்பு துரும்பாட்டம் இளைச்சுப் போச்சு!" என்றார் அம்மா சம்பூரணம்.

சபாபதிக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான்.

"அம்மா! டாக்டர் என்னன்னா உடம்பைக் குறைக்கச் சொல்றாரு. நீ இப்படிச் சொல்றே! உடம்பைக் குறைக்க லேன்னா சுகர் பி.பி-ன்னு வரும்கறார்."

"என்னமோ போ. வெறும் ஊளைச் சதை. உடம்பு சும்மா பொதபொதன்னு வளர்ந்துகிடக்கே தவிர சத்தே கிடையாது" என்று கையைத் தட்டிக் காட்டினார்.

"அம்மா! இந்த இடத்துல எல்லாருக்குமே சதை கொஞ்சம் தொளதொளன்னுதான் இருக்கும்" என்றான்.



"அதெல்லாம் இல்லை! அவ சரியா கவனிக்கற தில்லைடா!" என்றார் அம்மா!

சபாபதி ஒன்றும் பேசவில்லை. சாப்பிடுவதில் ஆழ்ந்தான்.

அம்மா! அன்பான அம்மா! எல்லாவிதத்திலும் அன்பானவள். ஆனால், மருமகளை மட்டும் பிடிக்காது. இத்தனைக்கும் மருமகள் ரொம்பப் பொறுப்பானவள். சபாபதிக்கு சில நேரம் தோன்றும். அம்மா ஒரு மோச மான மருமகளை எதிர்பார்த்திருப்பாளோ? அப்படி ஒருத்தி வந்திருந்தால் அவளது குறைகளை நிரூபித்துக் கொண்டு தான்தான் மருமகளைக் காட்டிலும் உயர்ந்த வள் என்று நிம்மதியடைந்திருப்பாளோ! வேறு எதையும் சொல்ல முடியாத நிலைமையில் இப்போது சரியாக கவனிப்பதில்லை என்று சொல்லுகிறாளோ!

சபாபதிக்கு ஒரு குழந்தைகூட ஆகி விட்டது. மூன்று வயதில் ஒரு பையன். இன்னமும் தன் மருமகளுக்கு தன் மகனை முழுமையாக விட்டுக் கொடுக்க மனம் வரவில்லையென்று தோன்றியது.

ஜெயக்கொடி அம்மாவிடம் எதையும் பேச மாட் டாள். ஆனால், அவனிடம் பொருமுவாள்.

"ஏன். நான் என்ன உங்களைக் கவனிக்கமாட் டேனா! அதென்ன அப்படி ஒரு அவநம்பிக்கை!..." என்பாள் மனத்தாங்கலுடன்.

"...ம்... சரி, விடு. அம்மான்னா அப்படித்தான். என்னவோ என்னை முழுசா தூக்கி உன்கிட்ட குடுத் துட்டமேன்னு அவங்களுக்கு ஒரு அங்கலாய்ப்பு. பார்த்துப் பாத்து வளத்தவங்க. நீ சரியாக் கவனிக்க மாட்டேன்னு அவங்களுக்கு ஒரு கற்பனை" என்று சமாதானப்படுத்து வான்.

நெருங்கி நின்று சிரித்து சமாதானப்படுத்துவான். கலாட்டா செய்து அவள் கோபத்தை சமாளித்து விடுவான்.

மாதத்தில் இரண்டு முறை அம்மாவைப் பார்க்கப் போவான். ஒரே மணி நேரப் பயணம் என்பதால் அம்மா வாரத்தில் இரண்டு முறையாவது வந்து விட்டுப் போவார்.

அப்பாவும் வருவார்! ஆனால், அப்பா பெருந் தன்மையானவர். ஒவ்வொரு முறை அம்மா வந்து விட்டுப் போகும்போதும் ஜெயக்கொடி முகம் வாடி இருப்பாள்.

"என்ன ஜெயா?" என்று கேட்டால் ஒன்றும் சொல்ல மாட்டாள்.

கல்யாணமான புதிதில் அவனுக்குக் கோபம் வரும்.

"என்ன, உனக்கு அம்மா வந்தாலே பிடிக்கிற தில்லையா?" என்று கத்துவான். ஆனால், பிறகுதான் தெரியவரும். அதுவும் அப்பாவிடம் இருந்து.

"டேய், உங்கம்மாவை என்ன பண்றதுன்னே தெரிய லைடா! நொட்டு நொடுக்குன்னு அந்தப் புள்ளைய எதுனா ஒண்ணு சொல்றா!" என்று வருந்தும்போதுதான் தெரியும்.

ஒரு முறை ஜெயக்கொடியை அடித்தும்கூட இருக் கிறான். பிறகு விஷயம் தெரிந்து அவளைச் சமாதானப் படுத்தினான்.

சும்மா சொல்லக் கூடாது. ஜெயக்கொடி மிகவும் பொறுமையான பெண். சில நேரங்களில் ஜெயக்கொடி சண்டைக்காரியாக இருந்தால்கூட தேவலாம் போல இருந்தது. இரண்டு பேரும் சண்டை போடட்டும் என்று விட்டு விட்டு தான் 'எஸ்கேப்' ஆகியிருக்கலாம் என்று எண்ணிக் கொள்வான்.



பல நேரம் யோசித்துப் பார்த்திருக்கிறான். அம்மா வுக்குத் தன் மகனை இவ்வளவு தூரம் வளர்த்து வாலிப மாக்கி இன்னொருத்திக்கு சொந்தமாக விடுவதா என்ற உரிமை உணர்வுதான் காரணம் என்று புரிந்தவுடன் ரசிக்க ஆரம்பித்து விட்டான்.

அது அம்மாவுக்கு இன்னும் வலித்தது. இன்னும் உக்கிரமாக வேறு வேறு விதங்களில் குற்றம் கண்டு பிடிக்க ஆரம்பித்தார். அதற்காக அம்மாவைத் திருப்திப் படுத்துவதற்காக ஒன்றிரண்டு முறை மனைவியைக் குறை கண்டுபிடித்துத் திட்டவும் செய்தான்.

ஜெயக்கொடிக்கு விஷயம் புரிந்ததனாலோ அவ ளும் அமைதியாக வாங்கிக் கொள்வாள். அப்போது தான் அந்த விஷயம் நடந்தது.

இப்போது குழந்தைக்கு மூன்று வயதாகி விட்டது ஜெயக்கொடி பி.எட். படிப்பு முடித்திருந்தாள். வேலைக்குப் போகிறேன் என்றாள். அம்மா வேறு விதமாக ஆரம் பித்தார்.

"டேய்! வேலைக்கெல்லாம் அனுப்பாதே! கையில காசு பாத்தா... அப்புறம் ஆளைப் பிடிக்க முடியாது" என்றார்.

"என்னம்மா பேசறே நீ! படிச்ச படிப்பு வேஸ்ட் ஆகாதா? குழந்தை பெருசாகறவரைக்கும் போக வேண் டாம்னு சொன்னோம். சரின்னு இருந்தா இல்ல! இப்ப வீட்ல இருந்துகிட்டு டைமை எதுக்கு வேஸ்ட் பண்ண ணும்?" என்று எரிந்து விழவும், அம்மா அடங்கி விட்டார். ஆனால், இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் புலம்பல்.

"தம்பி! முந்தியெல்லாம் என்னை எதுத்துப் பேச மாட்டடா! அவ உன்னை மாத்திட்டாடா!" என்று

சபாபதிக்கு அழுவதா, சிரிப்பதா என்பதே தெரிய வில்லை. காதில் வாங்காமல் இருக்கவும் கண்டு

கொள்ளாமல் இருக்கவும் பழகிக் கொண்டான். ஆனால், அம்மாவின் கோபம் இந்த முறை கொஞ்சம் ஆழ மாகவே இருந்தது. ஒரு மாதம் வரை வரவே இல்லை.

அவனுக்கும் போக நேரம் கிடைக்கவில்லை. ஒரு மாதம் ஆகவும் அவனுக்கும் அம்மாவின் நினைப்பு ஆட்டிப் படைத்தது.

ஜெயக்கொடியே சொன்னாள். "ஏங்க அத்தையைப் பத்தித் தெரிஞ்சதுதானே! நீங்க போய்ப் பாத்துட்டு வாங்க."

அவன் முகம் மலர்ந்தது.

"ஆமாங்க. நானும் சைக்கலாஜி படிச்சிருக்கேன் இல்ல!" என்று சிரித்தாள் ஜெயக்கொடி.

"என் தங்கம்டி நீ" என்று கொஞ்சிக் கொண்டான். அவள் விலகிக் கொண்டு சிரித்தாள்.

"என்ன சார்! பகல்லயே ரொமான்ஸா?" என்றாள்.

"ஆமா! அடுத்ததுக்கு... அடிப் போடலாம்னு பார்த் தேன்."

"வேண்டாம். ரெண்டு வருஷம் போகட்டும்!"

அவன் மீண்டும் பழைய விஷயத்துக்கு வந்தான்.

"என்ன... ஜெயா! அம்மா வேறு இப்படி முறுக்கிக்க றாங்க."

"அத்தான்! நீங்க முதல்ல போங்க! நானும் விஷ்ணுவும் அடுத்த நாள் வரோம்."

"அதேன், அடுத்த நாள்? அன்னிக்கே வர வேண்டியதுதானே!"

"பாரு! உன்னைத் தனியா அனுப்பாம என்ன பேசறம்னு கேட்கவே வந்திருக்கா பாரும்பாங்க" என்று சிரித்தாள்.



இருவரும் சிரித்தார்கள்.

சபாபதி புறப்பட்டுப் போனான்.

"அம்மா! அவளும் குழந்தையும் நாளைக்கு வரு வாங்க!"

"ஏன்...? ரெண்டு நாள் கூட உன்னை நம்பி இங்கே இருக்க விட மாட்டாளாமா?" என்றார் அம்மா.

சபாபதி நொந்து போனான்.

**ஊ**ர்க்கோயிலுக்குப் போய்விட்டு வெளியே வந் தார்கள். வழியில் ஒரு வீட்டில் கூட்டம் தெரிந்தது.

"என்னவாம்?" என்றான் சபாபதி.

"தம்பி! அவங்க மருமகளுக்கு அடிக்கடி சாமி வரும்!"

"சாமியா?" என்று புன்னகைக்க,

"தம்பி! அப்படியெல்லாம் கிண்டல் பண்ணாதே! தெய்வ குத்தமாயிடும்" என்றார் அம்மா, கலவரமான முகத்துடன்.

சபாபதி கப்பென்று வாயை மூடிக்கொண்டான்.

**ஊ**ருக்குத் திரும்பும்போது பஸ்ஸில் வந்தார்கள்.

மகன் மடியில் உறங்க, மனைவியின் அருகில் அமர்ந் திருந்த சபாபதி கேட்டான்.

"ஜெயா! என்ன மந்திரம் போட்டே! அம்மா இவ்வளவு தூரம் அமைதியாயிட்டாங்க. சமாதான மாயிட்டாங்க!" என்றான்.

"'அத்தை! என்னிக்கிருந்தாலும் அவரு உங்க மகன் தானே! நான் வந்தவதானே!' அப்படீன்னு அடிக்கடி சொன்னேன்" என்றாள்.

அவன் சிரித்தான். எல்லா மந்திரமும் இரண்டு மூன்று நாட்களுக்குத்தான். மறுபடியும் நிலைமை மாறியது.

அன்றைக்கு!

சபாபதி பரபரப்பாக வந்தான்.

"ஹேய்! ஜெயா! அம்மா இன்னிக்கு வராங்களாம். ஒரு வாரம் இருக்காங்களாம். என்னென்ன ராமாயணம், மகாபாரதம் நடக்குமோ" என்றான்.

"வரட்டுங்க" என்றாள் ஜெயக்கொடி.

"ஜெயா!" என்று தயங்கினான்.

"ம்."

"மேனேஜ் பண்ணிப்பியா?" என்றான்.

அவள் புன்னகைத்தாள்.

அம்மாவும் வந்து விட்டார்.

குலதெய்வத்துக்கு பொங்கல் வைத்துக் கும்பிட்டார்கள்.

பூஜை முடிந்தபோதுதான் அது நிகழ்ந்தது.

சபாபதியின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஜெயக்கொடி லேசாக உதைந்து கொடுப்பதுபோல் முன்னும் பின்னும் ஆடினாள். அவன்மேல் சாய்ந்து நிமிர்ந்தாள். சபாபதி திகைத்துப் போய்த் தாங்கினான்.

அம்மா ஜெயக்கொடியை உற்றுப் பார்த்தா. பார்வை மாறியது.

உடலை முறுக்கிக் கொண்டாள். "ஹூம்" என்று உறுமினாள்.

"தம்பி! டேய்! சாமி வந்துருக்காட்ட இருக்கு!" என்றார்

ஓடிப்போய் செம்பு நிறைய தண்ணீரை ஊற்றி மஞ்சளைக் கலக்கி ஜெயக்கொடியின் முன்னால் வைத்தார். ஜெயக்கொடி இரண்டு கைகளையும் சேர்ந்தாற்போல முறுக்கிக் கொண்டு மேலே உயர்த்தினாள். ஒரு விதமான குரலில்,



"சம்பூரணம்! நான் யாரு தெரியுமா?" என்று ஆடினாள்.

"ஆத்தா! சொன்னாத்தானே தெரியும்."

"நான்தாண்டீ உன் குலதெய்வம் வந்திருக்கேன். அங்காள பரமேஸ்வரி! எதுக்கு வந்திருக்கேன் தெரியுமா? ஒரு நல்ல சேதி சொல்லத்தான்."

"ஆத்தா! சொல்லு ஆத்தா!"

அப்பாவும் மகனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"இந்தா! நம்ம ஊருக்கு வந்தப்பவே இந்தப் புள்ளையை எனக்குப் புடிச்சுப் போச்சு. நானே இவ வயித்துப் புள்ளையா பொறக்கப் போறேன். நான் குடியிருக்கிற வூடடி.... இந்தப் புள்ளே. நல்லாப் பாத்துக்க."

"ஆகட்டும் ஆத்தா!"

"அப்புறம் நானே வந்த பொறக்கப் போறேன்னு எல்லாருகிட்டயும் சொல்லாதே! அது தேவ ரகசியம். நீ ஏதோ நல்லவ. நாலு பேருக்கு நல்லது செய்யறவங்கறதுக்காக ஆத்தா உன்ற வூடு தேடி வந்திருக்கேன்."

"சரி... ஆத்தா... புரிஞ்சுது ஆத்தா..."

இடைப்பட்ட நேரத்தில் ஒரே ஒரு நொடி சபாபதியின் கண்களும், ஜெயக்கொடியின் கண்களும் சந்தித்துக் கொண்டன. தீர்க்கமான பார்வை அது.

ஜெயக்கொடி அலட்டிக் கொள்ளாமல் சொன்னாள்.

"சபாபதி... விபூதி கொண்டா! கற்பூரம் கொண்டா! நான் மலையேறணும்..."

திடுக்கிட்டுப் போன சபாபதி தயங்கினான். தயக்கத்துடன் நின்ற அவனிடம் அம்மா பரபரப்பாகச் சொன்னார், "போடா! போய் எடுத்துட்டு வா."

சபாபதிக்கு சட்டென்று எல்லாம் புரிந்த மாதிரி இருந்தது.

வேகமாகப் போய் பூஜை அறையிலிருந்து விபூதிக் கிண்ணத்தை எடுத்து வந்து அம்மாவின் கையில் கொடுத்தான். கொடியில் இருந்த துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டான். பவ்யமாக கற்பூரத்தைப் பற்ற வைத்தான்.

அம்மா ஆரத்தி எடுத்து முடிக்க, ஜெயக்கொடி அந்த எரிகிற கற்பூரத்தை எடுத்து வாயில் போட்டு விழுங்கினாள். செம்புத் தண்ணீரையும் மடக் மடக்கென்று குடித்தாள்.

"ஆத்தா! ஆத்தா!" என்று அம்மா கன்னத்தில் போட்டுக் கொள்ள, அவனும் லேசாக முன் பக்கம் சாய்ந்து பணிவுடன் கன்னத்தில் போட்டுக் கொள்ள ஆரம்பித்தான்...!



# 3

## பூமராங்

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

"ஹலோ! ஸ்ரீ! எப்படியிருக்கே?!..." என்று உற்சாகமாகக் கலகலவென்று சிரித்தான் ரவீந்திரன்.

"இருக்கேன்" என்றாள் சுபஸ்ரீ அசுவாரசியமாக.

அவன் நெற்றியில் முடிச்சுக்கள் விழுந்தன. ஒரு கணம்தான். ஆனால், மறுகணம் சுதாரித்துக் கொண்டான். மறுநிமிடம் வழக்கம் போல் உற்சாகமானான்.

"இருக்கேன்னா? சொர்க்கத்துலயா? நரகத்துலயா?

"ம்! ரெண்டுங்கெட்டானா... இருக்கேன்" என்றாள்.



"ஹேய்!" என்று கலகலவென சிரித்தான். "சரி, விடு. சொர்க்கம்னா நான் வந்து ஜாயின் பண்ணிக்கறேன்... நரகம்னாலும் நான் வந்தா சொர்க்கமா மாத்திடலாம்..." என்றான்.

அவள் உச்சுக் கொட்டினாள்.

அவன் சிந்தனை வயப்பட்டான்.

"ஸ்ரீ! சம்திங் சீரியஸ்?" என்றான்.

"ம்! சீரியஸ்னு சொல்ல முடியாது. ஆனா, சீரியஸ் தான்..." என்றாள்.

"போச்சுரா! இது சரி வராது. நீ நம்ம வழக்கமான ஸ்பாட்டுக்கு வந்துரு... நானும் வந்தர்றேன். உலகத்துல எதுவுமே சீரியஸ்னு கிடையாது. எல்லாம் நாம எடுத்துக்கற விதத்துலதான் இருக்கு" என்றான் ஆதரவாக.

"தத்துவம் பேசாதிங்க... ரவி... நான் ரொம்ப கடுப்புல இருக்கேன்" என்றாள் எரிச்சலாக.

"ஓகே, ஓகே! பத்து நிமிஷத்துல வந்துர்றேன். கூல் டவுன். ஓகேவா!" என்றான். செல்ஃபோனை ஆஃப் செய்தான்.

சிந்தனையில் ஆழ்ந்தபடியே புறப்பட்டான்.

போன வாரத்தில் ஒரு நாள்!

"நேத்து முளைச்ச காளான்கள் எல்லாம். வந்து நமக்கு புத்தி சொல்லுதுங்க... நம்ம சர்வீஸ் என்ன? குவாலிஃபிகேஷன் என்ன? இந்தம்மா வந்து கேள்வி கேக்கறதா? எல்லாம் காலம் நேரம்யா..." என்று அப்பாவின் குரல் எகிறிக்கொண்டே போனது.

அப்பா யாருடனோ போனில் பேசிக் கொண்டிருந்தார். சுபஸ்ரீக்கு அது காதில் விழுந்தது. ஏதோ

கதைப் புத்தகம் படித்துக் கொண்டிருந்தவள் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தாள்.

"ஆமாங்கறேன்! இந்தப் பொம்பளைக்கு கம்ப்யூட்டர் ஆபரேஷன் தெரியுமாம். இருக்கட்டுமே. நாமள்லாம் இத்தனை நாள் கணக்கு வழக்கு பாக்காம இருந்தோமா? சரியாக் கணக்குப் போடலையா என்ன? அக்கவுண்ட்ஸ் வைக்கலையா என்ன? எந்தக் கம்ப்யூட்டரை வச்சு கணக்குப் போட்டோம். என்னமோ இப்ப வந்தது எல்லாம் தையா தக்கான்னு குதிக்குதுங்க" என்று பொரிந்து கொண்டிருந்த அப்பாவின் கோபத்தைக் குறித்து அவளுக்குச் சிரிப்பும் வந்தது, கவலையும் ஏற்பட்டது.

'அப்பா ஏன் இப்படி... ரிஜிடா இருக்காரு... காலம் மாறும்போது எல்லாவித மாற்றங்களும் வரத்தானே செய்யும். இவரும் ஒரு காலத்தில் புதியவராகத்தானே அந்த அலுவலகத்தில் நுழைந்திருப்பார். பழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கைதானே!' என்று எண்ணிக் கொண்டாள். ஆனால், அப்பாவிடம் நேரில் அதுபற்றியெல்லாம் பேசுவதற்கு அவளுக்குத் துணிவிருக்கவில்லை.

அப்பா கோவர்த்தன் கலெக்டர் அலுவலகத்தில் சூபரின்டெண்டெண்டாக வேலை பார்த்தார். சமீப காலத்தில் அவருக்கு மேலதிகாரியாக ஓர் இளம்பெண் வந்திருந்தார். நேரடித் தேர்வில் வெற்றி பெற்று வந்திருந்த அந்தப் பெண் கொஞ்சம் கண்டிப்பானவராக இருந்தார். அப்பாவின் குறைகளை அவ்வப்போது சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தார் என்பதாலோ என்னமோ அவருக்கு அந்த அதிகாரியைப் பிடிக்காமல் போனது.

நண்பர்களிடம் பேசும்போது "ஒண்ணும் மண்ணும் தெரியாதது எல்லாம் வேலைக்கு வருதுங்க. கத்திரிக்



காய்க்கு கால் முளைச்ச மாதிரி இருக்குதுங்க. சட்டம் பேசுதுங்க. கேள்வி கேட்குதுங்க..." என்று அடிக்கடி சொல்லுவார்.

அப்படித்தான் இப்போதும் நிகழ்கிறது என்று சுபஸ்ரீயும் நினைத்தாள். ஆனால், போன வாரத்தில் அப்பா உற்சாகமாக வந்தார்.

வழக்கம் போல் நண்பர்களிடம் பேசினார்.

"யோவ். கருப்பையா! இன்னிக்கு அந்தம்மாவை நல்லா வகையாச் சிக்க வச்சுட்டேன். அந்தம்மாவுக்கு கலெக்டர்கிட்டேயிருந்து செம டோஸ்" என்று உற்சாகமாகச் சிரிப்பது கேட்டு அவளுக்குள் வருத்தம் ஏற்பட்டது.

"என்ன பண்ணினேன்னு கேக்கறியா? ஒரு ஸ்டேட்மெண்ட்ல அந்தம்மாவோட கையெழுத்து வாங்கினப்புறமா யாரும் இல்லாதப்ப ஒரு நம்பரை மாத்தி விட்டுட்டேன். அப்புறம் என்ன ஆச்சா! எப்படி டாலியாகும்? 'ஏம்மா' இந்தக் கூட்டல் கழித்தல் தெரியாதவங்க எல்லாம் எதுக்கும்மா வேலைக்கு வர்றீங்க'ன்னு கலெக்டர் காச்மூச்சுன்னு ஒரே சத்தம் போட்டார். அப்புறம் என்னத்தை ஆகறது? ஏதோ கண்ணைக் கசக்கிட்டு அழுதுருக்கும் போலே. போறப்ப கண்ணும் மூக்கும் சிவந்து கிடந்தது" என்று சிரித்தார்.

அந்தப் பக்கம் என்ன சொன்னார்களோ தெரியவில்லை வெடித்தார்.

"அடப் போய்யா! என்னத்தை தாட்சண்யம் பாக்கறது. அந்தம்மா பெரியவங்க சின்னவங்கன்னு வச்சுப் பார்த்ததா? அப்படித்தான் வேணும்" என்றார்.

அந்தக் குரலில் தெரிந்த வன்மம் பார்த்து சுபஸ்ரீக்கு சற்றே கவலையாகிப் போனது. ஆனால், அத்தனை

ஆங்காரமாகப் பேசிக் கொண்டிருந்த அப்பா இரண்டு நாட்களுக்குப் பிறகு சுருதி இறங்கினாற்போல் ஆகி விட்டார். அதற்குப் பிறகு யாரிடமும் தன் மேலதிகாரியைப் பற்றி பேசவேயில்லை.

அவளுக்குள் குறுகுறுப்பு அதிகமானது. அப்பாவிடம் அது பற்றிக் கேட்க அச்சமாகவும் இருந்தது. கொஞ்சம் கலக்கமாகவும் இருந்தது.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு தங்கள் வீட்டுக்கு வந்த கருப்பையாவிடம் கேட்டாள்.

"மாமா! என்ன ஆச்சு? எங்கப்பா அவரோட லேடி ஆபீஸரைப் பத்தி அடிக்கடி பேசிட்டிருப்பாரு. இந்த ரெண்டு மூணு நாளா அந்தப் பேச்சையே காணோம்" என்று நைஸாக விசாரித்தாள்.

அப்போது அவர் சொன்னார். "ஏம்மா! உனக்கு விஷயம் தெரியாதா? அந்தம்மாவை சஸ்பெண்ட் பண்ணிட்டாங்க. அதுக்கு உங்கப்பன்தான் காரணம் தெரியுமா?" என்றார்.

"ஓ!" என்று அதிர்ந்து போய் அமர்ந்து விட்டாள். அதற்குப் பிறகு தேறிக் கொண்டவள் எதற்கும் எச்சரிக்கையாக, "அங்கிள்! அப்பாகிட்டே நான் இதைப் பத்தி விசாரிச்சேன்னு சொல்லாதீங்க" என்றாள்.

"சரிம்மா...!" என்றார் கருப்பையா.

முகம் நிறைய சோகத்துடன் அமர்ந்திருந்த தனது எதிர்கால மனைவியைப் பார்த்து அவனுக்குள் அன்பு பெருகியது. சிரித்தான்.

"அசடு. அசடு!" என்று தலையைத் தடவிக் கொடுத்தான். அவள் கோபமாக அவன் கையைத் தட்டி விட்டாள்.

"விடுங்க ரவி... நானே ஏற்கெனவே கடுப்பில இருக்கேன்."



"இங்க பார்! உன் பிராப்ளம் சால்வ் பண்ண என்கிட்டே வழியிருக்கு."

"உண்மையாகவா?" என்று உற்சாகமானாள்.

சொன்னான்.

அவள் கண்களில் உற்சாகம் ஏறியது. முகத்தில் மலர்ச்சி தோன்றியது.

"வொர்க் அவுட் ஆகுமா?" என்றாள் லேசான சந்தேகத்துடன்.

"அது நீ எவ்வளவு தூரம் பர்ஃபார்ம் பண்றேங்கறதைப் பொறுத்து" என்றான்.

"அசத்திட மாட்டேன்" என்றாள்.

"சரி. அதைவிடு. இப்ப நம்ம விவகாரத்துக்கு வா" என்று சற்று நேரம் கலாட்டா செய்தான். அவள் பொய்க் கோபத்துடன் முறைத்தாள்.

"ஏன் ரவி! உங்க ஊருக்குப் பேரென்ன. லொள்ளுப் பட்டணமா?" என்றாள்.

அவன் சிரித்தான்.

பெரியவ சாப்பிட்டாளா? சின்னவன் சாப்பிட்டானா?" என்று கேட்டபடியே டைனிங் டேபிளின் அமர்ந்தார் கோவர்த்தன்.

"சின்னவன்தா சாப்பிட்டான். பெரியவ என்னமோ முகத்தை சுண்டப் போட்டுட்டு படுத்திருக்கா! என்னன்னு தெரியலை" என்றார் அம்மா.

"சாப்பிடலையா?" என்றவர் எழுந்து போனார். அவள் அறைக்குள் எட்டிப் பார்த்தார்.

"என்னம்மா?" என்றார்.

அவள் எழுந்தாள். கண்கள் கலங்கினாற்போல் இருந்தன.

"ஏம்மா? சாப்பிடலையா?" என்றார்.

"ஆமா. சாப்பிட்டு என்னத்துக்கு ஆகுது?"

"என்ன கோபம்? யார் மேல கோபம்? என்றார் புன்னகையை அடக்கிக் கொண்டு.

"அப்பா. எங்க ஆபீஸ் மானேஜர் ரொம்ப லொள்ளுப் புடிச்ச ஆளுப்பா. 'பொம்பளைங்கன்னா என்ன கிள்ளுக்கீரைகளா? வீட்ல இருந்து சோறாக் கறதை விட்டுட்டு நீங்கள்லாம் எதுக்கு வேலைக்கு வர்றீங்க? இந்தக் கம்ப்யூட்டர் கிம்ப்யூட்டர்னு கொஞ்சம் தெரிஞ்சுகிட்டா உலகத்தையே தெரிஞ்ச மாதிரி ஆடறீங்க. கத்தரிக்காய்க்கு காலும் கையும் முளைச்ச மாதிரி இருக்கறவங்க எல்லாம் எடுத்த எடுப் பில அக்கவுண்டன்ட் ஆயிடறீங்க, அப்படி... இப்படின் னுட்டு... போக வர ஜாடைதாம்ப்பா. இன்னிக்கு நேரடி யாவே திட்டு. ஏதோ கணக்குல தப்புப் பண்ணிட் டேனாம்" என்றாள்.

"ஓஹ்!" என்று சற்றே தாக்குண்டாற்போல் விழித் தார். பிறகு கோபமாக, "ஏம்மா. நீ ஏதாவது அடிக்கடி தப்பு செய்வியோ?" என்றார்.

"ஆமா! நான் செஞ்ச ஒரே தப்பு பொண்ணாப் பொறந்ததுதான். அவரெல்லாம் கிளார்க்காய் இருந்து படிப்படியா மானேஜரானவராம்... நான் நேரடியா அக்கவுண்டன்ட் ஆயிட்டேனாம். அந்தப் பொறாமை" என்றாள்.

எங்கேயோ இடிப்பது போல் உணர்ந்தார் கோவர்த்தன். தான் பேசிய வார்த்தைகள் தன் வீட்டி லேயே எதிரொலிக்கும் என்று அவர் எதிர்பார்க்க வில்லை.

"ஏம்மா! நம்ம ரவிக்கு ஃப்ரெண்டுதானே! அவர் கிட்ட சொன்னியா? உங்க நிச்சயதார்த்தத்துக்கு வந்திருந் தாரே அந்த மானேஜர்" என்றார்.



"அப்பா! பர்ஸனல் ஃப்ரெண்ட்ஷிப் வேற. ஆபீஸ் ரிலேஷன்ஷிப் வேற. பார்க்கலாம் பொறுங்கறார் ரவி"

"நான் வேண்ணா மானேஜரைப் பார்க் கட்டுமா?"

'வேண்டாம்ப்பா. உங்க மாதிரி கவர்ன்மெண்ட் ஆபீஸ் இல்லப்பா. பிரைவேட் கம்பெனி. எப்ப வேண்ணாத் தூக்கிடுவாங்க. இந்த மாதிரி சம்பளம் எங்க கிடைக்கும்?"

அதுவும் உண்மை என்று பட்டது.

உண்மைதான். இந்த சம்பளம்தான் பெண் ணின் கல்யாணத்துக்கு ஒரு ப்ளஸ் பாயிண்டாக அமைந் திருக்கிறது.

"சரிப்பா. வாங்க சாப்பிடலாம். வேலை செய்ற இடத்துல எல்லாம்தான் இருக்கும். அப்படித்தான் பேசுவாங்க. ஏம்ப்பா, நமக்கு இப்படி? நாம யாருக்கும் எந்த துரோகமும் செய்யலையே? யாரையும் மனசு நோகப் பேசினதில்லையே!" என்று அப்பாவியாக அப்பாவைப் பார்த்தாள்.

கோவர்த்தன் சுரத்தே இல்லாமல் அவளைப் பார்த்தார். சாப்பிடும்போது சிந்தனையில் இருந்தார். சாப்பிட்டு முடித்த பிறகு சட்டையை மாற்றிக் கொண்டு கிளம்பினார்.

"கொஞ்சம் வெளியே போயிட்டு வந்துர்றேன்" என்றார்

தெருவில் இறங்கினார்.

"ஏம்மா! இவரைப் பத்தியா சொல்லிக்கிட்டிருப்பே! 'ரொம்ப சுறுசுறுப்பா இருப்பாரு... அவரு ஒரு ஸ்டேட் மெண்ட் வச்சார்ன்னா கண்ணை மூடிட்டு கையெழுத்து

போடலாம்'னு" என்று சொல்லிக் கொண்டே வந்து காபிக் கோப்பைகளை மேலதிகாரி சாந்தாவின் அம்மா அந்த டீபாயின் மேல் வைத்தார்.

கோவர்த்தனுக்கு சுருக்கென்று உறைத்தது.

"சார்! எனக்குத் தெரியும். எப்பவுமே கேர்ஃபுல்லா இருக்கறவரு. எப்படியோ ஏமாந்துட்டீங்க. கலெக்டர் கூட கேட்டாரு. 'நீங்க ஏம்மா பொறுப்பேத்துக்க றீங்க. செக்‌ஷன் ஆளைக் கையைக் காமிச்சு விட்டுட்டுப் போங்கம்மா'ன்னு. ஆனா நான் ஒத்துக்கலே. எனக்கு இன்னும் எவ்வளவோ சர்வீஸ் இருக்கு. இன்னும் கல்யாணம் ஆகலே. நான் எதிர்காலத்துல என்னோட திறமையை நிரூபிக்க முடியும். அது மட்டுமில்ல, அவரோட பொண்ணுக்கு இப்பதான் மேரேஜ் ஃபிக்ஸ் ஆயிருக்கு. அவரு சஸ்பெண்ட் ஆனா ஒரு குடும்பமே பாதிக்கும். நானே பொறுப்பேத்துக்கறேன்னேன்" என்றார்.

கோவர்த்தன் மௌனமாக அமர்ந்திருந்தார்.

"'இல்லம்மா! ஏதோ வேணும்னே செய்த மாதிரி தெரியுது'ன்னார். அப்ப நான் சொன்னேன். 'சார்! ஆபீஸ்ல வொர்க்ல நான் கொஞ்சம் சத்தம் போடுவேன். ஆனா, தனிப்பட்ட முறையில அவரு மேலே மதிப்பு வச்சிருக்கேன். அவங்களும் என்மேல மதிப்பு வச்சிருக்காங்க. கண்டிப்பா இது கேர்லெஸ் மிஸ்டேக் தான், அப்படீன்னேன்" என்றார் சாந்தா.

பெயருக்கு ஏதோ பேசிவிட்டு வீட்டுக்கு நடைபிணமாக வந்து சேர்ந்தார் கோவர்த்தன். சாந்தாவை ஒரு முறைக்காக போய் பார்த்துவிட்டு வரவேண்டும் என்று தான் போனார். ஆனால், திரும்பும்போது அவரது உள்ளுணர்வு சொன்னது. கண்டிப்பாக சாந்தாவுக்கு தான் வேண்டுமென்றுதான் செய்தோம் என்று தெரிந்



திருக்கிறது. ஆனால், பெருந்தன்மையாலேயே அடித்து விட்டார் சாந்தா என்று.

"பரவாயில்லை. மிஸ்டர் உங்களுக்கும் மூளையிருக்கு!" என்று சிரித்தாள் சுபஸ்ரீ.

"அது இருக்கறவங்களுக்குத்தான் புரியும். உனக்குன்னாங்காட்டி கொஞ்சம் லேட்டாப் புரிஞ்சுருக்கு" என்றான்.

வழக்கம்போல் அவள் பொய்க்கோபம் காட்ட, அவனும் தனக்கே உரிய முறையில் சமாதானம் செய்தான்.

"அப்புறம் என்ன ஆச்சு? அதைச் சொல்லு?" என்றான்.

"என்ன ஆச்சு! சாந்தா மேடத்தோட பெருந்தன்மை எங்கப்பாவை ரொம்பவே அசைச்சிடுச்சு. நேராய் போய் கலெக்டர்கிட்டே உண்மையை ஒத்துகிட்டாராம். அப்புறம் கலெக்டரே ஏதோ ஒரு ஐடியா பண்ணி ஒரு என்கொயரி மாதிரி வச்சு கம்ப்யூட்டர்ல ஏதோ வைரஸ்னால பிராப்ளம் ஆயிடுச்சுன்னு மேட்டரை க்ளோஸ் பண்ணிட்டாராம். சாந்தா மேடத்தோட சஸ்பென்ஷனையும் கான்சல் பண்ணிட்டாராம்" என்றாள்.

"குட்... வெரி நைஸ்! என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டான் ரவீந்திரன்.

வழக்கம்போல் வெளியிடத்தில் சந்திக்காமல் இன்று அவன் வீட்டுக்கே வந்திருந்தான். அவள் அப்பா இல்லாத நேரம் பார்த்துத்தான்.

சோஃபாவில் அவளருகே அமர்ந்திருந்தவன் மெல்லிய குரலில் அவளிடம்,

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்-புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள் ளேசில மூடர் - நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்.
கண்களிரண்டினி லொன்றைக்
காட்சி கெடுத்திடலாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யகற்றிடுங் காணீர்"

என்று பாரதியின் கவிதை சொன்னான். வலக் கையால் அவள் தோளை வளைத்துக் கொண்டான்.

அவளும் நிம்மதியானதொரு புன்னகையோடு அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.



# 4

## மேஜை விளக்கு!

மேஜை விளக்கு! அதன் விலை ஐந்நூறு ரூபாய்க்குள் இருக்கும் ஒரு அஃறிணைப் பொருள்தான். பார்கவி வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே மீராவும் ராகவனும் பேசிக் கொள்வது காதில் விழுந்தது.

"பார் மீரா! பார்ட்டிக்குத்தான் போகணும்"

"முடியாது - சினிமாதான். அப்படியில்லேன்னா நீங்களே போங்க."

"மீரா. ப்ளீஸ் புரிஞ்சுக்க. ஆபீஸ் பார்ட்டி. நீ வர லேன்னா ஆளாளுக்கு வேலைக்கு போற வொய்ஃப் அதான் வர்லேங்கற மாதிரிப் பேசுவாங்க"



"ஓ! என்னைக் கூட்டிட்டுப் போய், பாருங்கப்பா நான் எப்படி வச்சிருக்கேன்னு காட்டணுமாக்கும்."

"சரி - எதுக்கு வம்பு. உங்க அத்தை அந்தக் கால எழுத்தாளர்தானே. அவங்களையே கேட்கலாம்."

அவர்கள் தன்னிடம் வருவது தெரிந்ததும் நாலு நாளைக்கு விருந்துக்கு வந்த இடத்தில் இது ஏதடா வம்பு என்று தோன்றினாலும் பார்கவி நேரடி பதிலாக இல்லாமல் வேறு ஒரு கதையைச் சொன்னாள்.

"என்கிட்டயா பேசணும்? பாரதி இலக்கியக் கழகமா? என்ன பார்கவி இது?" பார்கவியின் கணவன் அருண் ஆச்சரியப்பட்டான்.

பார்கவி கொஞ்சம் வெட்கத்துடன் சொன்னாள். "நான் சொன்னால் கேட்க மாட்டேங்கறாங்க. ப்ளீஸ். ஒரு அஞ்சு நிமிஷம் பேசிடுங்க!"

"ஓகே" - ஷர்ட்டை எடுத்துப் போட்டுக் கொண்டு வந்தான். வந்திருந்தவர்களைப் பார்த்தான். நான்கு பேர். வணக்கம் போட்டான். சோஃபாவில் உட்கார்ந்தான்.

"அப்புறம்... சொல்லுங்க?" என்று இயல்பாகச் சிரித்தான்.

அவன் சிரிப்பைக் கண்டதும் அவர்களுக்கு தெம்பு கூடியது. ஒருவர் ஆரம்பித்தார்.

"வந்து... மிஸ்டர் அருண். வருஷா வருஷம் நம்ம பாரதி விழாவிலே பார்கவி பேசும். அது மாதிரி இந்த வருஷமும் பார்கவி வரணும். அட்லீஸ்ட் பட்டி மன்றத்துலயாவது ஒரு பத்து நிமிஷம் பேசணும்!"

அருண் ஆச்சரியமாய் பார்கவியைப் பார்த்தான். திருமணத்தின் போதும் சரி, அதற்குப் பிறகும் சரி, அவ ளும் அதைப் பத்தி அதிகமாச் சொல்லிக்கல. நானும்

கேக்கல... ஓகே... அவளுக்கும் இன்ட்ரஸ்ட் இருந்த துன்னா..."

அருணை அவர் முடிக்க விடவில்லை. "என்ன அப்படி நெனைச்சுக்கிட்டிங்க தம்பி! பார்கவி மேடை யேறிச்சுன்னா வெளுத்துக் கட்டும். நீங்க அனுமதிச்சா பார்கவி பேசும்" என்று சொன்னார்.

அருணுக்கு இதெல்லாம் வியப்பாயிருந்தது. குள்ள மாய், ஆனால் அழகாய் நடமாடும் பார்கவி, இயல் பிலே அமைதியானவள். மேடையிலே பேசுவாளாமே? வெளுத்துக் கட்டுவாளாமே? "இட் இஸ் சம்திங் அம்யூசிங்!"

"அப்படியா? அப்ப நானும் கேக்கணும் அதை!" என்றான் ஆர்வத்துடன். "ரைட்! நீங்க இடம், தேதி, டைம் சொல்லிடுங்க. நானே கூட்டிட்டு வந்துர்றேன்" என்றான்.

அருண் அப்படிச் சொன்னவுடன் வந்தவர்களுக்கு ஒரே சந்தோஷம். அப்போது அருணுக்குத் தெரிய வில்லை, பார்கவிக்குள்ளே இன்னொரு பார்கவி இருப்பது.

விழா முடிந்து வந்த இரவு அருணுக்குத்தான் வெகு நேரம் உறக்கம் வரவில்லை. இந்த எட்டு மாதங்களாய்த் தன்னோடு வாழ்ந்த பார்கவி, வலுவில் தன்னை ஒரு குடும்பத் தலைவி என்ற ஃபார்முலாவுக்கு உட்படுத்திக் கொண்டுவிட்ட பார்கவி, இன்றைக்குத் தான் பார்க்கிற பார்கவி இன்னொரு பார்கவியின் முழுமையில் ஒரு பகுதிதான். எவ்வளவு அழகாகப் பேசினாள்?

பார்கவி மேடையேறும்போது அருண்தான் டென்ஷனில் இருந்தான், இந்தச் சபையை ஆகர்ஷிக்கும் அளவுக்கு இவளிடம் விஷயம் இருக்குமா என்று. ஆனால், பார்கவி பேசத் தொடங்கியதும் கூட்டத்தில் அப்படியோர் அமைதி நிலவியது. "நாம் விடுதலை யடைந்து விட்டோம். அதனால் பாரதியின் தேசபக்திப் பாடல்கள் இனி நமக்குத் தேவையில்லை" என்று வாதா டிய எதிர்க்கட்சிக்கு, "அடிமைப்பட்டுக் கிடக்கும்போது மட்டும்தான் தேச பக்தி என்றில்லை. எப்போதும் வேண் டும். அப்போதாவது ஒரு எதிரி, பொது எதிரி. ஆனால், நமக்கு நாமே இப்போது எதிரிகள்... ஜாதி... மதம்... என்று எத்தனை எதிரிகள்" என்றாளே! கருத்துகளே இல்லா மல் சத்தமாகப் பேசிய ஒருவரை, "எம்ப்ட்டி வெஸ்ஸல்ஸ் மேக் மச் நாய்ஸ்" என்று கிண்டல் செய்தாளே... "ஓ! பார்கவி... பார்கவி! ஏன் நீ உன்னில் இந்த பகுதியை என்னிடம் மறைத்தாய்?"



யோசித்துப் பார்த்தான். எத்தனையோ நாட்கள் இரவில் ஒன்பது மணிக்கு மேல், "தோரணப் பந்தல்" கேட்கணும் என்று உட்கார்ந்திருப்பாள்.

"தூங்கும்மா. காலைல நேரத்தில் எழுந்திருக் கணுமே" என்று தான் சொன்னவுடன் பேசாமல் படுத்துக் கொள்வாளே. இதெல்லாம் அவளுக்கு, அருணைப் பொறுத்தவரை இலக்கிய சமாசாரம் பிடி படாது என்றெண்ண வைத்திருக்குமோ? அது உண்மை தான். நமக்கு பிடிபடாதுதான். ஆனால் அதற் காக அவளுக்குப் பிடிப்பதை நாம் தடுப்போம் என்று ஏன் நினைத்தாள்? அருணின் முன்கோபம் அணை போட் டிருக்க வேண்டும்.

பார்கவி திடீரென்று விழித்தாள். அருண் உறங்காமல் அமர்ந்திருப்பதைப் பார்த்ததும், "ஏங்க தூங்கலையா?" என்றாள். அருண் திடீ ரென்று, "பார்கவி, இன்னிக்கு நீ ரொம்ப நல்லாப் பேசினே" என்றான்.

பார்கவி விழித்தாள்.

ஆமாம், அருண் அன்று மாலை திரும்பி வந்ததிலிருந்து அதைப் பற்றி எதுவும் சொல்லாமல் திடீரென்று சொன்னால்? விழிக்காமல் பின்னே?

அடுத்த நாள் காலை அப்படித்தான். சூடாக இட்லி எடுத்து வைக்கும்போது அருண் திடீரென்று கேட்டான். "ஏம்மா, இந்த மாதிரி இலக்கியச் சர்ச்சைன்னா உனக்கு ரொம்பப் பிடிக்குமா?" மறுபடியும் விழித்தாள்.

முழுமையான மூன்று நாட்கள். பார்கவிக்குள் இருந்து அந்த பார்கவியை உசுப்பி விட்டான். அவளோடு உரையாடினான். இந்த உரையாடல்களின்போது பார்கவியின் முகத்தில் ஏற்பட்ட பௌதிக மாற்றங்களை கூர்மையாகக் கவனித்தான். கண்கள் விரிய சந்தோஷம் பொங்க. அந்த நாட்களை எப்படி நினைவுகூர்ந்தாள். மாநில அளவில் பரிசுகள் வாங்கியது. கவியரங்கங்களிலே மாணவனோடு கவிதையில சண்டை போட்டது. வானொலியில் புகுந்து தூள் கிளப்பியது.

அருணுக்கும் மனமெல்லாம் நிறைந்து போனது. தான் பிஸினஸில் "டார்ஜெட்டை எட்டிவிட்டால் இப்படித்தானே படபடக்கிறோம். எப்படி அனிமேட்டட் ஆகப் பேசுகிறாள். இவள் இந்த எட்டு மாதங்களில் கூண்டில் அடைபட்டிருக்கிறாள் பேதைப் பெண்! அவள் கவிதைகளை, கதைகளை வாங்கிப் படித்தான். பிறகு, ஒரு தனிமையான நேரத்தில் அவள் முகத்தை இரு கைகளிலும் ஏந்திக் கொண்டு மிருதுவாகச் சொன்னான்,

"பார்கவி, யூ ஆர் அட் ஃபுல் லிபர்ட்டி டு என்ஜாய் யுவலைஃப்! பிடித்தமான விஷயங்களில் ஈடுபட உனக்குப் பூரண உரிமையுண்டு. உனது ஆர்வத்துக்கு, அபிலாஷைக்கு நான் குறுக்கே நிற்க மாட்டேன்" என்று.



பார்கவி சந்தோஷத்தில் துள்ளிக் குதிப்பாள் என்று எதிர்பார்த்தான். இல்லை. அப்படி ஒன்றும் அவள் குதிக்கவில்லை. ஒரு நிமிடம் முழுசாக ஓடியது. அருண் அவளைக் குழப்பமாகப் பார்த்தான். பிறகு சொன்னான், "என் வசதிகளுக்காகப் பார்க்காதே, உனக்கும் ஒரு அவுட்லெட் வேணும்மா" என்று.

பார்கவியின் முகத்தில் மகிழ்ச்சிக் களை கூடியது. ஆனால், நாணத்துடன் சொன்னாள், "வந்து... வந்து... இதுல உங்க வசதியோ என்னோட வசதியோ மட்டுமில்லை... வரப்போற மகன் அல்லது மகளோட வசதியையும் பார்க்கணுமே" என்றாள்.

"அருண், இந்தப் பேச்சு எழுத்து இதெல்லாம் இருக்கே. ஒரு தாகம் அது வளர வளர நிறைவே ஏற்படாது. மற்ற எல்லா விஷயங்களையும் அது முழுங்கிடுமோன்னு கொஞ்சம் பயமாயிருக்கு. நீங்க என்னை என்கரேஜ் பண்றதைப் பாக்கறப்போ எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கு. பட்... பட் என் குழந்தை. என் கணவன் இவர்களோட தேவைகளை நான் புறக்கணிக்கிற சூழ்நிலைகளும் சில வேளைகளில் வந்துடலாம். எங்கயோ நான் பேச்சுக்குக் கைதட்டல் வாங்கற வேளையில, என் பையன் என்னை 'மிஸ்' பண்ணிட்டு இருக்கக் கூடாது... அதுக்காக... இந்த ஆர்வத்தையும் என்னால விட முடியலே."

இப்போது அருண்தான் குதித்தான். "ஹாய்... நீ... சொல்லவே இல்லை... பெரிய்ய... ஆளு!" என்று. அந்த நேரத்துக்கு எல்லாமே இரண்டாம் பட்சமாய்ப் போனது.

பிறகு ஓரிரு நாட்களில் பார்கவி அருணிடம் நிறையப் பேசினாள். ஆனாலும் "இதைப் பத்தி நாள் யோசிச்சேங்க. எனக்குப் பிரபலமாகணும்ன்ற ஆசையெல்லாம் இருந்ததுங்க. இப்ப என்னோட ஆர்வம்

என்னோட இருக்கட்டும். குடும்ப வசதிகளைப் புறக் கணிச்சுட்டு நா பொது வாழ்க்கையில இறங்க விரும்ப லேங்க" என்றாள் தீர்க்கமாக.

"நான் இப்போ முதல்ல ஒரு தாய்... ஒரு வொய்ஃப். அப்புறம்தான் எல்லாம்" என்றாள் முடிவாக.

அருண் திகைத்துப் போனான். ஆனால், இரண்டு பேருமே ஒருவரை மற்றொருவர் சந்தோஷப் படுத்த முயல்கிறார்கள் என்ற உண்மைதான் இருவருக் குமே மனசை நிறைத்தது.

அடுத்த நாள் அவர்கள் வீட்டு மாடியில் ஒரு பெரிய அறையில் ஆட்கள் வந்து ஏதோ வேலை செய் தார்கள். அருண் மேற்பார்வையில் "என்ன விஷயம்?" என்று பார்கவி விசாரித்த போது, "சஸ்பென்ஸ்" என்று சிரித்தான்.

மாலையில் கையில் ஒரு பார்சலுடன் வந்தான். "பார்கவி இதைப் பிரித்துப் பார்" என்றான்.

பார்கவி அதைப் பிரித்தாள்.

ஒரு அழகான டேபிள் லைட்.

அருண் சொன்னான். "பார்கவி! எழுதத் தெரிஞ்ச வன் எழுதாம இருக்கறது திறமைக் கொலைன்னு ஒரு எழுத்தாளர் எழுதியிருந்ததைப் படிச்சிருக்கேன். எனக் காக நீ உன் திறமைகளை இழக்கவோ, மறக்கவோ தேவையில்லை. அஃப்கோர்ஸ், உனக்குப் பொது வாழ் விலே இப்ப இறங்க விருப்பமில்லேன்னா நா வற்புறுத்த மாட்டேன். ஆனா, நீ எழுதணும். எனக்காக எழுதணும். மேல் அறையில் உனக்காக லைஃப்ரடி கம் ஸ்டடி ரூம் தயார். நடு ராத்திரில எழுதணும்னு ஒரு 'இன்ஸ் பிரேஷன்' வந்தாக் கூட அது தடைப்பட்டுப் போயிடக் கூடாது. கோ ஹெட்" என்று சிரித்தான்.



பார்கவியின் கண்களில் நீர் நிறைந்தது. 'ஓ! இந்த மகிழ்ச்சி எவ்வளவு அற்புதமான உணர்வு. தன்னுடைய திறமைகள் கிடக்கட்டும். தனக்குக் கிடைத்த ஒரு அரிய பொக்கிஷம் இவன் மனசல்லவா!' பார்கவி பூரித்துப் போனாள்.

இப்போ சொல்லு கண்ணு இந்த டேபிள் லைட் ஒரு அஃறிணைப் பொருள்தான். ஐந்நூறு ரூபாய்க்குள் தான் அதன் விலை இருக்கும். ஆனால், அதன் பின் னணியில் இரண்டு அன்புள்ளங்களின் பிணைப்பு இருக்கிறதே. கணவனை மகிழ்ச்சியாக வைக்க நினைக் கும் மனைவி. அதை விட ஆச்சரியம். மனைவியின் மன நரம்புகளை மீட்டும் கணவன்! அந்தப் பிணைப்புக்கு அது சாட்சி என்றான பின் அது அஃறிணை என்றா லென்ன! உயர்திணை என்றாலென்ன.

விலை மதிப்புக்குள் அடங்காதது. அப்பாற்பட்டது.

"அதென்ன அத்தை எப்பப் பாரு! இந்த டேபிள் லைட்டை எங்க போனாலும் கூட வச்சுகிட்டே இருக்கே" என்று அடிக்கடி கேட்கும் மருமகளுக்கு விளக்கம் சொல் வது போலத் தங்களுக்கும் பதில் சொன்ன அத்தையை அந்தக் கணத்தில் மீராவுக்கு மிகவும் பிடித்தது.

ராகவனும் மீராவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். மீரா ராகவனிடம்,

"ஓ.கே.! இன்னிக்கு உங்க ஆபீஸ் பார்ட்டி! ஆனா, வீக் எண்ட் சினிமா!" என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள்.

"தாங்க்ஸ் டியர்! தாங்க்ஸ் அம்மா" என்று உற்சாக மாகப் போகிற அவர்களை மகிழ்ச்சியுடன் பார்த்தார் பார்கவி.



# 5

## புதுப் பணம்

ரசம் கூட்டி வைத்தாகியது. அடுப்பில் ஏற்றி இறக்க வேண்டியதுதான் பாக்கி. ஆயிற்று. இன்னும் பத்தே நிமிடத்தில் மனிதன் பறக்க ஆரம்பித்து விடுவார். எல்லாம் கைக்குக்கை காத்திருக்க வேண்டும். இந்தப் பிச்சைக் காசு மாத சம்பளத்துக்கு மனுஷன்படுகிற பாடும், படுத்துகிற பாடும் என்று எண்ணிக்கொண்டே கைவேலை பார்த்துக் கொண்டிருந்தாள் ஜெயா.

'இதுவும் ஒரு வாழ்க்கையா?' என்ற சலிப்புத் தட்டியது. இந்த சலிப்பிற்கெல்லாம் காரணம் சொல்ல வேண்டுமென்றால் அவள் முதல் நாள் சென்று வந்திருந்த கல்யாணத்தைத்தான் சொல்ல வேண்டும். மீண்டும் அந்தக் கல்யாணத்தில் பார்த்த காட்சிகளே அவள் நினைவுக்குள் நிழலாடின.

"அந்தப் பத்மா, என்னோடு விளையாடிக் கொண்டிருந்தவள், அரைப் பாவாடை கிழிசலும் பொத்தலுமாக மாட்டிக் கொண்டு அலைந்தவள் இன்றைக்கு மாருதி 800 மாருதி 1000 என்று வந்து இறங்குகிறாள். அட, இந்த வாணி (அவள் அம்மா முறுக்கு சுட்டு விற்றுக் கொண்டிருந்தவள்) இன்றைக்குக் காசு மாலை, வங்கி வளையல் என்று மாட்டிக் கொண்டு வருகிறாள். ஒவ்வொருத்தியும் கட்டிக் கொண்டிருக்கிற பட்டுப் புடவையைப் பார்த்தாலே மலைப்பா இருக்கு. ஜாண் அகலம் முழு அகலம் என்று கட்டிக் கொண்டு



வருகிறார்கள். எல்லாம் எப்படி? வீட்டில் ஆம்பளைங்க லைனுக்குப் போகிறார்கள். சம்பாதிக்கிறார்கள். அனுபவிக்கிறார்கள். நீங்க சொன்னாக் கேக்கறீங்களா? நீதி, நேர்மை, நியாயம்ன்னு பேசிக்கிட்டு மாசம் ஐயாயிரத்தைக் கொண்டு வர்றீங்க. இந்த ஐயாயிரம் என்னத்துக்காகும். ஒவ்வொரு செலவுக்கும் பயந்து பயந்து பணத்தைத் தொட்டுத் தொட்டுத் தடவி தடவிப் பார்த்துக் கொண்டு செலவு பண்ண வேண்டியிருக்கு, எல்லாம் என் தலையெழுத்து."

ஜெயா புலம்பத் துவங்கி விட்டாள். ராமநாதன் காதுகளில் ஒவ்வொரு வார்த்தையும் விழ விழ, அவருக்கும் பெரும் எரிச்சல் மண்டியது. இவளுக்கு எப்படித் தான் புரிய வைப்பது என்று நொந்துகொண்டே சாப்பாட்டு மேஜைக்கு வந்தார்.

விஷயம் வேறொன்றுமில்லை. ஜெயாவின் உறவுக் காரர்களில் பலர் நகை வியாபாரத் தொடர்பில் இருந்தார்கள். அவர்களில் பலர் நகைக்கடை அதிபர்களிடம் வியாபாரத்துக்கு அனுப்பப்படுகிறார்கள். அதாவது வெளியூர்களிலிருந்து ஆர்டர் எடுத்துக் கொண்டு வந்து கோயமுத்தூரில் நகைகள் செய்து கொண்டு போவார்கள். ஒவ்வொரு குறிப்பிட்ட அளவு வரை பில்லுடனும், அதற்கு மேல் பில் இல்லாமலுமாகக் கொண்டுபோவதும், கறுப்பு வெள்ளையாகச் சம்பாதிப்பதுமாகவும் 'பிஸ்கட்' வியாபாரம் எனப்படும் தங்க வில்லை வியாபாரங்களிலும் வேகமாகப் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், ராமநாதனோ அரசாங்க உத்தியோகத்தில் இருந்தார்.

ஜெயாவின் உறவுக்கார நகைக்கடை அதிபர் ஜெயாவிடம் ஒரு முறை, "உன் வீட்டுக்காரர் அரசாங்க

உத்தியோகத்துல இருந்து என்னத்தைச் சம்பாதிக்க முடியும். உங்க சொந்தக்காரங்க பாலக்காட்டுல இருக்காங்கல்ல. வாரத்துக்கு ஒரு தரம் இரண்டு தரம் அவங்க வீட்டுக்குப் போற மாதிரி லைனுக்குப் போயிட்டு வரச் சொல்லு. யாரும் சந்தேகப்பட மாட்டாங்க. இவரு அரசாங்க உத்தியோகத்துல இருக்கறதுனால் ஐடென்ட்டி கார்டு இருந்தா இவரை செக் பண்ண மாட்டாங்க. நீங்களும் நாலு காசு பண்ணலாம்" என்று நன்றாக உசுப்பி விட்டுவிட்டார். ஆனால், ராமநாத னிடம் சொன்னபோது மறுத்து விட்டார்.

அன்றைக்கு ஆரம்பித்தது இந்தப் புலம்பல். ஒவ்வொரு திருமணத்துக்குப் போய்விட்டு வரும்போதும் விசுவரூபம் எடுத்துச் சாமியாடிவிட்டுப் பிறகு ஓயும். ஏனோ இந்த முறை நேரடித் தாக்குதலாகத் துவங்கி யிருக்கிறது.

"ஏங்க, நான் சொல்றது காதுல விழுகுதா இல்லையா?"

"எல்லாம் விழுகுது. காலாங்கார்த்தாலே எனக்குக் கோபத்தைக் கிளப்பாம வேலையப் பாரு."

"இப்படித்தான் ஒவ்வொரு தரமும் என் வாயை அடைக்கறீங்க. ஒண்ணுமில்லாத எங்க சித்தப்பா பையன் ராஜவேலு எப்படி வர்றன் பாருங்க. ஒரு வீடு கட்டியாச்சு. இன்னொரு வீடு கட்ட ஆரம்பிச்சுட்டான். ஆனா, நாம் ஒரு சைட் வாங்கறதுக்குள்ள உன்னைப் புடி, என்னைப் புடின்னு ஆயிடிச்சு. என்னமோ நீங்கதான் ஜெயிலு பச்சமிளகாய்ன்னு பயமுறுத்தறீங்க. நாங்க நல்லா யிருக்கணும்கிற எண்ணமோ, பசங்களை நல்லா வச்சுக் கணும்கிற எண்ணமோ இருந்தாத்தானே?"

ராமநாதனுக்கு என்றுமில்லாமல் கோபம் தலைக் கேறியது. சாப்பாட்டுத் தட்டை வேகமாக நகர்த்திவிட்டு எழுந்து கொண்டார்.



"பணம் பணம்னு பேய் புடிச்சு அலையறே நீ. உனக் கென்ன, பணம்தானே வேணும்? போ, போய் உங்க நகைக்கடை மாமன்கிட்ட சொல்லு, நான் லைனுக்குப் போறேன். என்னிக்காவது ஒரு நாள் மாட்டிக்கிட்டு ஜெயிலுக்குப் போவேனில்ல, அப்ப உனக்குப் புத்தி வரட்டும். ராஜவேலு எப்படிச் சம்பாதிக்கிறான் தெரியுமா. நகை வியாபாரமில்ல அது. பிஸ்கட் வியாபாரம்டி, பிஸ்கட் வியாபாரம் வேகமாக வர்ற பணம் பெரும் பாலும் நியாயமான பணமா இருக்காதுடி. உனக்குச் சொன்னாப் புரியாது. பட்டாத்தான் புரியும்" என்று கத்திக்கொண்டே வேகமாக பையை எடுத்து மாட்டிக் கொண்டு டி.வி.எஸ்.பிப்டியை எடுத்தார்.

புறப்பட்டுப் போயே விட்டார்.

ஜெயா விக்கித்துப் போய் நின்றாள்.

ராமநாதனுக்கு இவ்வளவு கோபம் வந்து அவள் பார்த்ததில்லை. 'மனிதர் சாப்பிடாமல் போய் விட்டாரே' என்று மனது குமைந்தது. குற்ற உணர்ச்சி பெருகியது. மனமில்லாமல் வேலைகளை முடித்துவிட்டு, வீட்டு வேலை, கல்யாண அலைச்சல் என்று அலைச்சலி னாலோ என்னவோ அன்று பிற்பகல் ஓய்ந்து படுத்து விட்டாள். மனச்சோர்வும் கூட வாட்டியது.

"ஜெயா, ஜெயா" என்று யாரோ பரபரப்பாய் அழைக்கும் குரல் கேட்டது. ஜெயா வாரி சுருட்டிக் கொண்டு எழுந்தாள். கதவைத் திறந்தால் ராஜவேலு வின் அம்மா கமலம்மா நின்றிருந்தாள். கையில் ஒரு மூட்டை.

"வாங்க சித்தி, என்ன பரபரப்பா வந்திருக்கீங்க" என்று வரவேற்றாள்.

"ஜெயா உபகாரம் பண்ணணும். ஒரு ரெண்டு நாளைக்கு இந்த மூட்டையை இங்க வச்சுக்கணும்

இந்த உபகாரத்தைக் கண்டிப்பாகச் செய்யணும்" என்றாள்.

"அதுக்கென்ன?" என்றபடி மூட்டையை வாங்கிக் கொண்ட ஜெயா, ஏதோ வித்தியாசத்தை உணர்ந்தாள். பை மிகவும் கனத்தது. பார்த்தால் கையில் சின்ன மூட்டையாய் இருந்தது. இந்தக் கனம் கனக்கிறதே என்று எண்ணிக் கொண்டு "என்ன மூட்டை சித்தி இது. இப்படி கனக்குது" என்றபடி சித்தியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

"அது... அது... ஒண்ணுமில்லே. ராஜவேலுவைப் போலீஸ் தேடுது. அதான் வீட்டிலே இந்த மூட்டையிருந்தா ஆபத்துன்னு இங்க ஓடியாந்தேன். இதுல பூராவும் தங்க பிஸ்கட்டு, பாவிப்பய சொல்லாம கொள்ளாம வந்து வீட்டுல வச்சிருக்கான். இன்னும் கொஞ்ச நேரத்துல ரெய்டு வர்றாங்களாம். கடைப் பையன் ஓடிவந்து சொல்லிப்விட்டுப் போறான். இந்த உதவியை எப்படியாச்சும் பண்ணு" என்றாள் சித்தி.

ஒரு நிமிடம் ஜெயா வெலவெலத்துப் போனாள். காலையில் கணவர் கத்திவிட்டுப் போனது வேறு நினைவுக்கு வந்தது. உடனே மூட்டையைச் சித்தியின் கையில் திணித்துவிட்டுச் சொன்னாள்.

"ஐயோ, சித்தி அவரு வேலையில் இருக்கிறது கலெக்டர் ஆபீஸிலே. இந்த மாதிரி விஷயத்துல சிக்கினா அவ்வளவுதான். உள்ளதும் போச்சுன்னு நாங்க உக்காந்துர வேண்டியதுதான். நீ ஒண்ணு பண்ணு, மேக்காலத் தெரு சின்னம்மா வீட்டுக்குப் போயிடு. அங்க ஒரு பிரச்சினையும் இருக்காது" என்று நைச்சியமாகப் பேசி மறுத்தாள்.

"ஒரு கஷ்டம்னு வரும்போதுதான் மனுஷங்க சுயரூபம் தெரியுது?" என்று சித்தி முணுமுணுத்தபடி நகர்ந்தாள்.



"ம்... நல்லாயிருக்கே. லட்ச லட்சமாய் அனுப விச்சப்போ யாருக்குக் குடுத்தீங்க. கஷ்டம்னு வரும்போது மட்டும் இங்க வர்றீங்க" என்று ஜெயாவும் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

உள்ளே போய் ஒரு இரண்டு டம்ளர் தண்ணீர் எடுத்துக் குடித்துவிட்டு வந்தாள். வரும்போதே தெருவில் ஏதோ பயங்கர சலசலப்புக் கேட்டது. ஓடிப்போய்க் கதவைத் திறந்து பார்த்தாள்.

பத்து வீடு தள்ளியிருந்த ராஜவேலுவின் வீட்டுக்கு முன்னால் திபுதிபுவென்று போலீஸ் கூட்டம். வேறு சில அதிகாரிகளும் இருந்தார்கள் போலும். யாரிடமோ திருட்டு நகை வாங்கிவிட்டான் என்று கூட்டத்தில் சிலர் பேசிக் கொண்டு போனார்கள். அதை விசாரிக்க வந்த போலீஸார் கடையைச் சோதனைப் போட, எக்கச்சக்கமான பிஸ்கட்டுகளைக் கண்டுபிடித்ததாகவும் ஒரே சமயத்தில் வீடு, கடை என்று சோதனை நடத்தியிருப்பதாகவும் கைதுசெய்து கொண்டு போகப் போகிறார்கள் என்றும் பேசிக் கொண்டார்கள்.

ஜெயா, பார்த்துக் கொண்டிருக்கையிலேயே ராஜவேலுவை இரண்டு போலீஸார் கைவிலங்குடன் அழைத்துக் கொண்டு போய் வேனில் ஏற்றினார்கள். சித்தியும் ராஜவேலுவின் மனைவியும் அழுது அரற்றினார்கள்.

கம்பீரமாய் நடமாடும் ராஜவேலு, தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு போனான். அவர் மனைவியும், அம்மாவும் அழுத காட்சி பார்க்கக் கொடுமையாக இருந்தது.

ஜெயாவுக்கு பக்கென்றது. மனம் கனத்துப் போனது. அன்று வீட்டுக்கு வந்த கணவர் வேறு காலையில் இருந்த அதே கோபத்தோடு இருந்தார். ஜெயாவிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை.

டிபன், பால் எல்லாவற்றையும் தன் பெரிய மகளிடமே கொடுத்துப் பரிமாறச் சொன்னாள். மகள் சுந்தரி பரிமாறியதாலோ என்னவோ ராமநாதனும் பேசாமல் சாப்பிட்டுக் கெண்டார்.

இரவு முழுவதும் வீட்டிலே ஒரு கனமான அமைதி நிலவியது. அடுத்த நாள் காலை ராமநாதன் முகத்தில் சிடுசிடுப்புக் குறைந்தது போலிருந்தது. ஆனாலும் பேசவில்லை. அவரவர் வேலையை அவரவர் அமைதியாகச் செய்து கொண்டிருந்தனர்.

திடீரென்று சிறிய மகன் பிரபு நியூஸ் பேப்பரை எடுத்துக் கொண்டு ஓடிவந்தான், "அம்மா, பாரு, ராஜவேலு மாமா படம் பேப்பர்ல வந்திருக்கு" என்று கத்திக் கொண்டு. ஜெயா பேப்பரைக் கையில் வாங்கிப் பார்த்தாள். பிஸ்கட்டுகள் ஒரு குறிப்பிட்ட டிஸைனில் பரப்பப்பட்டு, அதற்கு முன்னால் ராஜவேலுவை உட்கார்த்தி வைத்திருந்தார்கள். சட்டை கூட இல்லை.

ஐம்பது லட்சம் பெறுமானமுள்ள தங்க பிஸ்கட்டுகள் பிடிபட்டன என்ற தலைப்புச் செய்தி வேறு. ராஜவேலுவுக்கு அருகில் பெருமையுடன் அதிகாரிகள்.

ஜெயா நிலைகுலைந்து போனாள்.

ஐயோ! எப்படிப்பட்ட காரியத்தில் கணவரை ஈடுபடச் சொல்லி வற்புறுத்தினோம் என்று சுய பச்சாதாபத்தில் மறுகிப் போனாள்.

தயங்கித் தயங்கித் தானே கணவனுக்கு டிபன் எடுத்து வைத்தாள். ராமநாதனும் அமைதியாகச் சாப்பிட்டவர், திடீரென்று செருமிக் கொண்டு, "என்ன, உங்க மாமன் கிட்ட சொல்லிட்டியா, நா லைனுக்குப் போறேன்னு" என்று கனத்த குரலில் கேட்டார்.



ஜெயா உடனே விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தாள். நேற்று பிற்பகலிலிருந்து பார்க்க நேர்ந்த காட்சிகள் அவள் மனதைப் பெரிதும் தாக்கியிருந்தன. தன்னிரக்கம் பொங்கியது. கண்ணீர் வெடித்துக் கொண்டு கிளம்பியது. குமுறிக் குமுறி அழுதாள்.

"ஐயோ! வேண்டாங்க. நீங்க லைனுக்குக் போக வேண்டாம், இன்னொண்ணுக்கும் போக வேண்டாம். இந்த போலீஸ் வேன் ஏறவும் வேண்டாம். குற்றவாளியாகக் குத்த வச்சு உட்காரவும் வேண்டாம். பாவிமக, உங்க மானத்தைப் பறிகுடுத்து எனக்கு காசுமாலையும், அகலக் கரைப் பட்டுப் புடவையும் கேக்குதா. ஐயய்யோ! வேண்டாம், வேண்டாம்" என்று தன் முகத்தில் அறைந்து கொண்டு அழுத மனைவியைப் பார்த்து அதிர்ந்து போய் சடாரென்று எழுந்து இடக்கையால் அணைத்துக் கொண்டார்.

"விடு ஜெயா, அழாதே. போகட்டும் விடு. நீயும் நல்லவதான். ஆசைப்படறது மனுஷ இயற்கைதானே. ஆனா, வேகமாக வர்ற பணம் விபரீதமானதுன்னு உனக்குப் புரிஞ்சாப் போதும். அமைதியா கொஞ்சம் கொஞ்சமா முன்னேறுவோம் காலம் எங்க போயிடுது. ராத்திரியில படுக்கையில படுத்தா மனசுல உறுத்தல் இல்லாம தூக்கம் வர்ற மாதிரி சம்பாதிச்சா போதும். என்ன புரிஞ்சுதா?" என்று ஆசுவாசப்படுத்தினார்.

இரண்டு பேரும் இருக்கிற நிலையைப் பார்த்த பிரபு ஓடிவந்து ஒட்டிக் கொண்டு சொன்னான், "ஆமாம்பா, அம்மா இனிமே காரெல்லாம் கேக்காது. எனக்குக் கூட பொம்மைக் கார்கூட வேண்டாம். அம்மா, நல்லா அம்மாவா ஆயிடுச்சு. இல்லம்மா?" என்றான். அந்த வெள்ளை மழலைச் சொற்களால் சூழ்நிலையின்

இறுக்கம் தளர்ந்தது. இதமாகியது. இருவரும் சிரித்தார்கள். ஜெயாவுக்கு வாழ்க்கையின் அர்த்தம் கொஞ்சம் புரிபட்டாற் போலிருந்தது.



# 6

## அக்கா

எப்போதோ பார்த்த அக்கா!

நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்திக்கப் போகிறேன். சின்ன வயதில் அவள் சட்டையைப் பிடித்து இழுத்து விட்டு ஓடிவிடுவேன். ஆ... ஆ... என்று பிலாக்கணம் வைப்பாள். லீவுக்கு வந்தவளை பெரியப்பா மகள் அப்படி நடத்தலாமா என்று அப்பா கோபம் தீரப் பின்னியெடுத்து விடுவார். அதனாலென்ன? அது என்றைக்கும் எனக்கு உறைத்ததேயில்லை, மீண்டும், மீண்டும் நடக்கும் (பெண்களைச் சீண்டி மகிழும் பழக்கம் அப்போதிருந்தே நமக்குள் விதைக்கப்படுகிறதா என்ன?) நமக்கு மூத்த அக்கம் பக்கத்துப் பிள்ளைகளைப் பார்த்துக் கற்றுக் கொண்டேன் போலும். இந்த நாட்டில் ஆண்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் சின்னஞ்சிறு வயதிலேயே விதைக்கப்படுகிறது என்பது மட்டும் நிச்சயம். நான் படிக்கச் சென்ற அமெரிக்காவில் 'ஆண் சமைக்கிறான். பாத்திரம் துலக்குகிறான். எல்லா வேலைகளையும் செய்கிறான்' என்று எங்கள் கிராமத்தில் சொன்னால் ஏற்றுக்கொள்வார்களா?

'ஆமா, அங்க எவன் வேணா யார்கூட வேணா இருப்பாங்களாமே. அதையுஞ் சொல்றதுதானே!' என்



பார்கள். ஆமாம், குடும்பம் என்கிற அமைப்பு இங்கே அற்புதமான விஷயம்தான். ஆனால், அது எப்போதும் ஒரு மாடே பொதி சுமக்கிற கதையாக இருக்கிறது இங்கே.

வீடு வந்துவிட்டது. அக்கா வீடு! காலிங்பெல் ஒலித்தவுடன் அக்கா வந்து கதவைத் திறந்தாள்.

"அடே! வா, வா சுகு!" என்றாள் அக்கா உற்சாகமாக.

"என்னக்கா, அடையாளம் தெரிஞ்சுதா?"

"தெரியாம என்ன? அடிக்கடி போட்டெல்லாம் அனுப்பறயே. பாக்கறனே. பெரியப்பா, பெரியம்மா எல்லாம் சவுக்கியமா? பன்னெண்டு வருஷமாச்சு உன்னைப் பாத்து. காலேஜுக்குப் போறதுக்கு முன்னாடி பாத்தது இல்லே!"

"ஆமாக்கா! லாங் லீவ் போட்டுட்டு வந்துருக்கேன். எல்லாரையும் பாத்து, எல்லாரோடயும் இருந்து என்ஜாய் பண்ணப் போறேன்"

"வெரிகுட், உக்காருப்பா. மாமா வந்துருவார். இன்னும் கொஞ்ச நேரத்துல குழந்தைகளும் வந்துருவாங்க!"

"அக்கா! என்ன ஆச்சரியம்! நீ இப்போ ஒரு குடும்பத் தலைவி, ரெண்டு குழந்தைகள் பன்னிரண்டு வருஷத்துக்குள்ள. எவ்வளவு பெரிய மாற்றம்.

அக்கா சிரித்தாள்.

"அதுதான் சுகுமார் இந்திய வாழ்க்கை!" சொல்லிக் கொண்டே எழுந்து கடந்து போனாள்.

நான் ஒரு கணம் அவளைக் கூர்ந்து கவனித்தேன். நன்கு சுத்தமாக உடை உடுத்திக் கொண்டிருந்தாள். எளிமையாக இருந்தாள். பாவம்! இந்த இந்தியப் பெண்கள்! இவர்கள் வாழ்க்கை எவ்வளவு ஒரு குறுகிய

கட்டத்துக்குள் சுருங்கி விடுகிறது. 'சுயம்' என்று ஒன்று இருக்கிறது என்று என்றைக்காவது யோசித்திருப்பாளா இந்த அக்கா. கணவனையும் குழந்தைகளையும் கவனித்து, விருந்தோம்பி ஓய்வே இல்லாமல் உழைத்து அந்த அசதியில் உறங்கி எனக்கு அம்மா ஞாபகம் வந்தது. சாம்பாரில் உப்புக் குறைச்சல் என்று தட்டைத் தூக்கியடிக்கும் அப்பா ஞாபகம் வந்தது.

பின் தூங்கி, முன் எழுந்து... அடடா!... எவ்வளவு வசதியாய் ஏமாற்றியிருக்கிறான்கள். மனைவியாம் லைஃப் பார்ட்னராம். அவளை சக மனுஷியாகக்கூட மதிக்கத் தெரியாத மடையன்கள். கருத்து வேறுபாடு என்று ஆரம்பிக்கிறபோதே, 'போடா சரிதான்!' என்று பிரிந்து போகிற மேலை நாட்டுப் பெண்களை இவன்கள் பார்க்க வேண்டும்.

அக்கா திரும்பி ஒரு தட்டில் முறுக்கும் இன்னொரு கையில் காபி டம்ளருமாய் வந்தாள். கொஞ்ச நேரம் பழைய நாட்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அக்கா எம்.ஏ. படித்துவிட்டுக் குடும்பத் தலைவியாகி விட்ட வரலாற்றைச் சொன்னாள்.

தலைவி என்ற வார்த்தைக்கு அடிமை என்று நானே சப்ஸ்டிடியூட் செய்து கொண்டேன் மனதுக்குள்தான். நான் ஒரு வாரம் அவள் வீட்டில் இருக்கப் போகிறேன் என்றதும் அவளுக்கு ஏக சந்தோஷம்.

"சுகு, உன்னுடைய வாழ்க்கை முறையே மாறிப் போயிருக்கும். உனக்கு என்ன வேண்டும். ஃப்ரீயாய்க் கேள். என்னால் முடிந்த அளவு வசதி செய்து தருகிறேன்" என்றாள்.

"என்னக்கா! நமக்குள் ஃபார்மாலிட்டீஸ் எதுக்கு. இப்ப இங்கதான் எல்லா நவீன வசதிகளும் வந்தாச்சே. அதுமட்டுமில்ல, நான் என்னிக்குமே பழைய சுகுமார் தான். நீ எனக்கு நிம்மிக்காதான்" என்றான். நிர்மலா மீண்டும் சிரித்தாள்.



கொஞ்ச நேரத்தில் மாமா வந்தார். நிர்மலாக்கா என்னைச் சொன்னதும் சந்தோஷம் அடைந்தார்.

"என்ன, பெட்டி படுக்கையெல்லாம் இங்கேயே வச்சிருக்கு நிம்மி. மாடி அறையை அவருக்கு ஒழிச்சுக் கொடுத்திருக்கக் கூடாது" என்று அக்காவைக் கடிந்து கொண்டார்.

"இதோங்க!" என்று அக்கா ஓடினாள். அவர் வந்து சொல்ல வேண்டும் என்று அக்கா காத்திருந்தாளோ என்று எனக்குள் லேசாக சந்தேகம் எழுந்தது. நான் காட்டிக் கொள்ளவில்லை. அறைக்குச் சென்று கொஞ்சம் புதுப்பித்துக் கொண்டேன்.

கீழே வந்தபோது குழந்தைகள் வந்திருந்தார்கள். எல்லோருக்கும் நான் கொண்டு வந்திருந்த பரிசுப் பொருட்களை எல்லாம் கொடுத்தேன்.

"இதெல்லாம் எதுக்கு? தம்பி!" என்றார் மாமா. ஆனாலும் அவர்களை நினைவில் வைத்துக் கொண்டு நான் வாங்கி வந்திருக்கிறேன் என்ற மகிழ்ச்சி தெரிந்தது.

அடுத்த நாள் நானே எதிர்பாராத விதமாக மாமா அலுவலகத்துக்குச் சென்று விடுமுறை எடுத்துக் கொண்டு ஒரு கார் ஏற்பாடு செய்து கொண்டு வந்தார். அந்த ஊரில் அக்கம், பக்கம் சிறப்பான இடங்களுக்கெல்லாம் என்னை அழைத்துச் சென்றார். அக்காவும், குழந்தைகளும் வந்தார்கள். பொழுது சந்தோஷமாய்க் கழிந்து கொண்டிருந்தது.

இரண்டு நாட்கள் இப்படி கழிந்து, மாமா அன்றைக்கு அலுவலகம் புறப்பட்டார்.

"சாயங்காலம் தயாராயிருங்கள் தம்பி. சினிமாவுக்குப் போலாம்" என்றார்.

"வேண்டாம் மாமா. வீட்டில் குழந்தைகளோட இந்தக் குடும்பச் சூழலில் இருக்கிறது எனக்குப் பிடித்த மான விஷயம்" என்றேன்.

அவர் என்னை விசித்திரமாகப் பார்த்துவிட்டு. "அப்ப சரி, உங்க இஷ்டம்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

அக்கா காலை டிபன், பகல் சாப்பாடு, மாலை டிபன் என்று விருந்தாக விளாசிக் கொண்டிருந்தாள்.

"போதுங்க்கா. என்னை விருந்தாளியாப் பண்ணி ஒதுக்கி வச்சுராத" என்றவுடன்தான் கொஞ்சம் குறைத்துக் கொண்டாள்.

அன்று பிற்பகல் அக்காவின், ஏன் மாமாவின் இன் னொரு பக்கம் கூட வெளியானது. நான் வெளியே சென் றிருக்கிறேன் என்று மாமா நினைத்துக் கொண்டு விட்டார்.

"ஏண்டி, நிர்மலா இன்னிக்கென்னடி, குழம்பா வச்சிருந்தே. அந்தத் தம்பியிருக்குதேன்னு பேசாம வுட்டுட்டேன்."

"இல்லேன்னா என்ன! தட்டைத் தூக்கியடிச் சிருப்பீங்க! அவ்வளவுதானே" என்றாள்.

"பின்ன, அலைஞ்சு, திரிஞ்சு வர்ற மனுஷனுக்கு ஒழுங்கான சோறு கிடைக்கல்லேன்னா கோபம் வராதா! வீட்டில இருக்கற கழுதைக்கு அதுகூட முடியலன்னா, கொழுப்புதானே!" என்றார் மாமா.

நான் அதிர்ந்து போனேன். அக்கா ஒன்றும் பேசா மல் இருக்கிறாளே. எம்.ஏ. படித்த அக்கா. கொஞ்ச நேரம் சத்தம் எதுவும் கேட்கவில்லை. மீண்டும் மாமா வின் குரல் கேட்டது.



"என்ன மகாராணிக்குக் கோபமா? இருக் குண்டீ, இருக்கும்."

"இத பாருங்க. நான் கோபம், ரோஷம் இதெல் லாம் விட்டு ரொம்ப நாளாச்சு. நான் நானாக இருந்ததை யெல்லாம் மறந்தாச்சு. எதையாவது சொன்னால், எம்.ஏ. படிச்ச திமிராடிம்பீங்க. எதுக்கு! நாளைக்கு உங்களுக்குப் புடிச்ச மாதிரி குழம்பு வக்கிறேன், சரிதானே!

"இதை முதலிலேயே சொல்லித் தொலைக்கறதுக் கென்ன" என்று கேட்டுவிட்டு மாமா எழுந்து போகும் சத்தம் கேட்டது.

'நான் நானாக இருந்ததெல்லாம் மறந்தாச்சு.' இந்த வார்த்தைகள் சுகுமாரைத் தாக்கின. எவ்வளவு ஆழமான வேதனை அந்த வார்த்தைகளைக் குளிப் பாட்டியிருந்தது.

அன்று மாலை, "அக்கா! அக்கா!" என்று அழைத்துக் கொண்டு போனேன். காணவில்லை. பின் கட்டுப் பக்கம் போனேன். அக்கா ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். அக்கா இதெல்லாம் படிக்கிறாளா என்ன!

புருஷனிடம் 'உனக்குப் பிடித்த குழம்பா வச்சுத் தரேன்' என்று சமரசம் பேசுகிற அக்கா! பதவிசாய், சம்பிரதாயங்களை மீறாமல் விட்டுக் காரியங்களைக் கவனிக்கும் அக்கா.

என்னைப் பார்த்ததும் "வா!" என்றாள்.

"உனக்குப் புத்தகம் படிக்க நேரமிருக்கா என்ன?" என்றேன்.

அக்கா மென்மையாகச் சிரித்தாள். "நேரம் பண் ணிக்க வேண்டியதுதான். குழந்தைகள் டியூஷனுக்குப் போயிருக்கிறார்கள். அவர் வர எப்படியும் எட்டு மணி யாகும். இந்த நேரம் என் சொந்த நேரம்" என்றாள்.

"என்னென்ன படிப்பே?" அவள் சொன்ன பெயர்களைக் கேட்டவுடன் எனக்கு ஆச்சரியமாய்ப் போனது. காஃப்காவைக்கூடச் சொன்னாள். நான் கொஞ்ச நேரம் ஒன்றும் பேசவில்லை. பிறகு தயங்கித் தயங்கிக் கேட்டேன்.

"அக்கா, உன் வாழ்க்கைல சந்தோஷமா இருக்கியா?"

"ஏன் அப்படிக் கேட்கறே?"

"இல்லே, உன் ரசனைகள் வேற போலருக்கு. மாமா ரசனைகள் வேற போலருக்கு."

"சுகு, சந்தோஷம்னா என்ன சுகு!" என்றாள்.

நான் ஒன்றும் பேசவில்லை. அக்கா ஒரு நீண்ட பெருமூச்சை விட்டுப் பிறகு பேசினாள்.

"சுகு, வாழ்க்கைங்கறது ஒரு பெரிய விஷயம். எல்லாத்தையும் அறிவுபூர்வமாகவே ஆராய்ஞ்சிட்டிருந்தா அதை வாழவே முடியாது. சுகு, இங்க நிறைய விஷயங்கள் நம்மைக் கட்டிப் போட்டிருக்கு. அம்மா, அப்பா. அவர்களுக்காக ஒரு கல்யாணம். இப்படித்தான் என்னோட கல்யாண வாழ்க்கையும் ஆரம்பிச்சது. அதுக்கப்புறம்தான் எல்லாத்தையும் பத்தி யோசிக்கறவங்களுக்கு வாழ்க்கை கொஞ்சம் கஷ்டமாத்தான் இருக்கும்னு தோணுச்சு. ஆனா, ஒண்ணு சுகு, வாழ்க்கைங்கற சுழல்ல நான் என்னை ஒப்புக் குடுத்துடாம நான் அதைக் கொஞ்சம் கையிலெடுத்துக்கறது, போராடறதுன்னு முடிவு பண்ணினேன். ஆனா, அதை இங்க அவ்வளவு வேகமாப் பண்ணிட முடியாது. மாமாவையே எடுத்துக்கயேன். ரொம்ப முன்கோபம், குழம்புத் தட்டை வீசியடிக்கிற ரகம்தான். ஆனா, பொறுமையா என் கடமைகளை செஞ்சேன். ஆனா, என்னுடைய உரிமைகளை அப்பப்ப எடுத்துக் காட்டினேன்.



இப்ப ஒரு ஐம்பது சதவீதம் மாத்தியிருக்கேன். இன்னும் என்னால முடியும்னு நம்பிக்கையிருக்கு.

அப்புறம் சுகு, எல்லா ரசனைகளும் ஒத்துப் போற மாதிரியே கணவன், மனைவியா அமைய முடியுமா என்ன? அவங்கவங்க அவரவர்களாத்தானே இருக்கணும். ஆனா, நம்ம சமுதாயத்துல பெண் மட்டும் தன்னை முழுமையா மாத்திக்கணும்னு பழக்கி வச்சிருக்காங்க. உங்கப்பாவையும், எங்கப்பாவையும் பார்த்து நம்ம அம்மாக்கள் நடுங்குவாங்க. ஞாபகமிருக்கா? நா என்னோட தலைமுறையிலே என்னோட கருத்துகளைச் சொல்ற அளவுக்காவது வந்திருக்கேன். நான் ஒரு தனி மனுஷிதான் என்று நினைவுபடுத்திக்கிறேன். என்னோட காலத்துல இதுதான் சாத்தியம். ஆனா, என்னோட மகனையும், மகளையும் சமமான உணர்வுகளோட வளர்க்கப் போறேன் பாரு. அது ஒரு பெரிய வளர்ச்சி சுகு."

நான் அவளைத் தீர்க்கமாகப் பார்த்தேன். பின் கேட்டேன்.

"அப்படீன்னா, அக்கா! உன் ஹஸ்பெண்டை நேசிக்கறயா?"

அக்கா சிரித்தள். "குழப்பிக்காதே! சுகு! கண்டிப்பா நேசிக்கறேன். முதல்லயே நான் சொன்னேன் பாரு. வாழ்க்கைங்கறது பெரிய விஷயம்னு. கண்டிப்பா மாமாவை நேசிக்கறேன். அதனாலதான் அவருடைய அடாவடித்தனமான அதிகார உணர்வை ஒரு குழந்தையோட குறும்பா நினைச்சு சிரிச்சு ஒதுக்க என்னாலே முடியுது. ஆனா, நம்ம சமுதாயத்திலே பெண் தன் குடும்பத்துக்காக சுய உணர்வுகளைக்கூட அடகு வைக்கணும்னு ஒரு பழக்கம் பண்ணி வச்சிருக்காங்களே, அதைத்தான் நான் ஏற்க மறுக்கிறேன். எங்களோட இந்தத் தலைமுறையிலே எங்களுடைய சுயத்தை எடுத்துக்

காட்டறோம்னு வச்சுக்கயேன். ஆனா, அடுத்த தலைமுறை சுயத்தை நிலைநிறுத்தும்னு நம்பிக்கை எனக்கு இருக்கு. இதை நான் குடும்பத்துல இருந்தே செய்வேன். அடுத்த தலைமுறை குடும்பங்களை உடைக்காம இதைச் சாதிக்கறதுக்குத் தயார் பண்ணணும். ஏன்னா, குடும்பம் கிறது நமது அற்புதமான ஒரு அமைப்பு. என்ன நான் சொல்றது சரிதானே! சுகு! என்ன அப்படிப் பாக்கறே சுகு!"

"அற்புதம்க்கா. இப்பத்தான் பன்னிரண்டு வருஷம் கழிச்சு இந்தியாவுக்கு ஏன் வந்தேன்னு எனக்கே புரியுது!"

"ஏன் வந்தே! சொல்லேன் கேப்போம்."

"ஏன்னா, நம்ம நாட்டுப் பெண்களின் மேல் எனக்கு ஒரு மதிப்பு இருந்திருக்கு. ஆனா, மந்தைகளா இருக்காங்கன்னு ஒரு வருத்தம் இருந்தது."

"இப்ப அது மாறிப் போச்சு. இந்தியப் பெண் சிந்திக்கறாள்னு ஒத்துக்கறே. அதனாலே ஒரு இந்தியப் பெண்ணாப் பார்த்துக் கல்யாணம் பண்ணப் போறே"

"சரிதானே!" நான் சிரித்தேன்.

"ஏன்னா, வாழ்க்கை பற்றி உனக்கும் ஒரு பயமிருக்கு. இந்தியப் பெண்ணுன்னா கைநழுவிப் போக மாட்டாங்கற நிம்மதி இருக்கும். இல்லே!"

சிரித்துக்கொண்டே கேட்டாள். நான் சாட்டையடி பட்டாற்போல் நிமிர்ந்து பார்த்தேன்.

"யெஸ்! பெண் ஒரு தனியாள்தான்னு காட்டிக்கத் தொடங்கிட்டா உங்களுக்குக் கடைசிக் காலத்திலே கால் பிடிக்க, கை பிடிக்க ஆள் இருக்காது இல்லே. அடேயப்பா! என்ன ஒரு பயம்ப்பா! அன்பும் நேசித்தலும்தான் எங்கள் பலம் தம்பி. அதனால, பயப்படாதே என்ன?" என்று மீண்டும் நிம்மிக்கா சிரித்தாள்.

அவள் சிரிப்பு எனக்குள் பெரிதாக ஒலித்தது. இதுநாள் வரை பெண்களைச் சாமர்த்தியமாய் தளைகளுக்குள் பூட்டி வைத்தவர்களைப் பார்த்து சிரித்த சிரிப்பாய், சங்கொலியாய் எனக்குள் அது விசுவரூபமெடுக்க ஆரம்பித்தது.





# 7

## டாக்டர் ஷீலா

ஷீலா அன்றைக்கு விரைவாகவே தயாராக வேண்டியிருந்தது. நிறைய விஷயங்களைப் பார்க்க வேண்டியிருந்தது. அன்றைக்கு ஒரு கருத்தரங்கு இருந்தது. துறையின் மிக முக்கியமான அறிஞர்களெல்லாம் வர இருக்கிறார்கள். நிறைய நல்ல தலைப்புகளில் அவர்கள் கட்டுரைகள் படைக்க இருக்கிறார்கள்.

ஷீலா ஒரு கல்லூரியில் பேராசிரியையாக இருந்தார். மகளிரியல் துறை. அந்தக் கல்லூரியும் பல்வேறு சாதனைகளுக்காகப் புகழ் பெற்றது. அவரை எல்லாரும் மதித்தார்கள். சிறந்த பெண்ணியலாளராக, இலக்கியவாதியாக அறியப்பட்டவர். மனித வளம் பற்றிய அவரது கட்டுரைகள் நாடறிந்தவை.

ஷீலா தன்னுடைய கடிகாரத்தைப் பார்த்தார். ஏழு மணியாகியிருந்தது. எட்டு மணிக்காவது தன்னுடைய கல்லூரி வளாகத்தில் இருக்க வேண்டும். ஒருவிதத் தவிப்புடன் கணவரைப் பார்த்தார். "எனக்கு இன்னிக்குக் கார் வேணும்" என்றார்.

கணவர் அலட்டிக் கொள்ளாமல் பார்த்தார். ஆனால், எதுவும் சொல்லவில்லை. அவர் ஒருவித கையாலாகாத்தனத்துடன் கணவரைப் பார்த்தார்.

"இத பாருங்க. எனக்கு இன்னிக்கு இன்டர் நேஷனல் லெவல் செமினார் ஒண்ணு இருக்கு."

கணவர் கல்லைப் போல் முகத்தை வைத்துக் கொண்டு தோளைக் குலுக்கிவிட்டு கார் சாவியை டீபாயின் மேல் வைத்துவிட்டுப் போனார்.

குப்பென்று ஒரு மகிழ்ச்சி பொங்கியது ஷீலாவின் மனதுக்குள்ளே. கூடவே ஒரு மனது கேலி செய்தது. 'ஆஹா! ஒரு நாள் கார் கிடைக்கிறது என்ற சின்னச் சின்ன விஷயங்களுக்காக வெல்லாம் இந்தப் பாழும் மனது குதிபோடுகிறதே' என்று தன் மீதே கோபம் வந்தது.

மறுபடியும் கடிகாரத்தைப் பார்த்தார். அவர் வசம் இன்னும் அரை மணி நேரம்தான் இருந்தது. வீட்டு வேலைக்காரப் பெண்மணியிடம் சொல்ல வேண்டியதை சொல்லி விட்டு அவசரமாக புடவைக்கு மாறிக் கொள்ள அறை நோக்கி ஓடினார்.

கருத்தரங்கம் பிரார்த்தனைப் பாடலுடன் ஆரம் பித்தது.

டாக்டர் ஷீலா நிறைய கேள்விகளை சிந்தனைக்கு வைத்தார். அங்கே கூடியிருந்த கல்வியாளர்களுக்கு சிந்தனைக்கு தீனி கொடுத்தார். அவருடைய உரை மிகச் சிறப்பாக எல்லார் மனதிலும் பதிகிற விதமாக இருந்தது.

"பெண்கள் உண்மையாகவே விடுதலையடைந்து விட்டார்களா?"

வேலை... திருமணத்திற்கு அது ஒரு கூடுதலான தகுதியா? இல்லை திருமணத்திற்குப் பிறகு அது ஒரு கூடுதல் பளுவா?

பெண்கள்! அந்தக் காலத்திலும், அவர்கள் கல்வி யறிவு பெறாத காலத்திலும், விவசாயியின் மனைவியாக பொருளாதாரக் கடமைகளைச் செய்யவில்லையா?"



கல்வியினால் பெண்களின் மனப்போக்கில் மாறு தல்கள் ஏற்படுகின்றனவா? குடும்பம் எடுக்கும் முடிவு களில் அவளது கருத்துகளுக்கு மதிப்பிருக்கிறதா?

ஓ! எத்தனையெத்தனை கேள்விகள்! கருத்துப் பரி மாறல்கள்! விவாதங்கள்! ஆக மொத்தம் கருத்தரங்கம் வெகு உயிரோட்டமாக இருந்தது.

வ்ருகை தந்தவர்கள் எல்லோரும் வெகுவாகப் பாராட்டினார்கள், அவ்ருடைய முயற்சிகளை, அவ ரது அறிவின் ஆழத்தை, அவரது நிர்வாகத்திறனை!

மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தார். அந்த மயக்கத் தில் அவர் ஒரு காரியம் செய்தார். கல்லூரி அறக் கட்டளைக்கு ஒரு தொகையை ஒதுக்குவதாகவும் ஆராய்ச்சி மாணவிகள் யாராவது ஒருவருக்கு பணம் உதவி செய்யும் வகையில் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாமெனவும் அறிவித்தார்.

அந்த அறிஞர் வட்டம் ஆரவாரித்து மகிழ்ந்தது. நாள் வெற்றிகரமாகப் போன மகிழ்ச்சியில் நிகழ்வு நிறைவுற்றதற்குப் பிறகும் எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்திவிட்டு வந்து சேர மணி எட்டாகி விட்டது.

மகள் சாரா முன்பாகவே வந்துவிட்டதால் அவள் இரவு உணவுக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தாள். அப்பாடா என்றிருந்தது. மகளிடம் எல்லாவற்றையும் பகிர்ந்துகொண்டார்.

கணவர் வந்ததும் அதே மகிழ்வுடன் எல்லா வற்றையும் பகிர்ந்துகொண்டார். மகிழ்வு நிறையத்தான் இருந்தது, கணவர் அந்தக் கேள்வியைக் கேட்கும் வரை. அந்தக் கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாமல் விழிக் கும் வரை. பொட்டில் அறைந்தாற்போல் உணரும் வரை.

வார்த்தைகள் தடிப்பதையும், குரலும் உயர்ந்து கொண்டே போவதையும் அவர்களால் தவிர்க்கவே முடியவில்லை.

சாராவுக்கு அவள் விரும்பாதபோதும் அந்த வார்த்தைகள் காதில் விழுவதைத் தவிர்க்க முடியவில்லை. சோஃபாவில் ஆணியடித்தாற்போல் அமர்ந்திருந்தாள்.

"அப்படியெல்லாம் அனவுன்ஸ் பண்ணிட்டு வர உனக்கு யார் பர்மிஷன் குடுத்தா?"

"ஏன்? அப்படியொரு அனவுன்ஸ்மெண்ட் பண்றதுக்கு எனக்கு உரிமையில்லையா? நான் சம்பாதிக்கறதில்லையா?"

"ஸோ, நீ சம்பாதிக்கறே? அதனால குடும்பத்தைக் கலந்துக்காம நீ என்ன அறிவிப்பு வேண்ணா செஞ்சுட்டு வருவே! அப்படித்தானே?"

"நான் அப்படிச் சொல்லலே! எப்பவாவது ஒரு முறைகூட இந்த மாதிரி முடிவுகள் எடுக்க எனக்கு அதிகாரம் இல்லையான்னு கேக்கறேன்?"

"பாரு ஷீலா! குடும்பத் தேவைகளுக்காகத்தான் நீ வேலைக்குப் போறே. சும்மா பந்தா விடறதுக்காக இல்லே!"

"அப்ப அது உங்களுக்குப் பொருந்தாதா? நீங்க மட்டும் உங்களோட கஸின் வீட்டுக் கல்யாணத்துக்கு இருபத்தஞ்சாயிரம் கொடுக்கலியா?"

"ஓ! நீ அதுக்குப் பழிவாங்கத்தான் இந்த வேலை செஞ்சியா? என்னோட ஏழைச் சொந்தக்காரங்களுக்கு உதவி செய்யறதுக்குக்கூட குடும்பத் தலைவன்கற முறையில எனக்கு ரைட் இல்லையா? ஷீலா! ஒரு விஷயம் நான் கிளியராச் சொல்றேன், தெரிஞ்சுக்க. இந்த பெண் விடுதலை, சமத்துவம்கிற மாதிரி ரப்பிஷ் எல்லாம் பேசறதுக்கு நான் அனுமதிச்சிருக்கேன் ஏன் தெரியுமா? அதெல்லாம் உன்னோட வேலைக்குத் தேவையா இருக்குங்கறதுதான். விடுதலைங்கறதுக்கு அர்த்தம் வீறாப்பு இல்லே! புரியுதா? இனிமே இந்த மாதிரி அதிகப் பிரசங்கத்தையெல்லாம் நான் ஒத்துக்க மாட்டேன். இல்லே. சொல்லு! பேசாம டைவர்ஸுக்கு போயிடலாம். டு யூ கெட் மை பாயிண்ட்?"



தனது உச்சஸ்தாயியில் சத்தம் போடுகிற கணவனைத் தாங்கொணாத வேதனையுடன் பார்த்தார் டாக்டர் ஷீலா.

சட்டென்று ஷீலாவுக்குத் தொடர்ந்து வாதாடிக் கொண்டிருப்பதில் ஒரு பயனும் இல்லையென்பது புரிந்தது. வாதப் பிரதிவாதங்கள் எந்த உறுதியான முடிவுகளுக்குள்ளும் கொண்டு சேர்ப்பதில்லையென்பது அனுபவத்தில் கண்ட பாடம். முணுமுணுப்பாகச் சொன்னார்.

"சரி. புரிஞ்சுது. இனிமே உங்களைக் கேட்காம எதுவும் சொல்லலை." ஆனால், கோபத்தைக் காட்டும் விதமாக கதவை மட்டும் அறைந்து சாத்திவிட்டுச் சென்றார்.

மகேந்திரன் தனக்குள் சிரித்துக் கொண்டார். அவருக்குத் தெரியும், தனது வார்த்தைகள் அவரைத் தாக்கியிருக்கும் என்று. டைவர்ஸ் என்ற வார்த்தை எப்போதும் அவரைச் சுருண்டுவிடச் செய்கின்றது என்பதும், அது சரியான விதத்தில் அவரைத் தாக்கியிருக்கும் என்பதும் தெரியும். வெற்றிப் புன்னகையொன்று மலர்ந்தது.

சாரா வேகமாக எழுந்து நின்று விட்டாள். தாய் அறையை விட்டு வெளியே வருவதற்குள் தனது அறைக்கு நகர்ந்து விட்டாள்.

அப்பா வேகமாகப் போய் காரெடுப்பதை சாரா தனது அறை ஜன்னலிலிருந்து பார்த்தாள். தனக்குள் கோபமும் கசப்புமுமாக முணுமுணுத்துக் கொண்டாள். அப்பா கோபத்தை சாக்காக வைத்துக் கொண்டு அம்மா அறிவித்துவிட்டு வந்த தொகைக்கு மேலாக செலவு செய்துவிட்டு வருவார் என்பது அவளுக்குத் தெரியும்.

சாரா சற்று நேரம் கோபத்துடன் மேலும் கீழும் நடந்தாள். பிறகு அம்மாவின் அறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

ஷீலா ஏதோ ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு படிக்கிறாற்போல் அமர்ந்திருந்தார். கண்களில் இருந்து கண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது. எவ்வளவு அருமையான நாள்! எப்படி முடிந்து விட்டது? எப்போதும் அவர் தனது வெற்றிகளைப் பகிர்ந்துகொள்ளும்போது கணவனிடம் ஒரு வெடிப்புத் தென்படுகிறதே. அது ஏன் என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

சாரா எட்டிப் பார்த்தாள். ஷீலா கஷ்டப்பட்டு ஒரு புன்முறுவலை உதடுகளில் பூசிக் கொண்டார்.

"என்னடா?" என்றார்.

"ஏம்மா! எதுக்கு எப்பப் பார் இந்த மாதிரி அவமானமெல்லாம் சகிச்சுக்கறே? ஏன் எதிர்ப்புக் காட்ட மாட்டேங்கறே? பெண் விடுதலையைப் பத்திப் பேசறே! ஆனா, அடிமைத்தனமா நடந்துக்கறே! இது ஹிப்பாக்ரஸியில்லையா?"



மகளின் கோபம் அவரை சற்றே அதிர்ச்சியடையச் செய்தது. மெதுவாக தன்னை மீட்டுக் கொண்டார்.

"உட்காரு! சாரா! உங்கப்பா கோபக்காரரே தவிர அவர் மனசுல விஷம் கிடையாது. அவருக்கு என்னோட சாதனைகளைச் சகிச்சுக்கற மனசு இல்லே! வெறும் ஈகோ! நாம அவரு சைகாலஜி புரிஞ்சுகிட்டுப் போக வேண்டியதுதான்."

"அம்மா. நீ இப்படியெல்லாம் விளக்கம் சொல்லி உன்னையே ஏமாத்திக்கறே! அப்பா இப்ப எவ்வளவு பணத்தை வேஸ்ட் பண்ணிட்டு வருவாரு தெரியுமா? அது மட்டும் குடும்பத்தோட பணமில்லையா?"

"நீ ஒட்டுக் கேட்டியாடீ?"

"என்னத்துக்கு ஒட்டுக் கேட்கறது? நீங்கதான் ஊருக்கே கேட்கற மாதிரிதானே பேசிக்கிட்டிருந்தீங்க? பேசாம டைவர்ஸுக்குப் போம்மா? நான் உன் கூட வர்றேன்."

"நீ சொல்ற மாதிரியெல்லாம் செய்ய முடியாதுடி!"

"ஏன்?"

"அதுக்கு நிறைய காரணம் இருக்கு."

"அந்த அழகான காரணங்களை எனக்கும் சொல்றது?"

"முதல் காரணம், நீ பொண்ணு. மகன் இல்லே! உன் கல்யாணம்கறப்ப அப்பா நிக்கணும்டி... அப்புறம், பொதுவா ஒரு நம்பிக்கை. இந்த விடுதலை பேசற பொண்கள் எல்லாம் ஆ ஊன்னா... டைவர்ஸ் பேசறாங்க. பொறுப்பில்லாம நடந்துக்கறாங்கன்னு எல்லாரும் நினைக்கறாங்க. அப்படிப் பேச்சு வாங்க நான் விரும்பலே!"

சாரா அம்மாவை வெறித்துப் பார்த்தாள்.

"எல்லாத்துக்கும் மேல இன்னொரு காரணம் இருக்கு. பெண்கள் வயசான காலத்துல ஆண்கள் இல்லாம காலம் கழிச்சுடுவாங்க. ஆனா, ஆண்கள்ால இருக்க முடியாதுடி. இது எனக்கு மட்டுமில்லடி. உங்கப்பாவுக்கும் தெரியும். அந்த உண்மையை ஜீரணிச்சுக்க முடியாமத்தான் இப்படிக் கத்தி சமாதானம் பண்ணிக்கறது.

அம்மாவின் முகத்தில் பூத்த சிரிப்பின் ஒளியைப் பார்த்த சாரா முணுமுணுத்துக்கொண்டே நகர்ந்தாள்.

குடும்பம் என்பது சில நேரங்களில் காயங்கள். அடக்குமுறைகள் இவை மேலும்கூட நிரந்தரமாக எழுந்து நிற்கிறது மகளே என்று சொல்லிக் கொண்டார் ஷீலா.

தனது துறை சார்ந்த வெற்றிகள் வரமா, சாபமா என்று அவருக்குப் புரியவில்லை. ஆனால், ஒன்று புரிந்தது. அடுத்த கருத்தரங்கத்துக்கு ஒரு அருமையான தலைப்புக் கிடைத்துவிட்டது என்பதுதான் அது.



# 8

## அம்மா அப்படி என்னதான் செய்தாள்!

செல்போன் அலறிக்கொண்டேயிருந்தது.

கண்ணன் அவசரமாகக் குளித்து முடித்துவிட்டு ஓடி வந்தான்.

"தொல்லை தாங்க மாட்டேங்குது" என்று மனது சலித்துக் கொண்டது.



"ஏண்டா... கண்ணா! எம்புட்டு நேரமாக் கூப்பிடறேன்" என்றது குரல்.

"அட...! அத்தை!" என்று மகிழ்ந்து போனவனின் மகிழ்ச்சி எல்லாம் அடுத்த நொடியில் கரைந்து போனது.

"சொல்லு அத்தே!" என்றான்.

"ஏண்டா! என்னடா இது கூத்து! உங்கம்மா ஏண்டா இப்படிச் செய்யறா?" என்று புகார் சொன்னது அத்தையின் குரல்.

"ஏன் அத்தே! என்ன ஆச்சு?"

"என்ன ஆச்சா? ஒரு வருஷத்துக்கு முன்னால அப்படி ஒரு கலாட்டா செஞ்சா. இப்ப இப்படிப் பண்றா? போறவன் வரவனெல்லாம் கேள்வி கேக்கறாங்க. யாரு பதில் சொல்றதுங்கறேன்?" என்று சொன்னாள் அத்தை.

கண்ணன் என்கிற வேல்முருகன் கொஞ்ச நேரம் திகைத்துப் போனான். பிறகு மறுபடியும் கேட்டான்.

"அப்படி என்னத்தை செஞ்சா எங்கம்மா?"

"ஏண்டா! பொச கெட்டவனே! என்னடா இப்படிக் கேக்கிறே!" என்றவள் அம்மா, செய்த காரியத்தைப் பற்றிச் சொன்னாள்.

கண்ணனுக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை. "சரியத்தே! நான் என்னான்னு கேட்கிறேன்" என்றான்.

"அடேய்! சும்மா கேட்கறது இல்லே! நல்லா நாலு கட்டையாலே போடு" என்று ஆலோசனை கொடுத்தாள்.

சரி, விஷயத்தை முடித்துவிட்டோம் என்று தான் கண்ணன் எண்ணிக் கொண்டான். ஆனால், அலுவலகம் கிளம்புவதற்குள்ளாக ஏழெட்டு பேரிடம்

இருந்து இதே விஷயம் குறித்து தொலைபேசித் தொடர்பு.

ஒன்றுவிட்ட அத்தை, பெரியம்மா ஒன்றுவிட்ட அக்கா என்று நேரடிச் சொந்தங்கள், சுற்றி வளைத்த சொந்தங்கள் என்று அவனுக்கு சலித்தே போனது.

திண்டுக்கல், பழனி, மதுரை என்று நகரங்களின் வளர்ச்சி என்று வந்தாலும் கிராமங்களை எட்ட வில்லையோ என்று அவனுக்குள் சிந்தனை ஓடியது.

மதுரையிலிருந்து பழனி போகிற தெருவில் கிளைப் பாதை ஒன்றில் ஏழெட்டு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிற குக்கிராமம் அது. மொத்தமாகவே ஒரு நூறு நூற்றைம்பது வீடுகள்தான் இருக்கும். அதில் காரை வீடுகள் என்று பார்த்தால் ஒன்றோ இரண்டோதான் இருக்கும்.

கண்ணனின் அம்மா இளம்வயதிலேயே விதவை யானவள். கண்ணன் தன் தந்தையைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறானே ஒழிய, பார்த்த நினைவே இல்லை. அவன் ஆறு மாதக் குழந்தையாக இருந்தபோது இறந்து போய் விட்டாராம்.

காசநோய் என்றார்கள். இப்போது போல் அப் போது மருத்துவ வசதி இருந்திருந்தால் காப்பாற்றி இருக்கலாமோ என்னவோ? ஒரு சிறிய ஓட்டு வீடு பக்கத்திலேயே அவரது சகோதரரின் ஓட்டு வீடு.

ஒரே ஒரு முறை "இதுதான்டா அப்பா...!" என்று ஒரு சிறிய போட்டோவைக் காட்டினாள். பாஸ் போர்ட் சைஸ் போட்டோ! முகம் தெளிவாகத் தெரிய வில்லை. அது பற்றி அவன் கவலைப்படவும் இல்லை.

நல்ல பாரம்பரியத்தில் வந்தவர்கள் என்றபோதும் இரண்டு மூன்று தலைமுறைகளாகவே குடும்பம் வறுமை யில் இருந்தது.



அப்பாவும், பெரியப்பாவும் கூலி வேலைக்குப் போனார்கள். கிடைக்கிற கூலி அன்றாடப் பிழைப்புக்கே சரியாக இருந்தது.

எப்போதாவது கொஞ்சம் மது அருந்துவான் மருதன். கண்ணனின் அம்மா தெய்வானை பெரிய சுகத்தையெல்லாம் ஒன்றும் அனுபவிக்கவில்லை. தன் னுடைய கனவுகளையும், ஆசைகளையும் மகன் மீதே சுமத்தி ஒரு வாழ்க்கை வாழ்ந்தாள்.

கண்ணனுக்கு சில வேளைகளில் தோன்றும். "அம்மா பாவம்! என்ன வாழ்க்கை வாழ்ந்தாள்! முப்பது வயதுக்குள்ளாக கணவனை இழந்தாள். இந்தக் குக் கிராமமே உலகமாக வாழ்ந்தாள். படிப்பறிவில்லாதவள்.

வாழ்க்கை குறித்த எந்த யோசனையும் இல்லா தவள். காட்டு வேலைக்குப் போவாள். மற்றபடி நேரம் கிடைத்தால் கருவேல முள்ளு வெட்டிக் கொண்டு வருவாள். மரம் வெட்டிக் கொண்டு வந்து போட்டு அடுப்பெரிப்பாள்.

மொத்தமாகவே அந்த வீட்டில் இருந்த பாத்தி ரங்கள் இரண்டு மூன்று அலுமினியக் குண்டாக்கள். இரண்டு மூன்று சின்ன டம்ளர்கள். அதுவும்கூட அலுமினியத்தில்தான் வைத்துக் கொண்டிருந்தாள். சமீபத்தில்தான் சில்வர் டம்ளர்கள் வாங்கினார்கள். கண்ணனுக்கு ஒரு எவர்சில்வர் தட்டு. தெய்வானைக்கு ஒரு அலுமினியத் தட்டு, சாப்பிடுவதற்கு..சின்னச் சின்ன தாக ரெண்டு டிரங்குப் பெட்டி! அவ்வளவே!

காட்டு வேலைக்குப் போனால் நாற்பது ரூபாய் கூலி! அதை வைத்துக் குடும்பம் நடத்துவாள்.

வறுமை தனது முழு ஆதிக்கத்தையும் செலுத்திய வீடு.

கண்ணன் படிப்பில் கெட்டி. பத்தாம் வகுப்பில் கணக்கில் நூற்றுக்கு நூறு எடுத்தான். அவன் படித்த

பள்ளித் தலைமையாசிரியருக்கு அவன் மேல் அன்பு.

எட்டாம் வகுப்பு படிக்கும்போது மாற்றலாகி அந்தப்பள்ளிக் கூடத்திற்கு வந்தார்.

கண்ணன் வாங்கிய மதிப்பெண்களைப் பார்த்து விட்டு அவனை மிகவும் பாராட்டினார். பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி என்று எல்லாப் போட்டிகளிலும் அவன் பரிசுகள் வாங்கினதையும், வாலிபால் விளையாட்டில் துறுதுறுவென்றிருப்பதையும் பார்த்துவிட்டு கிட்டத்தட்ட அவனை தத்தெடுத்துக் கொண்டார்.

ஒன்பதாம் வகுப்பில் போனவுடனே ஒரு நாள் அவர் ஸ்கூட்டரில் வரும்போது கண்ணன் அந்த ஒத்தையடிப் பாதையில் செருப்புக்கூட இல்லாமல் நடந்து வருவதைப் பார்த்தார். மனம் இளகிப் போனது.

கடவுள் ஏன் இப்படியெல்லாம் மனிதர்களிடையே பாரபட்சம் காட்டுகிறார் என்று வருந்திக் கொண்டார். "டேய் பயலே! ஏறுடா!" என்று ஸ்கூட்டரில் ஏற்றிக் கொண்டார்.

கண்ணன் வெட்கத்தோடு அமர்ந்து கொண்டான். அன்று மாலை மறுபடியும் புறப்படும்போது அழைத்தார்.

"டேய்! என் கூட வா! ஒரு இடத்துக்கு கூட்டிட்டுப் போறேன்" என்று தன் வீட்டுக்கு அழைத்துப் போனார்.

மனைவியிடம் சொன்னார். மனைவியின் மனமும் உருகிப் போனது.

பின்கட்டுக்குப் போய் அங்கேயிருந்த பழைய சைக்கிள் ஒன்றை எடுத்து வந்தார்.

"இந்தா! நல்லா ஓடற கண்டிஷன்ல இருக்கு! ஓட்டிக்கோ! ஆனா, படிப்பு முடிச்சுப் போகும்போது திருப்பிக் குடுத்துரணும்..." என்றார்.



தனது மகன்களின் ஒருவனது செருப்பு ஜோடி ஒன்றைக் கொடுத்தார்.

"போட்டுக்கடா! பயலே! எது வேணும்னாலும் என்னைக் கேளு!" என்றார்.

அப்படி சாமிநாதன் ஹெட்மாஸ்டரின் கருணையால் பன்னிரண்டாம் வகுப்பு வரை நிம்மதியாகப் படித்தான்.

இடையில் ஒரு நாள்!

சாமிநாதன் சாரின் மனைவி ஒருமுறை, "கண்ணா! உங்கம்மாவை அழைச்சுட்டு வாடா!" என்று சொன்னதால் அழைத்துக் கொண்டு போனான்.

தெய்வானையைப் பார்த்து ஹெட்மாஸ்டரின் மனைவி உருகிப் போனாள்.

"சின்ன வயது! வெள்ளைப் புடவை, வெள்ளை ஜாக்கெட், கழுத்து, காது எல்லாமே மூளியாக இருந்தது. ஆனால், முகத்தில் மட்டும் கள்ளமில்லாத ஒரு களை.

"என்ன பாவம் செஞ்சான்னு கடவுள் இப்படிக் கொடுமை பண்ணியிருக்கார்" என்று வருந்திப் பேசினாள் சரஸ்வதி. அவர் சொல்லிக் கொண்டிருந்ததை முதன் முதலாகக் கண்ணன் கேட்டான்.

அப்போதுதான் முதன்முதலாக அம்மாவைப் பற்றி அவன் யோசிக்கவே செய்தான்.

'ஆமாம்! அம்மா... பாவம்... இல்லே! அவளுக்கென்று என்ன சந்தோஷம்!' என்று தோன்றியது. இதுவரைக்கும் அம்மாவைப் பற்றி நாம் யோசிக்கவே இல்லையே என்று குற்ற மனப்பான்மையும் தோன்றியது.

கவனித்துப் பார்த்தான்!

அவளுக்கென்று என்ன சந்தோஷம் இருந்தது? சமுதாயத்துக்கு பயந்து, பயந்து வாழ்கிறாள்.

அப்போது நினைத்துக் கொண்டான். தான் முன்னேறியவுடனே அம்மாவை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

பள்ளிப் படிப்பு முடித்தவுடனே 'ஈரல் கோட்டா'வில் அரசுப் பொறியியல் கல்லூரியில் இடம் கிடைத்தது. கோயமுத்தூர் நகரத்தில் கிடைத்த அருமையான நண்பர்களின் உதவியால் நன்றாகவே படித்து முடித்தான்.

கல்லூரியை விட்டு வெளியே வரும்போதே கையில் வேலையோடு வந்தான். அதனால் அப்போதிருந்தே பணக் கஷ்டம் இருக்கவில்லை.

அம்மாவை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தான். அப்போதுதான் பிரச்சினைகள் கிளம்பியன.

இதற்குள்ளாக டெல்லியில் ஒரு கம்பெனி, ஹைதராபாத்தில் ஒரு கம்பெனி என்று மாறி தற்போது சென்னையில் இருந்தான்.

அம்மாவை அழைத்துக் கொண்டு போய் உடன் வைத்துக் கொண்டான்.

வெளியுலகம் பார்த்து தெய்வானை பிரமித்துப் போனாள். இளம்வயதுப் பெண்கள், நடுத்தர பெண்கள், ஏன் முதிய வயதுப் பெண்கள்கூட கௌரவமாக தற்காப்புடன் வாழ்வதைப் பார்த்து வியந்து போனாள்.

முதல் முதலாக ஒரு ஆசை ஏற்பட்டது.

"ஏண்டா! கண்ணா! அந்த எதுத்தவூட்டம்மா கட்டிக்கிட்டிருக்கிற சேலை ரொம்ப நல்லா இருக்கில்லே?" என்றாள்.

கண்ணன் ஜன்னல் வழியாகப் பார்த்தான். கட்டம் போட்ட புடவை! அழகாகத்தான் இருந்தது.



"ஏம்மா... நீயும் கலர்ப்புடவை கட்டறியா? உனக்கும் நல்லா இருக்கும்" என்றான். அம்மா அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்.

"டேய்! என்ன சொல்றே?"

"என்ன சொன்னேன்? கலர்ப்புடவை கட்டினா என்ன இப்ப? கட்டு..." என்றான்.

"அப்படியா சொல்றே? அம்மாவின் குரலில் சுருதி குறைந்தது. மெதுவான குரலில் சொன்னாள்.

"உனக்கென்னடா சொல்லிப் போடுவே! யாராவது ஏதாவது சொன்னா என்ன செய்ய?"

"என்ன சொல்லுவாக? சொன்னவுக யாரு இத்தனை நாள் சோறு போட்டாக?" என்றான் கண்ணன்.

அழைத்துக் கொண்டு போனான். ஜவுளிக்கடையில் ரொம்ப ஆடம்பரமாக இல்லாமல் கண்ணுக்குக் குளிர்ச்சியான நிறங்களில் ஒரு டஜன் புடவை எடுத்துக் கொடுத்தான்.

அம்மாவின் கண்களில் உற்சாகம் தெரிந்தபோதும் எங்கே மகன் தன்னை மட்டமாக நினைத்துவிடுவானோ என்று தனது உற்சாகத்தை அடக்கியே வாசிப்பது தெரிந்தது.

வீட்டுக்கு வந்த பிறகும் அன்றைக்கெல்லாம் தெய்வானை சளசளவென்று பேசிக்கொண்டிருந்தாள். இரண்டு நாட்கள் போயிருக்கும்.

அலுவலகத்திற்கு புறப்பட்ட கண்ணன் ஏதோ ஃபைலை எடுப்பதற்கு உள்ளே வந்தவன், அம்மா பீரோவின் கண்ணாடி முன்னால் நின்று திரும்பித் திரும்பி தன்னை பார்த்துக் கொள்வதைக் கண்டான். தொல்லை தராமல் ஃபைலை எடுக்காமலேகூட வந்துவிட்டான்.

அம்மா தனக்காக இழந்த சந்தோஷங்கள் அவனுக்கும் புரிந்தது.

அலுவலகத்தில் யோசனையோடே இருந்தான். யோகேஷ் வந்தவன் முகத்தில் கலவரமாகவே இருந்தான்.

"என்னடா ஆச்சு?" என்று கேட்டான்.

"வீட்டுப் பிராப்ளம்டா" என்றான்.

"என்ன பிராப்ளம்?"

"என் சிஸ்டர் டிவோர்ஸ் அப்ளை பண்ணியிருக்கா" என்றான்.

"ஏ! ஏன்? உங்க அத்தான் ரொம்பக் கொடுமையோ?"

"நீ வேறடா! இவ அவனைக் கொடுமை செஞ்சாப் போதாதா? ரொம்ப சுதந்திரம்னு இருந்தாள். அவன் கிட்ட மல்லுக்கு நிப்பா... ஒரு குழந்தை வேற இருக்கு. அதைப் பத்தியே யோசிக்க மாட்டேங்கிறா" என்று வருத்தப்பட்டான்.

யோகேஷ் அந்தப்புறம் போனபின் மறுபடியும் கண்ணன் சிந்தனையில் ஆழ்ந்தான். அடுத்த நாள் அம்மாவிடம் கேட்டான்.

"அம்மா... நகை ஏதாவது வாங்கித் தரட்டுமா?" என்று.

"ஐயோ...! நீ சும்மா இருடா! இதுவே எனக்கு பயமாயிருக்கு. ஊருக்குப் போறப்ப வெள்ளைப் புடவை கட்டிக்கணும்" என்றாள்.

ஊருக்குப் போனதும் அம்மாவின் பெட்டியில் இருக்கற கலர்ப்புடவைகளைப் பார்த்தே ஊரில் கலவரம் நடக்காத குறையாகப் போய்விட்டது. ஆனாலும் அவன் தந்த துணிச்சலின் பேரில் அம்மா கலர்ப்புடவை கட்ட ஆரம்பித்தாள்.



ஒரு பிரளயம் எழுந்து அடங்கியது.

இப்போது அடுத்த கட்டம்!

கண்ணன் செல்போனை ஆஃப் செய்து விட்டான். எப்படியும் ஊருக்குப் போனால் இதைப் பற்றிய பேச்சு வரும் என்று அவனுக்குத் தெரியும்.

எதிர்பார்த்துக் கொண்டுதான் புறப்பட்டார்கள்.

**கா**லையில் ஆத்தங்கரைக்கு ஒரு நாள் போய் விட்டு வரும்போது பங்காளி கூட்டம் அவனைப் பார்த்து விட்டது.

"ஏலேய் கண்ணா! இங்கிட்டு வாடா!" என்றான் அதில் ஒருவன்.

"டேய்! உங்கம்மா... என்ன இப்படியெல்லாம் ஆரம்பிச்சுட்டா! சொல்லிவை இதெல்லாம் நல்லா இல்லே!"

கண்ணன் மௌனமாக நின்றான். நைஸாக நகர்ந்தும் விட்டான்.

மறுபடியும் இரண்டு நாட்கள் போயிருக்கும். திபுதிபுவென்று பத்துப் பேருக்கு மேல் உறவினர்கள் அவர்கள் வீட்டுக்கு வந்தார்கள்.

அம்மாவிடம் சொல்லி தேநீர் கொடுத்து உபசரித்தான்.

"டேய்! கண்ணா... உன்கிட்டப் பேசணும்டா!"

கண்ணனுக்குத் தெரிந்தது. 'இந்தா... அந்தா' என்று தள்ளிப் போட்ட சூறாவளி வந்துவிட்டது என்று.

"சொல்லுங்கண்ணே!" என்றான்.

"டேய்! உங்கம்மா... கலர்ப்புடவை கட்டினா... சரி... தொலைஞ்சு போகட்டும்னு விட்டோம். இப்ப என்னடா இப்படிச் செய்யறீங்க?" என்றான்.

"ஏன்... என்ன செஞ்சா?" என்றான்.

"பாரு... நீயே... பாரு!" என்று அம்மாவை நோக்கிக் கையைக் காட்டினார்கள். அப்போதுதான் கண்ணன் வெடித்தான்.

"மேக்காலத் தோட்டத்து மாமோய்! பெரியப்பா! அப்பச்சி... எல்லாரும் ஒண்ணா எங்க வூட்டுக்கு வந்திருக்கீக! ரொம்ப சந்தோஷம். எங்கம்மா கலர்ப்புடவை கட்டினாப்ல. அதுக்கு என்ன இப்ப? நான்தான் வாங்கிக் குடுத்தேன். இருபது வயசுல புருஷனைத் தூக்கிக் குடுத்துட்டு இது நாள் வரைக்கும் மூளியா களத்து மேட்டுக்கும், காட்டுக்கும் வேலைக்கும் போச்சே! அப்ப யாராவது உங்க வூட்ல கஞ்சி காச்சினீகளா? வயித்துக்குச் சாப்பீட்டீகளானு இது நாள் வரைக்கும் கேட்டிருக்கீகளா? இல்லே. ஆனா, இன்னிக்கு இத்தனை பேரும் திரண்டு வந்திருக்கீகளே!" என்றான்.

எல்லாருக்கும் முகம் விழுந்து விட்டது.

"மேலுக்குப் போட்டுக்கச் சட்டையில்லாம காலுக்கு செருப்பில்லாம நான் பள்ளிக்கூடம் போயிக்கிட்டுக் கெடந்தேன். எங்கிட்டோ இருந்து வந்த ஒரு ஹெட்மாஸ்டர் செருப்பு வாங்கிக் குடுத்தாரு. ஒரு பழைய வண்டி வாங்கிக் குடுத்தாரு. நீங்க என்னா செஞ்சீக?!" என்றான்.

எல்லாருமாக அமைதி காத்தார்கள். ஒரே ஒரு பெரியவர் மட்டும்!

"இத பாருடா! கஷ்டம் எல்லாத்துக்கும் வரதுதான். எல்லாரும்தான் கஞ்சிக்கில்லாமக் கெடந்தோம். அப்புறம் எப்படி உதவி செய்வது?" என்றார்.

"அப்ப... மேட்டரை விட்டுப்புட்டு ஜோலியப் பாப்பீகளா"



"ஏலேய்! நீ பேசறது நல்லால்லே! சாதி சனத்தோட ஒத்துப்போனாத்தான் நாளைக்கு நல்லது கெட்டது நடக்கும். நாங்கள் ஒதுக்கிப் போடுவோம்!" என்றார்கள்.

"தாராளமா செய்ங்க! எங்களை ஒதுக்கினா உங்களுக்குத்தான் கஷ்டம். நான் ஊருக்குள்ள ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்கலாம்னு யோசிச்சுக்கிட்டிருக்கேன். இங்கன இருக்கற குடும்பங்களுக்கெல்லாம் எப்படி வேலை ஏற்பாடு செய்யறதுன்னு யோசிச்சுக்கிட்டிருக்கேன். அதெல்லாம் விட்டுப்புட்டு இதைப் பெரிய விஷயமா வச்சுக்கிட்டு ஏசறீகளே?" என்றான்.

எல்லாரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். மெல்ல மெல்லப் பேச்சில் சுருதி இறங்கியது. விடை பெற்றுப் போனார்கள்.

திரும்பினான்!

அம்மா கண்ணீருடன் நின்றுகொண்டிருந்தாள்.

"ஏண்டா... கண்ணு! இப்படியாவது இந்த சந்தோஷம் எல்லாம் எனக்கு வேணுமா?" என்றாள், வெடித்து அழுதாள்.

"அம்மா! கவலைப்படாதே! உனக்குக் கஷ்டம் இருந்தாலும் இந்தப் பழக்கத்தையெல்லாம் நீயாவது ஆரம்பிச்சுவை. மனுஷ ஜீவன், அது ஆணாப் பொறந்தாலும், பொண்ணாப் பொறந்தாலும் சந்தோஷமா வாழறதுங்கறது தனிப்பட்ட உரிமை.

"நீ செஞ்சது என்னமோ உலக மகா கொடுமை மாதிரி பேசறாகளே. அவுக அவுக வூட்ல ஒரு இளசு இப்படி நின்னா அவுகளுக்குத் தெரியும். வேதனையா இருக்குமா... சந்தோஷமா இருக்குமான்னு..." என்று தேற்றினான் கண்ணன்.

பெற்றெடுத்தபோது, பச்சிளங்குழந்தையைக் கையில் ஏந்திப் பார்த்தபோதுகூட இல்லாத சந்தோஷத்தோடு அவன் அம்மா பெருமிதமாகப் பார்த்தாள்.

கோயமுத்தூர் நண்பனிடம் நடந்ததையெல்லாம் பகிர்ந்துகொண்டான் கண்ணன்.

ரகுவின் முகமும் இளகிப் போனது. கண்களில் நெகிழ்ச்சி தோன்றியது.

"ஏண்டா! இத்தனை நேரமும் ஒரே சஸ்பென்ஸா என்னமோ... அம்மா செஞ்சுட்டாக... செஞ்சுட்டா கன்னு... சொல்லிக்கிட்டிருந்தியே... அந்த சஸ்பென்ஸ் என்னன்ன சொல்லுடா?" என்றான் ரகு.

கண்ணனின் முகத்தில் மறுபடியும் லேசான ஒரு கோபம் தெறித்தது.

"அந்த எழவை ஏண்டா கேக்கறே! எங்கம்மா... நான் பொறந்து ஒரே வருஷத்துல எங்கப்பா இருந்த காலத்துல இருக்கு காது, மூக்கு, கழுத்து எல்லாத்தையும் மூளியா வச்சுக்கிட்டு வெள்ளைப் புடவை கட்டிக்கிட்டு நடமாடிக்கிட்டுக் கெடந்தது. காதுக்கு ஒரு ஜோடி தங்கக் கம்மல் செஞ்சு போட்டுகிட்டாங்களாம். அதுக்குத்தான் இந்தப் பஞ்சாயத்து விசாரணை" என்றான்.

ரகு என்ன பேசுவது என்றே தெரியாமல் அமர்ந்து விட்டான்.

"பழனி மெயின் ரோட்டில் இருந்து பத்து மைல் தூரத்துல இருக்கற கிராமத்துல போன நூற்றாண்டுல நடந்ததில்லடா! இப்ப நடந்தது" என்று முணுமுணுப்பாகவே சொன்னான் கண்ணன். மறுபடியும் மௌனமே நிலவியது.



# 9

## புது வருஷப் பொறப்பு

அந்தச் சூழ்நிலைக்குப் பொருந்தாத விதத்தில் அவள் அமர்ந்திருந்தாள்.

அந்தக் காலப் படங்களில் வரும் எஸ். வரலட்சுமியைப் போன்ற தோற்றத்துடன் அந்த அம்மையார் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

காசு மாலை, கல் அட்டிகை, தலை நிறைய மல்லிகைப் பூ, வெள்ளி ஃபிரேம் கண்ணாடி என்று பெரிய வீட்டு அம்மா என்று அழைக்கப்பட்ட பெயருக்கேற்ப திருமதி கமலாம்பிகையம்மாள் ஜொலித்துக் கொண்டு இருந்தார்.

அவரே நின்று பரிமாறுகிற அதிசயத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் நின்றுகொண்டிருந்தார்கள், முழு யூனிஃபார்மில் இருந்த வேலைக்காரர்கள். எந்தவித உணர்வுகளையும் வெளிக் காட்டாமல் இருக்க அவர்கள் பழக்கப்பட்டிருந்தார்கள்.

கமலாம்பிகையம்மாள் பெரிய வீட்டுக்காரர் என்று இன்றைக்கும் அழைக்கப் பெறும் ஜகந்நாத பூபதியின் மனைவியார். ஆங்கிலேயர் காலத்தில் ஷாண்டிலியர் விளக்குகள் பொருத்தப்பட்டு கவர்னர் துரை வந்தால் தங்குகிற அளவுக்குக் கட்டப்பட்ட வீடு. இல்லையில்லை, மாளிகை.

இன்றைக்கும் வெள்ளியங்கிரி மலைக்குப் பக்கத்தில் வருகிற முதல்வர்களெல்லாம் இங்கேதான் தங்கு

வார்கள். எத்தனையோ பெரிய பதவிகளில் அமர்ந்தவர்களெல்லாம் வந்து தங்கிய வீடு இதே இருக்கையில் அமர்ந்து உணவருந்தியுள்ளார்கள்.

இன்று அந்த இருக்கையில் அந்தப் பெண் அமர்ந்திருக்கிறாள்.

ஆங்காங்கே ஒட்டுப் போட்ட புடவை, எண்ணெய் வாங்கித் தேய்த்துக் கொள்கிற வசதி இல்லாதவள் போலும். ஆனாலும் இயன்றவரை அடங்காத் தலைமுடியை அடக்கி வாரிப் பின்னி இருந்தாள்.

கமலாம்பிகையம்மாள் நெய்யை அள்ளி ஊற்றினார். "சாப்பிடம்மா, பெண்ணே, உன் பேர் என்ன சொன்னே? காமாட்சியா? நம்ம பண்ணைப் பசுக்களிடமிருந்து கறந்த பாலில் கடைந்த வெண்ணெய். சாப்பிடம்மா!" என்றாள்.

காமாட்சியாகிய அந்தப் பெண்ணோ தன் முன்னே பரிமாறப்பட்ட அத்தனை பண்டங்களையும் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாளே தவிர மடித்து வைத்த வலதுகையை நீட்டவும் இல்லை. தின்பண்டங்களைத் தொடவும் இல்லை.

அவளுடைய இந்த நிலையைப் பற்றி ஆராய்வதற்கு முன்பாக காமாட்சிக்கு எதற்காக இந்த ராஜ உபசாரம் என்று நாம் புரிந்துகொள்ள வேண்டுமல்லவா?

பெரிய வீட்டைப் பொறுத்தவரை 'ஒரு பாரம்பரிய சாபம்' இருப்பதாகப் பேச்சு உண்டு. மூன்று நான்கு தலைமுறைகளாக ஒற்றை ஆண்பிள்ளை மட்டும் பிறக்கும். பெண்பிள்ளைகள் ஒன்றிரண்டு கூடப் பிறந்தாலும் ஆண்பிள்ளை ஒன்றுதான். ஜகந்நாத பூபதிக்கும் ஒரே



மகன்தான். அவரது மகனுக்கும் ஒரே மகன்தான். பன்னிரண்டு வயதுப் பிள்ளை.

ஆலாந்துறைக்கு அருகில் ஒரு புகழ்பெற்ற ரெசிடென்ஷியல் ஸ்கூலில் அவனைச் சேர்த்திருந்தார்கள். பெரிய வீட்டுப் பிள்ளை என்பதால் அவனுக்கு மட்டுமே சிறப்பு அனுமதி கொடுத்திருந்தார்கள். அவன் மட்டுமே வீட்டிலிருந்து சென்று வர அனுமதி உண்டு.

இரண்டு மூன்று காவலர்களோடு கப்பல் போன்ற காரில் அனுப்பி வைப்பார்கள். அழைத்து வருவார்கள்.

அவனுக்கும் 'ஜகன்' என்றுதான் பெயர். இந்த ஜகன் துறுதுறுத்த பிள்ளை மட்டுமல்ல, இந்தப் பாதுகாப்பிலிருந்து எப்போதடா தப்பி, எங்கே லூட்டி அடிக்கலாம் என்று அலைந்து கொண்டிருப்பான்.

திடீரென்று சென்ற வாரத்தில் காணாமல் போய் விட்டான். வெள்ளியங்கிரி மலைப்பகுதியையே சல்லடைப் போட்டுச் சலித்துவிட்டார்கள். காணவில்லை.

ஊரே ஸ்தம்பித்துப் போனது. கமலாம்பிகை பச்சைத் தண்ணீர் அருந்தவில்லை. ஜகனின் அம்மா ஜகதாம்பிகை மயங்கி விழுந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள்.

நான்கு நாட்கள் போயிருக்கும்.

ஒரு மாட்டுவண்டியில் குழந்தையைக் கொண்டு வந்து சேர்த்தாள் இந்தக் காமாட்சி. மாடு மேய்க்கும் சிறுவர்களுடன் திரில்லுக்காக காட்டுக்குள் போன ஜகன், வழி தவறி விட்டான். கடும் பனிக் குளிரில் பயந்து போய் ஏதோ பாறைக்கடியில் மயங்கிக் கிடந்திருக்கிறான்.

அவனைப் பார்க்க நேர்ந்த இந்தக் காமாட்சி விறகு பொறுக்க வந்தவள். அள்ளித் தோளில் போட்டுக் கொண்டு தன் குடிசைக்குப் போய் உணவு கொடுத்து கஷாயம் காய்ச்சிக் கொடுத்துத் தேற்றி அழைத்து வந்தாள்.

காமாட்சிக்கு அன்றைக்குப் பெருத்த பாராட்டு, வாழ்த்துகள் என்று குவிந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக கமலாம்பிகை எங்கள் குடும்ப வாரிசைக் காப் பாற்றிக் கொடுத்தவளுக்கு என் கையால் பரிமாறிச் சாப்பிட வைப்பேன் என்று அழைத்துக் கொண்டு வந்து அமர வைத்திருந்தாள்.

பேசாமலே அமர்ந்து கொண்டிருந்த காமாட்சியை புதிராகப் பார்த்தார் கமலாம்பிகை. இந்நேரம் வேறு யாராவது இப்படி நடந்திருந்தால் வேலையாட்களே அவளை வெளியேற்றி இருப்பார்கள். இவள் வாரிசைக் காப்பாற்றியவள் ஆயிற்றே.

"ஏம்மா, இதெல்லாம் உனக்குப் புடிக்கலையா?" என்றாள் கமலாம்பிகை மென்மையுடன். ஒரு வேளை பூ வாசம் பிடிக்காத மீன்காரியைப் போல் ராகிக் கூழ் கேட்பாளோ என்றுகூடக் கமலாம்பிகைக்குத் தோன்றி யது.

காமாட்சி தன்னைக் குனிந்து பார்த்துக் கொண டதைக் கவனித்த கமலாம்பிகை, "சாப்பிடு காமாட்சி, அப்புறம் நல்ல துணிமணிகளாத் தர்றேன்" என்றார்.

'வெடுக்'கென்று நிமிர்ந்து பார்த்தாள் காமாட்சி

"அம்மா, நீங்க பெரியவங்க. ஒங்ககிட்டே ஒண்ணு கேப்பனுங்க. கோவிச்சுக்கக்கூடாதுங்க" என்றாள் கொங்குத் தமிழில்.



கமலாம்பிகை சிரித்துக்கொண்டே அவளருகில் இருந்த சேரில் அமர்ந்தார். "ஏம் பொண்ணே, உன்ற கிட்ட கோவிச்சுக்குவனா? என்ன சொல்லோணும், சொல்லு!" என்றார் அதே கொங்குத் தமிழில்.

"அம்மா அவிய இன்னிக்கு ஒரு நாளைக்கு எனக்கு நெய்யூத்திச் சோறு போட்டு விருந்து வச்சுப் போடுவீங்க. நாளைக்கு நானெங்கே நெய்யிக்குப் போற துங்கோ. நல்லதா நாலு புடவை கொடுத்துப் போடு வீங்கோ. அது கிழிஞ்சு போனதுக்கப்புறம் நானென்ன பண்ணுவனுங்கோ?" என்றாள்.

கமலாம்பிகை கடகடவென்று சிரித்து விட்டார். "நல்லா ஆச்சு போ. இதுதானா உன்ற கவலை. ஆயுசு முழுக்க இங்கயே இருந்துக்கோ. நாம் பார்த்துக்கறன்ப்பா உன்னை" என்றார்.

கமலாம்பிகைக்கு காமாட்சி புத்திசாலியான பெண் என்பதும், அவள் வேறு ஏதோ கேட்க நினைக் கிறாள் என்பதும் புரிந்தது. அதை மனதில் வைத்துக் கொண்டுதான் இதைச் சொன்னார்.

"அம்மா, ஒழைக்காம சோறு தினனு உடம்பை வளர்த்தலாமுங்களா? நியாயங்களா?" என்றாள் அவள்.

"சரி, விடு ஒரு வேலை போட்டுத் தர்றேன். பாரேன், எனக்குக்கூட ஒத்தாசைக்கு ஒரு ஆள் வேண்டி யிருக்கு. வந்துர்றயா?" என்றார்.

"சந்தோஷமா நான் வந்தர்றனுங்கம்மா. எனக்குக் கீழே நண்டுஞ் சிண்டுமா நாலு தங்கச்சிங்க இருக்குங் கம்மா. எங்க கிராமத்துல கொறஞ்சது ஒரு இருபது பேரு வயசுப் பொண்ணுக இப்படிக் கிழிஞ்ச சேலை கட்டி யிருக்கமுங்கம்மா, எல்லாருக்கும் குடுப்பீங்களாம்மா. அப்படியே குடுத்தாலும் எத்தனை பேருக்கு, எத்தனை நாளுக்குக் குடுப்பீங்கம்மா?" என்றாள்.

கமலாம்பிகை, காமாட்சியை யோசனையுடன் பார்த்தார். காமாட்சி தொடர்ந்தாள்.

“அம்மா, நானு ஒரு பத்து வருஷத்துக்கு முன்னாடி இந்த பங்களாவுக்கு வந்துருக்கனுங்கம்மா, என்ற அப்பனோட வந்துருக்கனுங்க” என்றாள்.

‘அப்ப என்ன நடந்தது தெரியுங்களா?’ என்ற அப்பன்கிட்டே நான் ஆறாம் வகுப்புக்குப் போகோணும், ஹைஸ்கூலில் சேர்த்து விடுன்னு அழுதனுங்க.

‘போ புள்ள விளையாடறியா?’ன்னு எங்கப்பா கோபிச்சுக்கிட்டாருங்க. அப்புறம் என்ற நச்சுத் தாங்காம இங்க கூட்டிட்டு வந்தாருங்க.

பெரிய ஜமீன் ஐயாகிட்ட ‘ஐயா, என்ற புள்ளை படிக்கோணும், படிக்கோணும்னு ஒரே தொல்லை பண்ணுதுங்க’ என்று புகார் செய்தாருங்க. அப்ப நம்ம ஜமீன் ஐயாவைப் பார்க்க எனக்கு ஒரே பயம்மா இருந்துதுங்க. பெரிய மீசையை ஒரு முறுக்கு முறுக்கிவிட்டு “அவனவன் ஆம்பளைப் பயலுகளே படிச்சுப் போட்டு வேலையைக் காணம், வேலையக் காணம்னு அலையறானுங்க. இதுல பொட்ட புள்ளைகளுக்கு வேற படிப்பா? எடுறா அந்தப் புளியம் விளாரை!’ அப்ப டீன்னாரு பாருங்க ‘ஐயோ, வேண்டாம்னு’ அலறிகிட்டுப் போய்ச் சேர்ந்தனுங்கம்மா” என்று காமாட்சி ஒரு கணம் நிறுத்தினாள்.

அவளே தொடரட்டும் என்று கமலாம்பிகை தீர்க்கமாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

“அப்புறம், ரெண்டு மூணு வருசத்திலே எங்கப்பன் இருமி, இருமிச் செத்தாருங்க. நாலைஞ்சு புள்ளைகளைப் பெத்துப் போட்டு நல்ல கவனிப்பு இல்லாம என்ற ஆத்தா நை நைன்னு படுத்துக்கிடக்கறாளுங்கோ.



என்ற படிப்புக்கு மட்டும் அய்யா சரின்னு தலையாட்டியிருந்தா இன்னிக்கு மலை சாதி சனங்கன்னு சொல்லி ஒரு டீச்சர் வேலையோ, கிளார்க்கு வேலையோ கிடைச்சிருக்குமல்லங்கோ” என்றாள் காமாட்சி.

கமலாம்பிகை திகைத்துப் போய் அமர்ந்திருந்தார்.

“அம்மா கையில பரிமாறுனதை ஆசையாச் சாப்பிடணும்னு மனசு கெடந்து பதைக்குதுங்கம்மா. ஆனா, இப்ப வுட்டா வேற சான்ஸு கிடைக்காது. உனக்கு இல்லாட்டியும் பரவால்லே. உன்ற ஊர்ப்புள்ளைங்களுக்காவது படிப்புக்குப் பிச்சை கேளுன்னு என்ற புத்தி சொல்லுதுங்கம்மா. நான் எதைச் செய்யட்டுங்கம்மா” என்று கேட்ட காமாட்சியை பிரமிப்பாய்ப் பார்த்தார் கமலாம்பிகை.

கமலாம்பிகை அம்மையாருக்குப் பெண்ணுக்குப் பெண்ணாய் காமாட்சியின் கோரிக்கையின் நியாயம் புரிந்தது. ஏன், அவரே முப்பதாண்டுகளுக்கு முன்னேயே நகரத்தில் வளர்ந்து பட்டப் படிப்பு முடித்த பெண்.

திருமணமாகி இங்கே வந்து எத்தனையோ விஷயங்களை விழுங்கி ஜீரணித்தவர். அவரது அனுபவ அறிவு காமாட்சியைக் கண்டு பெரிதும் வியந்தது.

தனது கிராமத்துப் பெண்களுக்குப் படிப்பறிவுக்கு நேரம் பார்த்துக் கோரிக்கை வைக்கும் இந்த காமாட்சி டாக்டர் முத்துலட்சுமிக்கோ குயில் சரோஜினிக்கோ எந்த விதத்திலும் குறைந்தவளல்ல என்று தோன்றியது.

கமலாம்பிகை ஒரு கணம் சிலிர்த்துக் கொண்டார். இவளுக்கிருக்கும் சாதுர்யத்தில் ஒரு சிறு பங்கு கூடவா தனக்கு இல்லாமல் போய்விடும். ஜமீன்தாரை நேரம் பார்த்து இசைய வைக்க முடியாமலா போய்விடும் என்ற நம்பிக்கையுடன் சொன்னார்.

"இத பாரு காமாட்சி! உன்ற ஊருலேயே மூணே மாசத்துக்குள்ள பள்ளிக்கூடம் வருது. அதே பள்ளிக் கூடத்துல உனக்கு ஆயா வேலை, உன்ற தங்கச்சி களுக்குப் படிப்பு, வர்ற வருஷப் பொறப்புக்கு என்ற பரிசு. போதுமா. எங்கே சாப்பிடு" என்றார்.

அடுத்த நிமிடமே சோற்றை அள்ளி அள்ளிப் போட்டுக் கொண்ட காமாட்சியைப் பார்த்து, "அடிப் பாவி மகளே" இத்தனை பசியையுமா அடக்கி வெச் சிருந்தே?" என்று ஆச்சரியப்பட்டுப் போனார்.



# 10

## சின்னஞ் சிறு கதைகள் பேசி...!

அந்தச் சிரிப்பைப் பார்த்து ஒரே மலைப்பாக இருந்தது. இது எப்படி? எப்படி? இவளால் இத்தனை யையும் விழுங்கிக் கொண்டு இவ்வளவு மென்மையாக சிரிக்க முடிகிறது. அது என்ன புன்னகை? விகசித்தது... சொல்லலாமா? 'மந்தகாசம்', 'ஜொலிப்பு' ம்ஹூம்... இது எதுவுமே அதை முழுமையாக விளக்க முடியாது. 'ஆத் மார்த்தமான அன்பு' என்கிற ஒரு விஷயம் அந்தச் சிரிப்பில் மிளிர்வதை எந்த வார்த்தையைக் கொண்டு விளங்க வைப்பது.

வந்த நாளிலிருந்து வனிதா பார்த்துக் கொண்டு தான் இருக்கிறாள். முதன்முதலாக வனிதா இந்த வங்கியில் நுழைந்த நாளன்று தான் சிநேகித்துக் கொண்ட விஷயங்களைத் தன்னிரக்கத்தோடு இப்போது நினைத்துப் பார்த்தாள். குழலியும் தேவியும் மலர்ந்த சிரிப்போடு வரவேற்றார்கள்.



"பரவாயில்லை. நாங்கள் மூன்று பேரே போர டித்துக் கொண்டிருந்தோம். நீங்கள் வந்துவிட்டீர்கள்" என்று வரவேற்றபோது வனிதாவுக்குப் பெரிய விடுதலை யுணர்ச்சி தோன்றியது. 'அப்பாடா! எப்படியிருக்குமோ, என்னவோ என்று பயந்ததற்குப் பரவாயில்லை' என்று எண்ணிக் கொண்டாள். குழலியும் தேவியும் அன்று முழுவதும் வருகின்ற நாட்களில் அவளைத் தங்க ளோடேயே வைத்துக் கொண்டார்கள். மிகப் பிரிய மாகப் பேசினார்கள். அதுமட்டும்தானா! இன்னும் சொன்னார்களே.

'இத பாருங்க. வனிதா... நீங்க அந்த மிஸஸ் பூர்ணிமாகிட்ட எச்சரிக்கையா இருக்கணும். அது எல்லா ஆம்பளைங்ககிட்டயும் பல்லைக் காட்டும். அங்க பாருங்க. ரவி கூட எப்படிப் பேசிக்கிட்டு இருக்குதுன்னு. நாங்க எதுக்குடா இதையெல்லாம் சொல்றம்னு யோசிக்கறீங்களா? யூ மஸ்ட் நாட் பி ஸ்வெப்ட் அவே பை த ராங் ஹேண்ட்ஸ். என்னமோ உங்களை ரொம்பப் புடிச்சுப் போச்சு. யூ ஆர் லுக்கிங் ஸ்வீட் ஆல்ஸோ ,என்றபோது வனிதாவுக்கு கொஞ்சம் உச்சி குளிர்ந்து போய்விட்டது. இயல்பாய் அவர்களோடு ஒட்டிக் கொண்டாள். ஆனால், பூர்ணிமாவையும் உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்தாள். அருமையாக உடை உடுத்திக் கொள்கிற அவளிடத்தில் ஒரு கலையுணர்ச்சி தென் பட்டது போலத்தான் வனிதாவுக்குத் தோன்றியது. ஆனால், அவளிடம் நெருங்கினால் இவர்களுக்குப் பிடிக்காதே என்று கொஞ்சம் ஒதுங்கியும் இருந்தாள்.

ஒரு நாள் குழலியும், தேவியும் இருவருமே வர வில்லை. சாப்பிடுவதற்காக அவர்களுக்கென்று உள்ள அறைக்குள் நுழைந்தபோது பூர்ணிமாவும், காஷியர்

பாஸ்கரனும் பேசிக் கொண்டிருந்தார்கள். வனிதாவிற்கு ஒரு நாள் தேவி கிசுகிசுத்துக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. "ஏங்குழலி, இந்தப் பூர்ணிமாவும் அந்த பாஸ்கரனும் என்னதான் பேசிப்பா, அலுறுவாசலிலேயே. அது வேற கெழம் என்று" வனிதா தயங்கினாள். உடனே, பூர்ணிமாவின் குரல் அவளைத் தொட்டது. "வாங்க வனிதா! ஏன் அங்கேயே நின்னுட்டீங்க" என்று வரவேற்றாள்.

வனிதா உள்ளே நுழைந்தாள் "காஷியர் சார். வனிதா ரொம்ப ஷை டைப் இல்லே?" என்று அவளைத் தட்டிக் கொடுத்து தங்கள் உரையாடலில் கலந்து கொள்ளச் செய்து விட்டாள் பூர்ணிமா. அப்போதும் சரி, அதற்குப் பிறகும் எத்தனையோ நாட்கள் அவர்களுக்குத் தெரியாமல் தடுப்புக்கு இந்தப்புறம் இருந்து அவர்கள் பேச்சைக் கேட்க நேர்ந்தபோதும் சரி, தவறான வார்த்தைகள் இவள் காதில் படவில்லை. இலக்கியம் பேசினார்கள். விஞ்ஞானம் பேசினார்கள். அரசியல் பேசினார்கள். ஆனால், அடுத்தவர்களைப் பற்றி ஒரு நாளும் பேசவில்லை. அந்த கண்ணியம் வனிதாவைக் கவர்ந்தது.

இதற்கிடையில் பூர்ணிமாவோடு தான் பழக ஆரம்பித்த சில நாட்களாகக் குழலியும், தேவியும் தங்களுக்குள்ளே கிசுகிசுப்பதையும் தான் வந்தால் நிறுத்திக் கொள்வதையும் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்.

ஒரு நாள் தடுப்புக்கு இப்புறம் அமர்ந்து வனிதா எதையோ படித்துக் கொண்டிருந்தாள். தேவி பேசிக் கொண்டிருந்தாள். "இந்த வனிதா பார்த்தியா, பூர்ணிமாகூட சேந்துகிடுச்சு, அதோட அந்த ரவி வேறு இதுகிட்ட சிரிச்சு சிரிச்சுப் பேசிக்கிட்டிருக்கான். எங்கியானும் ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டு வந்து நின்னாலும் நிக்குங்க" என்று சுவாரஸ்சியமாய்ப் பேசிக் கொண்டிருந்தாள்.



வனிதாவுக்கு முகம் நெருப்புக் கனலாய் எரிந்தது. இன்றைக்கு மத்தியானம்கூட ரவியிடம், "ரவி சார்! உங்க வீட்டுக் குழம்புக்கே தனி ருசிதான்" என்று பாராட்டிக் கொண்டே வாங்கிச் சாப்பிட்டது கண் முன்னே வந்து நின்றது. திடீரென்று எழுந்தாள். அவள் எழுந்து நின்ற வேகத்தில் டேபிளில் இருந்த பேப்பர் வெயிட் விழுந்து சத்தத்தை எழுப்பியது. இவள் பேய் பிடித்தவள் போல் விழுந்த பொருளைக்கூட கவனியாது விறைப்பாகச் சென்றதைப் பார்த்த பாஸ்கர், பூர்ணிமா, ரவி, எல்லாரும் கூடப் பின்னாடியே தொடர்ந்தார்கள். 'என்னவோ நடக்கப் போகிறது?' என்ற எதிர்பார்ப்பு எல்லார் முகத்திலும்.

வனிதா திடீரென்று புயல்போல் உள்ளே நுழைவாளென்று தேவி எதிர்பார்க்கவில்லை. முகத்தை சகஜ பாவத்தில் வைத்துக் கொள்ள முயன்றாள். அதற்குள்ளாக வனிதா, 'மிஸ்டர் ரவி, கொஞ்சம் இங்கே வாங்க' என்று குரல் கொடுக்க ரவி ஓடினான். "பாருங்க மிஸ்டர் ரவி, நானும் நீங்களும் சிரிச்சு சிரிச்சுப் பேசறோமாம். ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கப் போறோமாம். இந்தம்மா கண்டுபிடிச்சு வச்சிருக்காங்க!" என்றாள் படபடவென்று.

ரவியின் கண்கள் சிவந்தன. "ஏம்மா... உங்களுக்கெல்லாம் வேறே வேலையே இல்லையா? என்றான் அடிக்குரலில். தேவி வெலவெலத்துப் போய் விட்டாள்.

"தேவி மேடம்! உங்களுக்கும் ஒரு பொண்ணிருக்கு. நாளைக்கு அவளும் ஒரு ஆபீஸ் போக வேண்டி வரலாம். இங்க ஆள் பிடிக்கறதுக்கு அவசியம் எனக்கில்லை. எனக்கும் எங்க அத்தை பையனுக்கும் அடுத்த மாசம்

மேரேஜ். ஆம்பளைகளோட, ஒண்ணா வேலை செஞ்சு காசு வாங்கிக்கலாமாம். அதுல தப்பில்லயாம். ஆனா, அவங்களோட பேசக்கூடாதாம். ஒவ்வொரு ஆம்பளையும், பொண்ணும் பேசிக்கறதைப் பார்த்துக் கூடத் தப்பா நெனைச்சுக்கற பொம்பளைதான் ஒவ் வொரு தடவையும் மனசால கெட்டுப் போறா. நா நாலு பிரதர்ஸோட வளர்ந்தவ. தெரிஞ்சுக்குங்க. பாக்கறவங்க மனசில விகல்பம்ன்னா, போய் சுவத்தில முட்டிக்குங்க... சை... ஐம் அஷேம்ட் ஆஃப் யூ பீப்பிள்..." என்று பொரிந்து தள்ளிவிட்டு ஸீட்டுக்குத் திரும்பி விட்டாள். பிறகு என்ன நடந்ததென்று அவள் கவலைப்படவில்லை. ஆனால், ஒரு பத்து நிமிடம் ஒரே குழப்பமாய் இருந்ததென்றும் மானேஜர் தலையிட்டு அமைதிப்படுத்தினார் என்றும் அப்புறம் புரிந்தது.

பூர்ணிமா மெல்ல வந்து அவளருகில் அமர்ந்தாள். "என்ன வனிதா, இந்தப் போடு போட்டீங்க" என்று சிரித்தாள். "பின்னே... என்னங்க மேடம். வேலை செய்யற இடத்துல வேதனைகளைக் கிளப்பிவிடறதே இந்த மாதிரிப் பொம்பளைங்களுக்கு வேலை. நல்ல வேளை யாய் எனக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆயிருக்கு. எங்கத்தானுக்கு என்னைப் பத்தித் தெரியும். இல்லைன்னா, என்ன ஆக றது? ரவி சார் வொய்ஃப் காதில கேட்டா, அவங்க குடும்ப அமைதியே பாதிக்கப்படாதா. ஒய் டு தே டூ இட்? இதுல இவங்களுக்கு என்ன கிடைக்குது?" என்று மீண்டும் படபடவென்று பொரிந்தாள்.

பூர்ணிமா மெல்லச் சிரித்தாள். அதே சிரிப்பு. "வனிதா, உங்க கேஸ்லயாவது ஒரு ஊகத்தோட நிறுத் திட்டாங்க. எங்க கேஸ்ல நானும் பாஸ்கரும் ஓடிப் போயிட்டதாகவே, அதுவும் எங்க அம்மா வீட்டுலயே போய்ச் சொன்னாங்க தெரியுமா? செய்தியைக் கேட் டுட்டு எங்க பேரண்ட்ஸ் பதறிப் போய் எங்க வீட்டுக்கு வர, நான் விஷயம் தெரிஞ்சு குமுறிக் குமுறி அழ என்னை யார் ஆறுதல் படுத்தினாங்கறீங்க? என் ஹஸ்பெண்ட். 'ஐ நோ யூ பூர்ணிமா, நீ எதுக்கும் கவலைப்படாத!' என்று என்னைத் தேற்றியவரே அவர்தான். அந்த ஒரு வாரமும்... ஓ... காட்... மறக்கவே முடியாதப்பா."

வனிதா கண்களை மலர்த்திக் கொண்டு பூர்ணிமாவை வியப்பாய்ப் பார்த்தாள். "அதற்குப் பிறகு எதுவுமே நடக்காத மாதிரி நான் வந்தேன். பட், நம்ம ஆபீஸ்ல எல்லாரும் என்னைப் புரிஞ்சுகிட்டு சகோ தரங்க மாதிரி கை கொடுத்தாங்க. நீங்க வந்து ஜாயின் பண்ணவுடனே சொல்லிருப்பாங்களே? பூர்ணிமா ஒரு மாதிரி! அவளோட பழகாதேன்னு!" சொல்லிவிட்டு மீண்டும் பூர்ணிமா சிரித்தாள்.

வனிதா மலைத்துவிட்டாள். இது எப்படி...? எப் படி...? இவளால் இத்தனையையும் விழுங்கிக் கொண்டு இவ்வளவு மென்மையாக சிரிக்க முடிகிறது. அப்பப்பா... அது என்ன புன்னகை?... இப்போது வனிதாவின் உள்ளத் தில் பூர்ணிமாவின் மீது ஒரு மரியாதை கலந்த அன்பு பெருக்கெடுத்தது. அவள் அந்த மரியாதைக்குக் தகுதி வாய்ந்தவள்தான்.

பெண்ணை யாரும் அடிமைப்படுத்த முடியாது. ஆனால், பெண்ணே பெண்ணுக்குக் குழி தோண்டு கிறாள் என்பதில் மட்டும் சந்தேகமில்லை. ஆணும், பெண்ணும் சரிசமம் என்று வேலை செய்யக் கிளம்பி யாகிவிட்டது. அதற்குப் பிறகு ஒவ்வொரு பெண்ணின் சிரிப்பிற்கும் அர்த்தம் கற்பிக்கத் தேவையில்லை. வேறு பாடற்ற உழைப்பும், மாசுபாடற்ற மனமும் உடைய இந்த மாதிரிப் பெண்களால் மட்டுமே சமத்துவம் நிலை நாட்டப்படுமேயல்லாது. உள்ளத்தின் ஆழத்தில் பொறா மையைத் தேக்கி வைத்துக் கொண்டு புறங்கூறித் திரியும்

பெண்களால் அல்ல... என்றெல்லாம் எண்ணினாள் வனிதா. தன்னையே கண்கொட்டாது பார்க்கும் பூர்ணிமா வனிதாவைப் பார்த்து மீண்டும் புன்னகைத்தாள். அதே புன்னகை. அது என்றும் தொடரும்...!

# 11

## கலா சொன்னது நினைவிருக்கட்டும்!

"அம்மா, நாங்கல்லாம் இருக்கோம். நீங்க கவலைப் படாதீங்க. என்ன உதவி வேணுமோ தயங்காம கேளுங்க" என்றார் பெரியவர்.

கோதையம்மாள் அழுது கொண்டே தலையை ஆட்டினாள். அவளது இருபுறமும் அமர்ந்து கொண்டு கண்ணீரும் கம்பலையுமாய் இருந்த இரண்டு இளம் பெண்களும் அவளையும் பெரியவரையும் மாறி மாறிப் பார்த்தார்கள்.

"குழந்தைங்களா கவலைப்படாதீங்க.. நடந்தது நடந்தது போச்சு. அப்பா போயிட்டாரேன்னு மனசு விட்டுராதீங்க. தைரியமாய் இருங்க. என்ன உதவி வேணும்னாலும் கேளுங்க" என்று அவர்களையும் பார்த்துச் சொன்னார் பெரியவர்.

பிறகு எல்லாரையும் பார்த்துக் கும்பிட்டுவிட்டு ராஜனைக் கூப்பிட்டார். "ராஜன் எல்லா ஏற்பாடுகளையும் கூட இருந்து கவனிங்க. ஒரு குறைவும் இருக்கப் படாது. தெரியுதா" என்றார்.



பெரியவருடன் கூட இருந்த மற்றொரு கஞ்சி போட்ட கதர் சட்டைக்கார் வந்து கோதையம்மாளிடம் வணக்கம் போட்டுக்கொண்டு சொன்னார்.

"அம்மா மன்னிக்கணும். சென்னையில் சாயங்காலம் முக்கியமான கூட்டம். காலையிலே டெல்லிக்குப் பெரியவர் போயே ஆகணும். எதுக்காக உங்க வூட்டுக்காரர் உசிரை விட்டாரோ அந்தக் கடமையெல்லாம் பெரியவர் செய்தே ஆகணுமே" என்றார் விநயமாக.

கோதை சேலைத் தலைப்பால் வாயைப் பொத்தி அழுதுகொண்டே சொன்னாள். "முந்தாநேத்திக்கு இந்நேரம் பெரியவர் டெல்லியில இருப்பாரு. முடிவு தெரிஞ்சிடும்னு நிமிஷத்துக்கு நிமிஷம் சொல்லிட்டு இருந்தாருங்களே. அவரு ஆசையெல்லாம் வீணாப் போச்சே! எங்க வாழ்க்கையெல்லாம் வீணாப் போச்சே" மீண்டும் அழுதாள்.

தர்மசங்கடமான அமைதி நிலவியது. பெரியவர் உண்மையான வருத்தத்துடன் இந்த முரட்டுத்தனமான அன்புக்கெல்லாம் எப்படிக் கைம்மாறு செய்யப் போகிறோம் என்று ஒருவிதக் கலக்கத்துடன் நின்றுகொண்டிருந்தார்.

கோதை தானாகவே தெளிந்து கொண்டாள்.

"சரீங்கய்யா. நீங்க புறப்படுங்க. எங்க தலையெழுத்து இப்படி ஆயிப்போச்சு. நீங்க பாக்க வேண்டிய காரியம் எத்தனையோ இருக்குதுங்க. புறப்படுங்கய்யா" என்று கை கூப்பினாள்.

பெரியவர் எதையும் சொல்லாமல் குனிந்த தலையுடன் தர்மசங்கடமாக வெளியேறினார். கூடவே ஒரு பட்டாளமும் நடக்கத் தொடங்கியது. உடனே பெரியவர் சடக்கென்று நின்றார்.

"இதபாருப்பா, இப்பதானே சொன்னேன். இரண்டு பேர் மட்டும் எங்கூட வந்தாப் போதும். மீதியிருக்கறவங்க எல்லாரும் இங்க இருந்து ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்க" என்று சொல்லிவிட்டு நடந்தார்.

கோதை தனக்கருகிலே இருந்த செய்தித்தாளைப் பார்த்தாள். வீட்டில் மாலை போட்டு வைக்கப்பட்டிருந்த அதே படம் செய்தித் தாளிலும் வெளியாகியிருந்தது.

'அய்யாவு தீக்குளித்து மரணம். பெரியவர் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படாததால் ஏமாற்றம்.'

அதே சமயத்தில் காரில் பெரியவர் தன்னுடன் வந்த நண்பரிடம் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்: "எனக்கு இதை அன்புன்னு சொல்றதா, இல்லை மடத்தனம்னு சொல்றதான்னு தெரியலை. இந்த மாதிரி செய்கைகளினால் கைகள் கட்டிப் போடறாங்கப்பா! உண்மையில் இந்தச் செய்கை எனக்கு மிகவும் கோபத்தை ஏற்படுத்துது என்னைக் கேட்டா இத நா கண்டிச்சுத்தான் அறிக்கை விடணும். அப்படி அறிக்கை விட்டா தொண்டர்கள் மனசு புண்படும். அய்யாவு என்கிற ஒரு தொண்டன் போனது இருக்கட்டும். அந்த உசிரை என்னால குடுக்க முடியுமா? இப்படி அரசியல் நடத்தறது, இந்தக் கணத்துல எனக்கு ரொம்ப சுமையா இருக்குதப்பா" என்று.

நண்பர் பெரியவரின் சங்கடத்தை முழுமையாக உணர்ந்தார். அந்தக் கணத்தில் எதைச் சொன்னாலும் சரியாய் இருக்காது என்றெண்ணி மௌனமாய் உட்கார்ந்திருந்தார்.

காரில் கனத்த மௌனம் நிலவியது.

"டீ, கலா இங்க வந்து பாரு" கோதை அலறியதைக் கேட்டு கலா ஓடி வந்தாள். கோதையின் கையில் ஒரு காகிதம்.



"என்னம்மா, என்ன?" என்று அவள் கையிலிருந்த கடிதத்தை வாங்கிப் பார்த்தாள்.

'அன்புள்ள கோதைக்கு' என்று ஆரம்பித்த கடிதம். அப்பாவின் கையெழுத்து தேதியைப் பார்த்தாள். இறப்பதற்கு முதல் நாள் எழுதப்பட்டிருந்தது. அம்மாவைப் பார்த்தாள். பிறகு தொடர்ந்து படித்தாள்.

'அன்புள்ள கோதைக்கு,

பெரியவர் தேர்ந்தெடுக்கப்படாதது எனக்குப் பெரிய ஏமாற்றம். என்னால் தாங்க முடியவில்லை. நான் நாளைக்குத் தீக்குளிக்கப் போகிறேன். முடிவு செய்து விட்டேன். இப்படி ஏதாவது செஞ்சாத்தான் பெரியவருக்கு எவ்வளவு ஆதரவு இருக்குன்னு டெல்லிக்காரனுக்குப் புரியும். இதோட மூணாவது தடவையா பெரியவருக்குக் கிடைக்க வேண்டிய பதவி கிடைக்கலை. இது சரியில்லை.

போன முறை கோயமுத்தூர் பக்கம் ஒருத்தர் தீக்குளிச்சாரு. இந்த முறை நான். கோதை, உனக்கும், பொண்ணுகளுக்கும் நான் என் கடமையைச் சரியாகச் செய்யலேன்னு வருத்தப்படாதே. எப்படியும் பெரியவர் பொண்ணுகளுக்கும் உனக்கும் ஏதாவது வழி செய்வாரு. விட்டுற மாட்டாரு மன்னிச்சுக்க. எப்படியிருந்தாலும் என்னோட இந்தப் பெட்டிய நீ பார்ப்பே என்ற எண்ணத்துல இந்தக் கடிதத்தை நான் இதுல வக்கிறேன். எல்லாரும் நல்லாருங்க. என்னால செய்ய முடியாததை இப்படியாவது சாதிச்சுக்கறேன். கட்சிக்காரங்க பணம் வசூல் பண்ணிக் குடுத்தா பொண்ணுங்க கல்யாணத்தை நடத்திரு. உனக்கும் கடைசி வரைக்கும் ஏதாவது வச்சுக்க.

இப்படிக்கு,
அய்யாவு.,

கலா கடிதத்தைப் படித்தவுடன் சிலையாக நின்று விட்டாள். தங்கை சீதா டைப்கிளாஸுக்குப் போனவள் வந்தால் அவளிடம் எதுவும் சொல்லாதே என்று தாயை எச்சரித்தாள்.

வீட்டுத் திண்ணையில் இரு கால்களையும் சேர்த்துக் கொண்டு வெகுநேரம் மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டிருந்தாள் பிறகு முடிவெடுத்தாள்.

மறுநாள் காலை!

"அய்யா! இந்த நியூஸைப் பாருங்க. என்று செய்தித்தாளை எடுத்துக் கொண்டு பரபரப்பாக வந்தார் பெரியவரின் அந்தரங்கச் செயலாளர்.

'அய்யாவு குடும்பத்தார் நிதியைத் திருப்பிக் கொடுத்தனர்.' என்று செய்தி வெளியாகி இருந்தது. பக்கத்தில் போட்டோ. 'எங்கள் தற்கொலைக்குக் காரணம் நாங்களே. பெரியவருக்குத் தனியாகக் கடிதம் எழுதியுள்ளேன். பத்திரிகைகளுக்குத் தனியாக கடிதம் எழுதியுள்ளேன் அவைகளைப் பார்க்கவும்."

இப்படிக்கு,
கலா.,

என்ற கடிதம் இருந்தது என்று செய்தி வெளியாகி இருந்தது.
பெரியவர் காத்திருந்தார் கடிதத்துக்காக. பத்திரிகைகளும் கூட_

அய்யா,

வணக்கம். எங்களின் இந்த முடிவு தங்களுக்கு மிகவும் அதிர்ச்சிகரமாக இருக்கும் என்று எனக்குத் தெரியும். எங்கள் தந்தைக்குப் பின் கடந்த பத்து நாட்களாக எங்களுக்குப் பெரிய அளவில் ஆதரவு தந்தீர்கள். வாழ்நாள் முழுவதும் வயிற்றுக்கும், மானத்துக்கும் குறைவில்லாமல் இருக்க லட்சக்கணக்கில் பணம் திரட்டித் தந்தீர்கள். பிறகு ஏன் இந்த முடிவு என்று நீங்கள் நினைக்கலாம். இறப்பதற்கு முன் எங்கள் தந்தை எழுதி வைத்த கடிதம் எங்களுக்கு நேற்றுத்தான் கிடைத்தது. அதைப் படித்தவுடன் எனக்குச் சம்மட்டியால் அடித்தது போல் இருந்தது. அவருடைய தீக்குளிப்பு உண்மையிலேயே தங்கள் மீது வைத்த அன்பாலா, இல்லை அதற்குப் பிறகு எங்களுக்குக் கிடைக்கப் போகிற லட்சக்கணக்கான பணத்தின் அடிப்படையிலா என்று எனக்குச் சந்தேகம் எழ வைத்து விட்டது. சென்ற முறை ஒரு இளைஞர் இறந்தபோது லட்ச ரூபாய் பணம் திரட்டித் தரப்பட்டது என்பது நினைவிருக்கலாம். அதுவே கூட ஒரு மறைமுகக் காரணமாக இருக்கலாமோ என்னவோ என்று எனக்குத் தோன்றுகிறது. அய்யா! உண்மையிலேயே தங்களது அரசியல் தூய்மை மீது கொள்கைகள் மீது எனக்கும் ஒரு பிடிப்புண்டு. இப்போது (என் தந்தை செய்த காரியத்தால்) நான் கட்சிக்கு வந்தால் பதவிகள் தரப்படும் அனுதாபத்தின் அடிப்படையில். அதுவல்ல நான் விரும்பியது. நான் விரும்பியது கடைக்கோடி நிலையிலிருந்து கட்சிக்கு உழைக்க வேண்டும் என்பதுதான். அதுவும் கெட்டது.

ஐயா! இறப்பின் மேல் திரட்டப்பட்ட லட்சக் கணக்கான பணத்தினால் இனிமேல் நடக்கப் போகும் எங்கள் வாழ்க்கை, எங்களை ஏதோ போல் என்னை உணர வைக்கிறது. எங்கள் தந்தையாரின் இறப்பினால் கிடைத்த வசதிகளும் வாழ்க்கையும் எப்படி எங்களுக்கு மன மகிழ்ச்சியைத் தர முடியும்? இந்த வார்த்தைகளுக்கு என்னை மன்னிக்கவும். சுயமரியாதை மிக்க உங்களின்

தொண்டர்கள் சுயமரியாதை உள்ளவர்களாக இருக்க வேண்டும். அல்லவா. எனவேதான், இந்த முடிவு. இந்த முடிவு மட்டும் மடத்தனமானதல்லவா என்று தாங்கள் நினைக்கலாம். இதுவும் ஒரு அதிர்ச்சி வைத்தியம்தான். நாங்கள் மூவரும் தீர ஆலோசித்தே இந்த முடிவுக்கு வந்தோம். நிதிதிரட்டி எங்களுக்கு அளிக்கப்பட்ட ஏழு லட்ச ரூபாய் டிராஃப்டை அப்படியே உங்களுக்கு அனுப்பியுள்ளேன். மன்னிக்கவும்! உங்களால் நாட்டுக்குப் பெரிய எதிர்காலம் இருக்கிறது. வழி நடத்துங்கள்.

நன்றியுடன்,

கலா,

பி.கு பத்திரிகைகளுக்கு உங்கள் சார்பாக ஒரு கடிதம் எழுதியுள்ளேன். கண்டிப்பாகப் பிரசுரிப்பார்கள். இந்த அதிகப்பிரசங்கித்தனத்திற்காகவும் மன்னிக்க வேண்டுகிறேன்.

அன்று மாலைப் பத்திரிகைகளில் கடிதம் பிரசுரமாகி இருந்தது. நல்ல வேளையாகக் காப்பாற்றிவிட்டார்கள். அவர்களின் வீடு நோக்கிப் பெரியவர் காரில் போய்க் கொண்டிருந்த வழியில் ஒரு கடையில் பத்திரிகை வாங்கினார்கள் தொண்டர்களுக்கு,

'ஒரு தொண்டனின் மகளாகக் கலா எழுதும் கடிதம். நாங்கள் இந்த முடிவை எடுப்பதற்குக் காரணம் என்று யாரைச் சொல்வது? விதியைத்தான் சொல்ல வேண்டும்.

ஆனால், ஒன்று மட்டும் சொல்கிறேன். பெரியவருக்குத் தர்மசங்கடத்தை ஏற்படுத்தாதீர்கள். ஏற்கெனவே, ஊழல் அரசியல்வாதிகளோடும், உளுத்துப் போன அரசியல் அரை வேக்காட்டுத்தனங்களோடும் அவர் மல்லுக் கட்டிக் கொண்டிருக்கிறார். இதற்கு நடுவில் யார் நினைத்தாலும் மீண்டும் உருவாக்க முடியாத உயிர்களைப் பலி கொடுத்து அவரைச் சிலுவை சுமக்கச் செய்யாதீர்கள். இதையே ஒரு வழக்கமாக்கி விடாதீர்கள். போலிகள் இதை ஒரு வாழ்க்கை வியாபாரமாகிவிடுகிற அபாயமும் உண்டு. மறந்துவிடாதீர்கள்.



இறந்துபோன தொண்டனின் மடத்தனத்தைக் கண்டிக்கவும் முடியாமல் இந்த மாதிரி இழப்புகளைச் சகித்துக் கொள்ளவும் முடியாமல் அவர் படுகிறபாட்டை என்னால் உணர முடிகிறது. உண்மையிலேயே அவருக்கு நீங்கள் தொண்டர்களானால் தோல்விகளையும் ஏமாற்றங்களையும் சந்திக்கும்போது மேலும் தீவிரமாய் உழைப்போம் என்று உறுதியெடுத்துக் கொண்டு பாடுபடுங்கள். அதை விடுத்து உயிர்களைத் துச்சமாகப் பலியிட்டுக் கொண்டு அவருக்குக் குற்ற உணர்வை ஏற்படுத்தாதீர்கள்.

உங்கள் பாணியிலேயே எங்களைப் பலி கொடுத்துக் கொண்டு இந்த அதிர்ச்சி வைத்தியத்தைச் செய்கிறோம் இனிமேல் ஒவ்வொரு முறை உங்களுக்கு இந்த மாதிரி எண்ணங்கள் தோன்றும்போதும் கலா சொன்னது நினைவிருக்கட்டும்.

இப்படிக்கு,

கலா,

அடுத்து ஒரு கூட்டம் போட்டார்கள் கட்சியில். பெரியவர் எழுந்தார். சுற்று முற்றும் பார்த்தார். அந்தக் கம்பீரமான முகத்தில்கூடக் கண்களில் நீர் திரண்டது குரல் பிசிறியது. தழுதழுத்த குரலில் சொன்னார்.

'அன்புள்ளங்களே' இப்படி எத்தனை பேரைப் பலி கொடுத்து என்னைக் கட்சி நடத்தச் சொல்கிறீர்கள்!" மேலே பேச முடியாமல் திணறினார். தன்னையுமறியாமல் குலுங்கி அழுதார்.

"நான் இன்னும் சொல்ல என்ன இருக்கிறது. கலா சொன்னது நினைவிருக்கட்டும்" என்றார்.

தள்ளாடிச் சேரில் உட்கார்ந்தார். சபையில் அத்தனை ஜோடிக் கண்களிலும் நீர் பொங்கி வழிந்தது. கனத்த மௌனம் நிலவியது. பெரியவர் குலுங்கி அழுவதைக் காமிராக்கள் குளோசப்பில் படம்பிடித்துக் கொண்டிருந்தன.

# 12

## ஒரு நாள்... ஒரு கனவு

காலை பிரேயர் முடிந்தவுடன் வகுப்புத் தலைவன் என்ற முறையில் மாணவர்களை வரிசையாக ஒழுங்கு படுத்தி அழைத்துச் சென்று கொண்டிருந்தான் சொக்கலிங்கம்.

"டேய், சொக்கு ஹெச்.எம். கூப்பிடறார்டா" என்று கோபாலகிருஷ்ணன் ஓடிவந்து கிசுகிசுத்தான். சொக்கலிங்கத்துக்கு உதறல் எடுத்து விட்டது. அவனுக்கு ஹெட்மாஸ்டரின் சோடாபுட்டிக் கண்ணாடியையும் அதற்குள்ளிருந்து முறைக்கும் இரண்டு பெரிய விழிகளையும் பார்த்தாலே பயம்.

அன்றைக்கு ஒரு நாள் அவரைப் போலவே நடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டாரே. அப்போதிருந்தே பயம்தான். அப்போது ஒன்றும் சொல்லாவிட்டாலும் மனிதர் மனத்துக்குள்ளே வைத்துக் கொண்டு இன்றைக்குப் பழி வாங்கப் போகிறாரோ? எப்போதும் இரண்டு பெரிய குச்சிகளைத் தன்னுடைய



மேஜையில் தயாராய் வைத்திருப்பார். எந்தத் தடியை எடுப்பாரோ என்று உள்ளூர நடுங்கிக் கொண்டே போனான்.

தலைமையாசிரியர் அப்படி ஒன்றும் கோபமாய் இல்லை. "வாடா! சொக்கலிங்கம்!" என்று வரவேற்றார்.

"டேய், பயலே, வர்ற நவம்பர் 14-ம் தேதி குழந்தைகள் தினமில்லியா. அன்னிக்கு ஒரு நாள் நீ பள்ளிக்கூடத்துக்கு ஹெட்மாஸ்டரா இருந்து வாத்தியார்களுக்கெல்லாம் வகுப்பெடுக்கப் போறே!" என்றார்.

"சார்... நா... நானா!"

"ஆமாடா, நீதான் பார்க்கறதுக்கு என்னைப் போலவே இருக்கறே. என்னைப் போலவே நடிச்சு வேற காட்டறே! அதான் நிஜமாவே உனக்கு அந்த போஸ்ட்" என்று சொல்லிவிட்டு 'இடி, இடி' என்று சிரித்தார்.

வகுப்புக்குப் பிரமை பிடித்தாற்போல் வந்து சேர்ந்தான் சொக்கு. "அடேய், என்னடா, ஆச்சு" என்று எல்லோரும் உலுக்கினார்கள் இவன் விஷயத்தைச் சொன்னதும் எவனும் நம்பாதது மட்டுமல்ல, தலையைத் தொட்டுத் தொட்டுச் சைகை வேறு காட்டிக் கொண்டார்கள், "பயலுக்கு என்னவோ ஆகி விட்டது" என்று.

அந்த நாளும் வந்தே விட்டது. சொக்கு தலைமையாசிரிரைப் போலவே லேட்டாய் வருகிறவர்களைப் பிடிப்பதற்காகக் கேட்டுக்கு முன்னால் நின்றான்.

அவன் வகுப்புப் பையன்களே முதுகுக்குப் பின்னே அழகுகாட்டிவிட்டு' 'எல்லாம் நேரம்டா!' என்று முணுமுணுத்துக் கொண்டு போனார்கள்.

இரண்டாவது பிரிவேளை.

வாத்தியார்களுக்கு வகுப்பெடுக்கச் சரியாக மணியடித்தவுடன் உள்ளே நுழைந்தான். இதற்குள்ளாக

சொக்கு தேறியிருந்தான். 'சரி! பொறுப்பெடுத்தாயிற்று, கவலைப்படாமல் செய்து விடுவோம்' என்று முடிவு கட்டிக் கொண்டான்.

சாக்பீஸை எடுத்துக் கொண்டு சுற்றுப்புறச் சூழல் பற்றிய பாடத்தை ஆங்கிலத்தில் எடுக்க ஆரம்பித்தான். தங்கசாமி வாத்தியார் லேட்டாக வந்தார்.

"சார், வகுப்புக்கு லேட்டா வரக்கூடாது சார். அப்படியே நில்லுங்க!" என்றான்.

தங்கசாமி கடுப்படித்துப் போய் நின்றார். தலைமை யாசிரியர் தடுக்கவுமில்லை. குறுக்கிடவும் இல்லை. அதற்குள் இரண்டு மூன்று பேர் இன்னும் லேட்டாக வந்தார்கள். தங்கசாமி நிற்பதைப் பார்த்து அவர்களும் நின்றார்கள். பின்னால் நின்றுகொண்டிருந்த ஸ்டீஃபன் வாத்தியார் ஜாலியான ஆள்.

சொக்கு பாடம் நடத்துவதையும், ஹெட்மாஸ்டர் முதல் பெஞ்சில் அமர்ந்து பாடம் கேட்பதையும் பார்த்தவுடன் அவருக்கு வாய்கொள்ளாச் சிரிப்பு.

"சீதாலட்சுமி, டீச்சர்! நீங்க சொல்லுங்க, எந்தெந்த விஷயங்களினால் சுற்றுப்புறச் சூழல் கெட்டுப் போகுதுன்னு?" என்று கேட்டவுடன் டீச்சர் நின்று பதில் சொன்னார்கள் சொல்லிவிட்டு அமர்ந்து சிரித்தார்கள். ஹெட்மாஸ்டரையும்கூடக் கேள்வி கேட்டான்.

வகுப்பு முடிந்து அறைக்கு வந்ததும் அலுவலகத்தில் அவனுக்கு ஒரு இருக்கை கொடுத்தார்கள்.

திடீரென்று ஒரு குரல். ஒரு அம்மா லபோ, லபோ வென்று கத்திக் கொண்டு வந்தாள். "நேத்து என்ற பையனோட காலை ஒடிச்சுப் போட்டாங்க. என்ன பள்ளிக்கூடம் நடத்தறீங்க?" என்று ஒரே கூச்சல்.

ஹெட்மாஸ்டர் அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு பேசாமல் உட்கார்ந்து விட்டார்.



அவன்தான் விசாரித்தான். ஆசிரியர்களும் உதவிக்கு வந்தார்கள். கடைசியில் பார்த்தால் அந்த அம்மாவுடைய பையன்தான் இன்னொரு மாணவனை வம்புக்கிழுத்திருக்கிறான். பஞ்சாயத்துப் பண்ணிப் பைசல் செய்தான்.

இப்படி ஒரு நாள் முழுக்க அவன் வேலை செய்தான்.

மாலையில் மீண்டும் மாணவர் கூட்டம். தலைமையாசிரியர் அவனை மிகவும் பாராட்டிவிட்டுப் பேசச் சொன்னார்.

நாள் முழுவதும் பணி செய்ததில் ஒரு பொறுப்பை நிறைவேற்றுவதில் இருக்கக்கூடிய பிரச்சினைகளைத் தான் புரிந்துகொண்டதைத் தனக்குத் தெரிந்த விதத்தில் விவரித்தான்.

ஒரே மகிழ்ச்சியாக இருந்தது. மாலை வீட்டுக்குப் புறப்பட்டான்.

காலையில் பஞ்சாயத்து செய்தானே கதிரேசன். அவன் ஒரு கும்பலுடன் நின்றுகொண்டிருந்தான்.

"ஏண்டா? பஞ்சாயத்தா பண்றே பஞ்சாயத்து! இன்னிக்கு உன்னைச் சும்மா விடறேனா, பார்" என்று கூச்சல் போட்டுக் கொண்டு அவனை அடிக்க வந்தான்.

சொக்கன் ஓட ஆரம்பித்தான்.

துரத்திக் கொண்டே வந்த கும்பல் குளத்துக்குப் பக்கம் வந்தவுடன் அவனைத் தொபுக்கடீர் என்று குளத்துக்குள்ளே தள்ளியது. ஒரே அமுக்காய் அமுக்கியது.

"டேய், விடுங்கடா, விடுங்கடா" என்று கதறிக் கொண்டு கையைக் காலை உதறினான்.

'தொப்' என்று சத்தம்.

விழித்துப் பார்த்தால் தனது கட்டிலிலிருந்து கீழே விழுந்திருந்தான்.

அம்மா, அப்பா, அண்ணன் எல்லோரும் சுற்றி நின்றுகொண்டிருந்தார்கள்.

"என்னடா, என்ன ஆச்சு?" என்றார்கள், எல்லோரும் கோரஸாக.

சொக்குவுக்குச் சிரிப்பாய் வந்தது.

"சை" எல்லாம் கனவு!

"சரி, சரி. எழுந்திரு" என்று எழுப்பினார்கள்.

நல்ல வேளை!

அன்று ஞாயிற்றுக்கிழமை!

குளித்து முடித்து சாப்பிட்டுவிட்டு அண்ணனிடமும் அப்பாவிடமும் தன் கனவைச் சொன்னான்.

அவர்கள் சிரித்தார்கள்.

"அது வேற ஒண்ணுமில்லடா பயலே. நேத்து கேபிள்ல சினிமாப் படம் பாத்தியில்ல. அதோட எஃபெக்ட்" என்று ஒரு செல்லத் தட்டு தட்டிவிட்டு எழுந்து போனார் அப்பா.

# 13

## காயங்கள்

பாகீரதி யோசனையில் ஆழ்ந்திருந்தாள். இன்றைக்கு மூன்றாவது முறையாக ஆள் வந்தாயிற்று. பரணீதரன் இப்பவோ பிறகோ என்று இருக்கிறான். நீ வந்துதான் ஆக வேண்டுமென்று.



'சாகக் கிடக்கிறவனிடத்தில் என்ன வீம்பு அக்கா! போயிட்டுத்தான் வாயேன்', என்று சாவித்திரிகூட இரண்டு மூன்று முறை சொல்லி விட்டாள். எல்லோரும் அவன் சாகக் கிடக்கிறான் என்று மட்டும் பரிதாபம் காட்டுகிறார்கள். ஆனால், தனக்கேற்பட்ட ரணத்தை, அவன் தன் மனத்தை எப்போதோ சாகடித்துவிட்டதை எப்படி இவர்களிடம் விளக்கிச் சொல்ல முடியும்? எல்லோரும் தன்னை ரோஷக்காரி என்கிறார்கள். ஆனால், உண்மையில் தான் ஒரு வேஷக்காரி என்பது இவர்களுக்கு எங்கே புரியப் போகிறது.

ஒரு நாளா? ரெண்டு நாளா? பதினெட்டு வருடத் தாம்பத்தியம். என்ன இன்பமாகக் கழிந்த நாட்கள்.. தினமும் யாராவது நண்பர்கள் வருவார்கள். வீடு கலகலப்பாய் இருக்கும். பாகீரதிக்கு இலக்கியம் பெரிதாய்த் தெரியாது. ஆனால், எதையும் ரசிக்கத் தெரியும். பரணீதரன் நல்ல ரசனையுள்ளவன். அவனது ரசனைகளைப் புரிந்துகொண்டு ஈடு கொடுக்கத் தெரியும்.

'ரெண்டு பேரும் ரொம்ப அன்னியோன்யம்' என்று அக்கம் பக்கத்தவர்கள் அடிக்கடி சொல்லிக் கொள்வார்கள். அளவு மீறி இழைந்து கொண்டால்தான் இப்படி ஆகிப் போனது போலும். அன்றைக்கு நேர்ந்தது இன்றைக்கும் அவளுக்கு நினைவிருக்கிறது. எப்படி மறக்க முடியும்? இப்போதுகூட அந்த நினைவு வரும்போதெல்லாம் தூக்கம் பிடிப்பதில்லை. உடம்பெல்லாம் திகுதிகுவென்று எரிவது போல் உணர்வாள். எழுந்து அமர்ந்து கொள்வாள்.

பரணீதரன் அன்றைக்கு வருவதற்கு நேரமாகும் என்று ஆபீஸிலிருந்து போன் செய்தான். போரடித்தது. அண்ணன் வீட்டுக்குப் போகலாம் என்றால் அங்கேயும் யாருமில்லை. வேலைக்காரப் பெண் செல்லம்மா தான் இருப்பாள். போய் என்ன செய்ய என்று நினைத்

தாள். 'சரி! அங்கேதான் போவோமே. அவள் வீட்டை எப்படித்தான் வைத்திருக்கிறாள் என்று பார்ப்போமே?' என்று நடந்தாள்.

நடக்கிற தூரம்தான். நடந்தாள், உல்லாசமான மனநிலையில் நடந்தாள். இன்றைக்கு பரணீதரன் வந்தால் கொஞ்சம் கவனித்துவிட வேண்டும். போன வாரத்திலிருந்தே முகத்தை முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று உள்ளுக்குள் நினைத்து சிரித்துக் கொண்டே நடந்தாள்.

அவள் அண்ணன் வீட்டு நடையிலே கணவனின் செருப்பைக் கண்டவுடன் ஏனோ அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. இங்கே வருவதற்காகவா அப்படி போன் செய்தான் என்று உள்ளே நுழைந்து பார்த்தாள். கூடத்தில் யாரையும் காணவில்லை. ஒவ்வொரு அறையாக எட்டிப் பார்த்தவள். செல்லமாவிற்கென்று கொடுக்கப்பட்டிருந்த அந்தச் சின்ன அறையை எட்டிப் பார்த்தாள். லேசாக ஒருக்களித்திருந்த அறைக் கதவின் உள்ளே பார்த்தவள் அதிர்ந்து போனாள். ஏதோ ஒரு ஆண் இருக்கிறான் போல் இருந்தது. 'ஏய் செல்லம்மா!' என்று குரல் கொடுத்தபடி கதவைத் தட்டியவள் கதவு திறக்கப்பட இன்னும் அதிர்ந்து போனாள். உள்ளே பரணீதரன்! இருவரும் அவளை எதிர்பார்க்கவே இல்லை.

அதற்குப் பிறகு நடந்ததெல்லாம் உணர்ச்சிப் போராட்டங்கள்தான். அவனைப் புழுவைப் பார்ப்பது போல் பார்த்தாள். உள்ளுக்குள்ளே எரிமலையே வெடித்தது. கண்ணீர் பொங்கிப் பொங்கி வந்தது. அடக்கினாள். துரோகத்தின் முன்னால் நேர்மை தலைகுனிந்து விடக் கூடாது என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.



பரணீதரன் வெட்கிப் போய் நின்றான். செல்லம்மா அவள் காலைப் பிடித்துக் கொண்டாள். பாகீரதி ஒன்றுமே சொல்லவில்லை. கண்களில் நீர் வழிந்தோடியது. ஆனால், கம்பீரம் குறையாமல் நின்றாள். 'உங்களுக்கு என்ன குறை வைத்தேன்?' என்று மட்டும் கேட்டாள். திரும்பி நடந்தாள்.

ஒரு மணி நேரம் கழித்து பரணீதரன் வீடு வந்த போது அவன் முகத்தை அவள் நிமிர்ந்து பார்க்கவில்லை. பேசவுமில்லை. ஹாலில் பாய் போட்டுப் படுத்துக் கொண்டாள். பரணீதரன் அவள் அருகில் வந்து அமர்ந்தான். அவள் எழுந்து விலகி நின்றாள்.

'ஏதோ ஒரு கணத்தில் நேர்ந்துவிட்டது. உனக்கு மனதால் துரோகம் நினைக்கவில்லை. கல்யாணம் நிச்சயமாகி நின்றுபோனதாம். வயதாகிக் கொண்டே போகிறது. வரன் வரவில்லை என்று ஒரு நாள் அழுதாள். அனுதாபமாகப் பேசப் போய்.... இப்படி.... போன வாரத்தில் ஒரு நாள்..." என்று நிறுத்தினான்.

அவள் பேசவேயில்லை.

'என்னை நாலு அறை வேண்டுமானாலும் அறைந்து விடு' என்று கதறினான்.

'அறைஞ்சாப்பல அவ சுத்தமாயிருவாளா? நம்ம உறவு கறைப்பட்டது வெளுத்துருமா?' என்று கேட்டாள். அவன் அடிவாங்கினாற் போல் நின்றான்.

'உங்களுக்கு நேர்ந்ததைப் பற்றி நான் யோசிக்கலை. எனக்கு ஏன் அது நேரலேன்னு யோசிக்கிறேன்' என்றாள்.

இன்னும் துடித்தான். அவள் சற்றும் இரக்கம் காட்டவில்லை. மறுநாள் அவள் அண்ணன் ஊரில் இருந்து வந்தவுடன் அவள் வீட்டில் வைத்துப் பஞ்சாயத்துப் பேசினார்கள். செல்லம்மா பணம் வாங்கிக்

கொண்டு ஊருக்குப் போய்விடுகிறேன் என்றாள். பாகீரதி இடையிலே ஒன்றுமே பேசவில்லை.

பரணீதரன் முகத்தை அப்போதுதான் நிமிர்ந்து பார்த்தாள். 'ஏன், மிஸ்டர் பரணீதரன்? ஒரு துரோகத்தை இன்னொரு துரோகத்தால துடைக்கப் பாக்கறீங்களா?' என்றாள்.

அவன் விக்கித்து நின்றான்.

அவள் எழுந்து நின்றாள். "அண்ணா, இது பண விஷயமில்லை, பஞ்சாயத்து பண்ணி முடிக்க. உறவு. எல்லாத்தையும் பகிர்ந்துகிட்ட உறவு. அந்த ஆள்கிட்ட சொல்லு. இவளுக்காவது துரோகம் பண்ணாம இருக்கச் சொல்லு...." என்றாள்.

அண்ணன் கத்தினான் "காதும் காதும் வெச்சாப்ல முடிக்கிறதை வுட்டுட்டு இப்படிப் பெரிசு பண்றயே. எங்க கௌரவம் என்ன ஆகிறது?" என்று.

"கௌரவம்?" என்று அவள் விரக்தியாகச் சிரித்தாள். "உன் கௌரவத்திற்காக என்னை அகௌரவமான வாழ்க்கை வாழச் சொல்றியா?" என்றாள்.

ஒரு மஞ்சள் கயிற்றை எடுத்து வந்து செல்லம்மாவிடம் கொடுத்து 'அந்த ஆள் கையில கொடுத்து கட்டிக்க' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தாள். செருப்பை மாட்டிக் கொண்டு இன்னும் இரண்டு தெரு தள்ளி தனியாக வாழ்கிற விதவைத் தங்கை சாவித்திரியின் வீடு போய்ச் சேர்ந்தாள்.

அன்றைக்கு வந்தவள்தான். பத்து வருடங்கள் ஓடிவிட்டன. அண்ணன் வீட்டுக்கும் போகவில்லை. பரணீதரனையும் அவளாய்ப் போய்ப் பார்க்கவில்லை.

அடுத்த மாதம் அவன் சாவித்திரியை அலுவலகத்தில் பார்த்து அவள் செலவுக்கென்று பணம் கொடுத்தனுப்பியபோது அப்படியே வாங்கித் திரும்ப மணி



யார்டர் செய்துவிட்டாள். பல முறை போனில் தொடர்பு கொள்ள முயற்சித்தான். அவள் இடம் கொடுக்கவில்லை.

சாவித்திரியிடம் அழுதான். அவளும்கூட ஒரு நாள் "அத்தான்... ரொம்ப ஃபீல் பண்றார். மன்னிக்கக் கூடாதா?" என்றாள்.

"பங்கு போட்டுக்க இது பஞ்சாமிர்தம் இல்லே சாவித்திரி. விட்டுடு. நான் இன்னிக்கும் பரணியோட தான் மனசாலே வாழறேன். ஆனா, அது துரோகத்துக்கு முந்தின பரணி" என்றாள்.

ஒரே ஒரு நாள் கோவிலில் வைத்து வழிமறித்தான். "நான் மனசாலே செத்துப் போனேன். உடம்பாலயும் சாகணுமா?" என்றாள்.

"போயிருங்க மிஸ்டர். பரணி. அவளுக்கும் துரோகம் செய்யாதீங்க" என்றாள்.

தனது கம்பீர நடையை இழந்து சற்றே கூன் விழுந்தபடி நடந்து போகிற அவனைப் பச்சாதாபத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'அவள் உயிரோடு இருக்கட்டும். தூரத்தில் இருந்தாவது பாத்துக்கறேன்' என்று சாவித்திரியிடம் அழுதானாம். அவள் ஒரு வெறியோடு உழைத்தாள். சின்னதாக ஆரம்பித்த பலகார வியாபாரம் சூடு பிடித்தது.

அநாதை இல்லங்களுக்கு நிறையச் செய்தாள். கொஞ்சம் கொஞ்சமாக நடந்ததை மறந்து தனக்கு மட்டுமேயான ஒரு வாழ்க்கை வாழ்ந்தாள். அப்படியான நேரத்தில் இப்படியொரு சேதி. வெகு நேரம் யோசித்தவள். திடீரென்று அவனைப் போய்ப் பார்ப்பது என்று முடிவெடுத்தாள்.

பத்து ஆண்டுகளுக்குள் உள்ளுக்குள் நைந்து போய் உடலும் பலம் இழந்து போயிருந்தது. அவனுக்கு

என்னென்னவோ நோய்கள். செல்லம்மா வெளியே போய்விட்டாள்.

"என்னோட வாழ்ந்தபோதும், பிரிந்ததற்குப் பிறகும்கூட நீ பெண்மையின் இலக்கணம்தான். உன் சுயமரியாதைக்கும், கம்பீரத்துக்கும் நான் என்னிக்கும் அடிமை" என்றான்.

அவள் லேசாகச் சிரித்துக் கொண்டாள். 'என்னமோ பேசணும்னீங்களாமே?' என்றாள்.

அவன் அவளைப் பிரிந்து தான் பட்ட வேதனையை, தனது தவறுக்கு வருந்திய வருத்தத்தை எல்லாம் சொன்னான்.

"அத்தனையையும் மனதில் வைத்துக் கொண்டு நீ சொன்னாயே என்பதற்காக செல்லம்மாவுக்கு ஒரு குறையில்லாமல் வைத்துக் கொண்டேன். நான் போனாலும் அவளுக்கு வாழ்க்கைக்கு எல்லாம் செஞ்சு வச்சுட்டேன். எனக்கு இப்ப இருக்கற ஒரே ஆசையெல்லாம் முந்தி நம்ம அந்தரங்கமான நேரங்கள்ல 'பரணீதரா' என்று அழுத்தந் திருத்தமாகக் கூப்பிடுவாயே. அப்படி ஒரே ஒருமுறை கூப்பிடு" என்று அழுதான்.

அவள் உள்ளம் வெடித்துச் சிதறியதைப் போல் உணர்ந்தாள். தன்னையும் மறந்து கண்ணீர் வடித்தாள். சிலை போல அமர்ந்திருந்தாள். இரண்டு பேரும் கண்ணீர் மல்க அமர்ந்திருந்தார்கள்.

ஐந்தே நிமிடம்தான். அவள் தன்னை மீட்டுக் கொண்டாள். ஒரு இயலாமையுடன் அவனைப் பார்த்தாள். "ஐம் ஸாரி... என்னாலே முடியலே...." என்றாள்.

அவன் நீண்ட ஒரு பெருமூச்சு விட்டான். "பரவாயில்லை. ஏதோ எனக்காக ரெண்டு சொட்டுக் கண்ணீர் விட்டியே" என்றான். பிறகு அவள் "மிஸ்டர் பரணீதரன்.... நான் இப்ப எதுக்கு வந்தேன்னா... நீங்க உங்க



அலுவலகத்தில் இருந்து கிடைக்கப் போற எல்லாப் பணத்துக்கும் வாரிசாக என் பேரைப் போட்டிருக்கீங்களாம். தயவு செஞ்சு அந்த இக்கட்டிலிருந்து என்னை விடுவிச்சாகணும். செல்லம்மாவுக்கே கொடுத்துரலாம். எனக்கு எந்தத் தேவையும் இப்ப இல்லே. அதைச் சொல்றதுக்காக வந்தேன். ப்ளீஸ் மாத்திடுங்க..." என்றாள்.

அவன் சாட்டையடி பட்டாற்போல் அவளைப் பார்த்தான். "சுத்தமா மனசில இருந்து எடுத்திட்ட இல்லே?" என்றான்.

அவள் அதற்குப் பதில் சொல்லாமல் எழுந்தாள். கைகூப்பினாள். "எனக்கு எந்த வருத்தமும் இல்லே மிஸ்டர் பரணீதரன். நாம எப்பவும் நண்பர்கள்தான்" என்றாள். வெளியே நடந்தாள்.

அவசரமாக, வரலாமா என்று கேட்டுக்கொண்டே காபியுடன் வந்த செல்லம்மா "அக்கா... போயிட்டாங்களா?" என்றாள்.

அவன் செல்லம்மாவைப் பார்த்தான். தனது கணநேரச் சலனத்துக்கு இடங்கொடுத்த காரணத்துக்காகத் தன்னைவிட பதினைந்து வயது மூத்தவனைக் கல்யாணம் செய்து கொண்டு நோய்க்குப் பணிவிடை செய்து கொண்டிருக்கிற அவள் முகத்தில் தெரிந்த பேதமையும், ஒருமுறைகூடத் தன்னைப் பழைய முறையில் அழைக்க மறுத்துவிட்ட பாகீரதியின் கம்பீரமும் ஒருசேர அவனைத் தாக்கியது.

அன்றிரவு அவன் மரண அவஸ்தையில் இருந்தான். செல்லம்மாவிடம் 'நான் பாகீரதியிடம் பேச வேண்டும்' என்றான். ரிசீவரை அவன் காதில் வைத்தார்கள்.

"வாரிசாப் போட வேண்டாம்னு சொன்னியே. மறுபரிசீலனை பண்ணக் கூடாதா?" என்றான்.

அவள் உணர்ச்சி நிரம்பிய குரலில் "ஸாரி... ஐம் வெரி ஸாரி... ஆனா ஒண்ணு நிச்சயம் பரணி... நீங்களும் நல்லவர்தான். தப்புக்கு இவ்வளவு வருத்தப்பட்டீங்களே. ஆனா, உங்க கோரிக்கையை நான் ஏத்துக்கிட்டா.... நாம ரெண்டு பேருமாகச் சேர்ந்து செல்லம்மாவுக்குத் துரோகம் செஞ்ச மாதிரி ஆயிடும் பரணி...." என்றாள்.

அவன் முகம் மலர்ந்தது. முன்னைப் போல் ஆசையாய் இல்லையென்றாலும் அன்பாய் பரணி என்று அழைக்கப்பட்ட கணத்தில் ரிசீவர் அவன் கையிலிருந்து நழுவியது. உயிர் பிரிந்தது.

ரிசீவரை வைத்துவிட்டு அந்தப் பக்கம் முகம் இறுக அமர்ந்திருந்த பாகீரதி சற்று கழித்துத் தன் தங்கையிடம் சொன்னாள். "தூக்குத் தண்டனைக் கைதிக்குக்கூடக் கடைசி ஆசையை நிறைவேத்தறாங்களே... அது மாதிரி..." என்றாள். எழுந்து போய்த் தலையோடு தண்ணீர் ஊற்றிக் கொண்டாள்.



# 14

## சுகமா? சுருக்கா?

மஞ்சுளா இதோடு பத்தாவது முறையாக அந்தப் பார்வையைப் பார்த்து விட்டாள். அந்தப் பார்வையில் ஏதோ இருந்தது. மஞ்சுளாவால் புரிந்துகொள்ள முடியாத ஏதோ ஒன்று. புதிரான பார்வை. எந்த ஒரு வார்த்தை விவரணத்துக்கும் அடங்காத சிரிப்பு. எப்போது அந்தப் பார்வையைப் பார்க்க நேர்ந்தாலும் மஞ்சுளா ஒருவித அசௌகரியத்தை உணர்வாள்.



மஞ்சுளாவால் அது குறித்து எதுவும் செய்ய முடியவில்லை. வார்த்தைகளால் ஏதாவது பேசினால் அதற்கு பதில் சொல்லலாம். இப்படிப் பார்வைக்கு என்னவென்று பதில் சொல்வது?

எப்போது முதன்முறையாக அப்படி ஒரு சிரிப்பை பாரதியிடம் பார்த்தாள். மஞ்சுளா யோசித்துப் பார்த்தாள். ஓராண்டுக்கு முன்! அந்தப் பெரிய ஜவுளிக்கடையில் அவளும் அவள் கணவனும் ஏதோ துணிமணிகள் வாங்கிக் கொண்டிருந்தபோது.!

புடவை தேர்ந்தெடுப்பதில் அவளும் அவள் கணவன் ரமேஷும் தீவிர கவனம் செலுத்தி நின்றிருந்தார்கள். அவளால் முடிவு செய்ய முடியவில்லை. புடவையினுடைய பார்டர் நன்றாக இருந்தால் உடல் பகுதி நன்றாக இல்லை. கிட்டத்தட்ட ஒரு மணி நேரமாக அங்கே நிற்கிறார்கள். ஆனால், தேர்வு முடிவடையவில்லை.

ரமேஷ் மிகவும் எச்சரிக்கையாக எந்தச் சலிப்புணர்வும் காட்டாமல் தீவிரமான முகபாவத்தோடு நின்றுகொண்டிருந்தான். " இது நல்லாருக்கில்லே?" என்றாலும் தலையாட்டினான். "இது நல்லாயில்லை.. இல்லே" என்றாலும் தலையாட்டினான், அந்த சமயத்தில்தான் பாரதி அவர்களை நோக்கிக் கையாட்டிய படியே வந்தாள்.

மஞ்சுளா தன் கணவனை அறிமுகப்படுத்த முயன்றபோது பாரதியும் அவள் கணவன் ரமேஷும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்தார்கள். ரமேஷ் அப்போதுதான் பாரதி கல்லூரியில் தன்னோடு ஒன்றாகப் படித்தவள் என்று சொன்னான்.

இப்போது திடீரென்று மஞ்சுளாவுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. ஒரு வேளை அவர்களுக்குள் காதல்

கீதல் என்று ஏதாவது இருந்திருக்குமோ என்று. உடனேயே அந்த அளவுக்கெல்லாம் தன் கணவனுக்குத் தைரியம் கிடையாது என்று அந்த எண்ணத்தை ஒரு புறம் தள்ளிவிட்டாள்.

வேறு என்னதான் காரணமாக இருக்கும். அந்தப் புதிர்ப் புன்னகைக்கு? இப்படியே யோசித்துக் கொண்டிருந்தால் தலைவலி வரும் என்று தோன்றியது.

எழுந்தாள். கொஞ்சம் காபி போட்டுக் குடிக்கலாம் என்று போனாள். அப்படியே இரவு உணவுகளை ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினாள். அப்போது போன் ஒலித்தது.

ரமேஷ் இணைப்பில் இருந்தான். "டேய் ! மஞ்சு! ரொம்ப முக்கியமான ஒரு விஷயம் வந்துடுச்சு! ஷாப்பிங் நாளைக்கு வச்சுக்கலாமா?" என்றான்.

மஞ்சுளாவின் குரல் உயர்ந்தது. "நோ! நோ! ரமேஷ்.. நீங்க எப்பப் பார், இப்படித்தான் பண்றீங்க! நீங்க வர்றேன்னு ப்ராமீஸ் பண்ணினதாலே நான் இப்பவே டிபன் கூட ரெடி பண்ணிட்டேன். தீபாவளி வேற சீக்கிரமா வருது. எனக்கு நிறைய விஷயங்கள் முடிக்க வேண்டி இருக்கு. கண்டிப்பா வர்றீங்க! அதுவும் சீக்கிரமா!" என்றாள் அழுத்தமாக.

ரமேஷ் குரலில் ஒரு தவிப்புடன் சொன்னான். "மஞ்சு... ப்ளீஸ்! புரிஞ்சுக்க ! இது நம்ம நிறுவனம். நம்மதான் பிரச்சினைகளைத் தீர்க்கனும். நம்ம குடும்பத்துக்காகத்தானே இந்தத் தொழிலே நடத்தறோம். நீயே கோஆபரேட் பண்ணலேன்னா. எப்படி?" என்று.

மஞ்சுளாவுக்கும் அது புரிந்தது. ஒருவிதமான எரிச்சலுடன் சொன்னாள். "சரி..சரி! இதுவே கடைசியா இருக்கட்டும். இனிமே இந்த மாதிரிப் பண்ணாதீங்க.." என்று கடுகடுத்துவிட்டு போனை ஆஃப் செய்தாள்.



அப்போது மஞ்சுளாவின் முகத்தில் ஒரு வெற்றிப் புன்னகை தோன்றி மறைந்தது. எப்போதுமே தன் கையே உயரத்தில் இருக்கிறது என்ற வெற்றிக் களிப்புதான் அது. இப்போது கொஞ்ச நேரம் இருந்தது. என்ன செய்யலாம் என்று யோசித்தாள். அவள் பொதுவாக டி.வி சீரியல்கள் பார்ப்பதில்லை. உணர்ச்சிகரமான மோதல்கள் நிறைந்த சீரியல்களில் நேரத்தைக் கழிப்பதில் லாபம் என்ன என்று எண்ணம்.

மஞ்சுளாவுக்கு அதைக் காட்டிலும் முக்கிய வேலைகள் இருந்தன. அந்த மாதிரிக் கற்பனைப் பாத்திரங்களைப் பற்றிக் கவலைப்படுவதைக் காட்டிலும் தன்னைப் பற்றிக் கவலைப்படுவதற்கே அவளுக்கு நிறைய விஷயங்கள் இருந்தன.

தன் தோற்றம், நகைகள், துணிமணிகள் என்று கவலைப்படுவதற்கு அவளுக்கு எவ்வளவு விஷயங்கள் இருந்தன. மறுபடியும் அவளுக்குப் பாரதியின் புன்னகையே நினைவுக்கு வந்தது.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு அவர்கள நு லேடீஸ் கிளப்பில் புதிதாகத் திருமணமான ஒரு ஜோடிக்கு விருந்து கொடுத்தார்கள்.

கைகளில் தட்டுகளை வைத்துக் கொண்டு இரண்டு பேர், மூன்று பேராக அங்கங்கே நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

மஞ்சுளா தாராவுடன் நின்றுகொண்டிருந்தாள். அந்த புது மணப்பெண் தாராவின் கணவனும் வந்திருந்தார். நிறையப் பெண்களுக்கு மத்தியில் இருப்பதற்கு அவனுக்குக் கஷ்டமாக இருந்தது போலும்.

மனைவியின் காதுகளில் முணுமுணுத்தான். "ஹேய்! எல்லாரும் லேடீஸ்! இவங்களுக்கு நடுவில நான்

என்ன செய்ய?" என்றவன், ஏதோ முக்கிய வேலை என்று சொல்லி அனுமதி வாங்கிக் கொண்டு போய்விட்டான்.

மஞ்சுளா தாராவுக்கு ஒரு அறிவுரை கொடுத்தாள்.

"ஹேய், தாரா! நீ எதுக்கு உன் ஹஸ்பெண்டை போக விட்டே! இப்படியெல்லாம் போகவிட்டேன்னா அப்புறம் அவங்களைக் கையில பிடிக்க முடியாது. அப்புறம் ஆயுசு பூரா அடிமையா இருக்க வேண்டியது தான். அப்புறம் அவங்க விருப்பத்துக்கு நாம ஆடணும்" என்றாள்.

தாரா தயக்கத்துடன் விளக்க ஆரம்பித்தாள். "அக்கா... அது வந்து... அப்படியில்லக்கா, அவரு ரொம்ப அன்ஈஸியா ஃபீல் பண்றாரு" என்றாள்.

"நோ... நோ... அப்படியெல்லாம் நீ விட்டுக் குடுக்கக் கூடாது. எங்க வீட்டுக்காரர் இப்படித்தான் கல்யாணம் ஆன புதுசில கொஞ்சம் தண்ணி காட்டினாரு. நான் அப்பவே ஃபுல்ஸ்டாப் வைச்சுட்டேன். இப்பல்லாம் என்னோட புரொகிராம்ஸுக்குதான் முதலிடம். இல்லைன்னா வீட்ல புயல்தான். பாரேன், அவருக்குக் குழந்தை வேணும்னு ஆசை. நான் இப்போதைக்கு முடியாதுன்னு சொல்லிட்டேன். எங்களுக்குக் கல்யாணம் ஆயி அஞ்சு வருஷம் ஆச்சு. அடுத்த வருஷம் வேண்ணாப் பாத்துக்கலாம்னு சொல்லியிருக்கேன்" என்றாள்.

தாரா அவளை வெறித்துப் பார்த்தாள். ஒரு பெருமையான சிரிப்புடன் திரும்பினாள். பாரதி அங்கே நின்றுகொண்டிருந்தாள். பாரதி தான் பேசியதைக் கேட்டு விட்டாள் என்று மஞ்சுளாவுக்குத் தெரியும்.

பாரதியின் கண்ணில் அதே புதிர்ப்பார்வை. மஞ்சுளாவுக்கு அந்த பார்வையைப் பார்க்கும்போதெல்லாம் எரிச்சல் கிளம்பியது. மறைத்துக் கொண்டு "ஹாய் பாரதி" என்றாள். அவளும் கையாட்டினாள்.



அதெல்லாம் இப்போது நினைவுக்குவர, தலைவலி அதிகமாகியது. பாரதியிடம் பேசி இதை ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று எண்ணினாள். ஆனால், என்னவென்று கேட்பது. 'நீ ஏன் என்னைப் பார்க்கிறாய், சிரிக்கிறாய்' என்றா கேட்க முடியும். பைத்தியக்காரத்தனமாக இருக்காது?

தலைவலி அதிகமானதுதான் மிச்சம். அன்றிரவே மஞ்சுளாவுக்குக் காய்ச்சல் வந்துவிட்டது. ரமேஷுக்கோ அவளுக்குப் பணிவிடை செய்வதற்காக செலவழிக்கும் நாட்களில் அலுவலகத்தில் ஏறப்போகும் வேலைப் பளுவைப் பற்றிக் கவலை ஏற்பட்டது.

ரமேஷ் ஒரு நடுத்தரக் குடும்பத்திலிருந்து வந்தவன். கடுமையான உழைப்பாளி. அறிவாளி, அவனுடைய திறமையையும் உழைப்பையும் பார்த்து மஞ்சுளாவின் தந்தை தன் மகளை அவனுக்குக் கொடுத்தார். மஞ்சுளாவின் சகோதரனும் குடும்பத்தாரும் அவளுக்கு செல்லம் கொடுத்துக் கெடுத்து வைத்திருந்தார்கள்.

திருமணத்திற்குப் பிறகு கணவனிடம் அதையே எதிர்பார்த்தாள். முதலில் ரமேஷ் அவளுக்கு விஷயங்களைப் புரிய வைக்க முயன்றான். ஆனால், சண்டையில் தான் முடியும். ரமேஷ் சலிப்படைந்து போய் அவள் விருப்பத்திற்கே இடம் கொடுக்க ஆரம்பித்தான்.

மஞ்சுளாவுக்கு ஷாப்பிங் என்றால் பிடிக்கும் களைப்பில்லாமல் கடை கடையாய் ஏறி இறங்குவாள். ரமேஷுக்கு இது மிகவும் கஷ்டமாக இருந்தது. வேறு வழியில்லாமல் சமரசம் செய்து கொண்டான். 'சரி, விடு. மனைவியின் சின்னச்சின்ன ஆசைகளை நிறைவேற்ற வேண்டியதும் கணவனின் கடமைதானே' என்று எண்ணிக் கொண்டான். ஆனால் பிசினஸ் சம்மந்தமான திட்டங்களை மாற்ற நேரும் போது மட்டும் வருத்தம்

ஏற்படும். என்ன செய்ய முடியும்? கடவுளைத்தான் வேண்டிக் கொள்வான்.

லேடீஸ் கிளப்பில் அன்று பெண்கள் தினம் ஒவ்வொரு வருடமும் கொண்டாடுவார்கள். இது ஏழாவது ஆண்டு. இந்த முறை சற்று விரிவாகவே விழா எடுக்க வேண்டும் என்று விரும்பினார்கள். எக்ஸிபிஷன், போட்டிகள் என்று களை கட்டியது. ஒரு பட்டிமன்றம், கூட வைத்தார்கள். பாரதிதான் தலைமை தாங்கினாள். இரண்டு குடும்பப் பெண்கள், இரண்டு கல்லூரி மாணவிகள், பணிக்குச் செல்லும் பெண்கள் என்று கலவையாக ஆறு பேர் பேசினார்கள்.

பாரதி சிறப்பாகவே வழிநடத்தினாள். நடுநடுவே ஜோக்குகள், துணுக்குகள் என்று கலந்துகட்டி கலகலப்பாகக் கொண்டு சென்றாள். நல்ல கருத்துகளும் கொடுத்தாள்.

தலைப்பு 'சமுதாயம், ஆணாதிக்கச் சமுதாயமா? பெண் ஆதிக்கச் சமுதாயமா?? என்று இருந்தது. பார்வையாளர்கள் வாய்விட்டுச் சிரித்தும், கைகள் தட்டி ஆரவாரித்தும் மகிழ்ந்தார்கள். வாதப்பிரதிவாதங்கள் பலமாக இருந்தன.

ரமேஷ், மஞ்சுளாவிடம் சொன்னான். "மஞ்சு! பாரதி காலேஜ்ல படிக்கும்போதும் இப்படியேதான் சுறுசுறுப்பாக இருப்பாள். எனக்கொரு சிஸ்டர் மாதிரி. இப்பத்தான் கோயம்புத்தூருக்கு வந்திருக்கா...! அருமையான பொண்ணு !" என்றான். மஞ்சுளா தலையாட்டிக் கொண்டாள்.

பாரதி தீர்ப்புச் சொல்ல வேண்டிய நேரம் வந்தது. மூன்று மணி நேர வாதங்களுக்கு பின் அவள் தீர்ப்பு வருகிற நேரம்.



மஞ்சுளாவின் மீது அவள் பார்வை படிந்து மீண்டது. அதே பார்வை!

மஞ்சுளாவுக்குப் புரிந்தது. தனக்குத் தொடர்பான ஏதோ ஒரு விஷயத்தை இன்றைக்கு பாரதி பேசப் போகிறாள் என்று.

அவளது உள்ளுணர்வு சரியாகவே சொன்னது. தலைப்பைப் பற்றிய ஒரு விரிவான அலசலுக்குப் பிறகு பாரதி அந்தக் குறிப்பிட்ட விஷயத்துக்கு வந்தாள்.

"பொதுவாக நகரங்களிலும், கிராமங்களிலும் பெண்களை ஆண்கள் எக்ஸ்ப்ளாய்ட் செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால், எனக்கு ஒரு நண்பரைப் பற்றித் தெரியும். கல்லூரி நாட்களில் அவர் மிகவும் திறமைசாலி. அவர் ஒரு பெரிய ஸ்காலராகவோ, விஞ்ஞானியாகவோ அல்லது பெரிய படைப்பாளராகவோ வருவார் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவரது கல்யாணத்துக்குப் பிறகு நிலைமை மாறியது. அவர் தன் மனைவிக்கு விட்டுக் கொடுக்க நேர்ந்தது. மனைவியின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கே அவர் தன்னுடைய பெரும்பாலான நேரத்தைச் செலவிட வேண்டி வந்தது. அவர்களுக்கு எப்போதெல்லாம் வெளியே செல்ல வேண்டுமோ அப்போதெல்லாம் உடன் செல்ல வேண்டும். காரோட்ட வேண்டும். அவர் அதைக் பெருமையாக நினைக்கிறார். அந்தப் பெண்ணுக்கு அதைக் குறித்து மிகவும் பெருமை. உண்மையான சுதந்திரமும், உண்மை அன்பும் ஒருவர் மற்றொருவருக்கு விட்டுக் கொடுப்பதிலேதான் இருக்கிறது. கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலே அவரவர்களுக்கான இடைவெளி, ஸ்பேஸ் இருக்க வேண்டும். இரண்டு பேருமே மற்றவர்களுக்கு அவரவருக்கான விருப்புக்கு நேரம் ஒதுக்க அனுமதிக்க வேண்டும்.

இந்தியக் குடும்பங்களின் வெற்றி எப்படி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துக் கொள்கிறார்கள் என்பதிலேதான் இருக்கிறது மேலைநாட்டுக் குடும்பங்கள் அவரவர் தனித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்ள முற்படுவதனாலேயே உடைகிறது. நமது இந்தியாவிலோ இரண்டு பேருமே ஓரளவு விட்டுக் கொடுப்பதனால்தான் வெற்றி அடைகிறது.

குடும்ப உறவுகள் புரிதலின் அடிப்படையில் அமைகிறபோது நீண்ட நாட்களுக்கு நிலைக்கிறது. புரிதல் இல்லாத உறவுகள் மேலோட்டமான கட்டுக்களில் இருக்குமே ஒழிய நீண்ட காலம் நிலைக்காது. பார்ப்பதற்கு வேண்டுமானால் குடும்ப அமைப்பாக இருக்கும். ஆனால், உள்ளே போலித்தனமானதாகி விடும். அதனால் நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், எந்தக் குடும்பமாக இருந்தாலும் சரி, அதிலே ஆணோ, பெண்ணோ ஆதிக்கம் செலுத்தினால் அது குடும்பமாக இருக்காது. எந்தக் குடும்பத்தில் ஆணும், பெண்ணும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒருவர் மற்றவரை மதித்து நடந்து கொள்கிறார்களோ அந்தக் குடும்பமே குடும்பம். அதனால் நான் ஆதிக்கம் என்ற வார்த்தையையே விலக்குகிறேன்.. மனதார அந்த இடத்தில் அன்பை விதைக்கலாம். ஏனென்றால், அன்புதான் எப்போதும் அடுத்தவர் நிலையில் நின்று யோசிக்கும்... எனவே எந்தக் குடும்பம் வெற்றி பெறுமென்றால், எந்தக் குடும்பத்தில் ஆணோ, பெண்ணோ ஆதிக்கம் செலுத்தாமல் விட்டுக் கொடுப்பதில் போட்டி போடுகிறார்களோ அந்தக் குடும்பமே வெற்றி பெறும்" என்று தீர்ப்பளிக்கிறேன்.

கூட்டம் ஆரவாரித்தது.



வீட்டுக்குத் திரும்பும்போது மஞ்சுளா வாயே திறக்கவில்லை. ரமேஷுக்கோ வாயைத் திறக்கத் துணிவு வரவில்லை. பாரதி தங்கள் குடும்பத்தைத்தான் சொன்னாள் என்று இருவருக்குமே தெரிந்திருந்தது. மௌனமாகவே உறங்கப் போனார்கள்.

**அ**ன்று வெள்ளிக்கிழமை!

மஞ்சுளா கணவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். செல்போன் ஒலித்தது.

வழக்கம்போல ரமேஷ் விளக்கம் சொல்ல ஆரம்பித்தான். "மஞ்சுளா! அன்எக்ஸ்பெக்டட்டா நான் இங்கே ஹெல்ட்அப் ஆயிட்டேன். ரொம்ப இம்பார்ட்டண்ட் மீட்டிங்... ஃபாரின் பையர்ஸ். என்ன செய்யலாம்.." என்று இழுத்தான்.

ஏதாவது 'சுருக்' கென்று வார்த்தைகள் விழும் என்று எதிர்பார்த்தான். ஆனால், மஞ்சுளா மென்மையாகப் புன்னகைத்தாள்.

"பரவால்லீங்க... அத்தான்! உங்க புரொகிராமை நீங்க தொடரலாம். கோனியம்மன் புரிஞ்சுக்குவா. நானும் ஒரு சின்ன சேன்ஜ் பண்ணிக்கறேன். எங்க மாமா வீட்டுக்குப் போகணும்கறது ரொம்ப நாளா பெண்டிங். அங்க ஒரு விசிட் அடிச்சுடறேன். டின்னர்?" என்று இழுத்தாள்.

ரமேஷுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

"நோ... பிராப்ளம்.. டியர்..! நான் டின்னர் இங்கயே முடிச்சர்றேன். யு கேரி ஆன் வித் யுவர் பிளான். ஹேவ் எ நைஸ் டைம் டார்லிங்!" என்றான்.

நம்பிக்கையில்லாத ஒரு பிரமிப்புடன் அவன் செல்போனை ஆஃப் செய்துவிட்டுப் புன்னகைத்ததை

மானேஜர் ஆச்சரியமாகப் பார்த்தாரென்றால் மஞ்சுளாவுக்குத் தன் கணவன் பல நாட்களுக்குப் பிறகு 'டியர்' 'டார்லிங்' என்ற வார்த்தைகளையெல்லாம் இதயத்தில் இருந்து பயன்படுத்தியிருக்கிறார் என்று புரிந்தது.

முகத்தில் புன்னகை படர்ந்தது. புதிர்ப் புன்னகை யல்ல. நிஜப் புன்னகை.

# 15

## அப்போதும் இப்படித்தான்...!

'அப்பாடா! ஒரு வழியாய்ப் பட்டுப் புடவையை அயர்ன் பண்ணி காலையிலேயே வாங்கி வைத்தாயிற்று. பிளவுஸ் தைக்கக் கொடுத்ததை வேறு வாங்கி வர வேண்டும் ஒவ்வொரு முறையும் இப்படித்தான் மூன்று நாட்களுக்கு முன்னேயே ஆர்ப்பாட்டங்களை ஆரம்பிக்க வேண்டியதுதான். புடவை ரெடியா, பாண்ட் ரெடியா என்று பார்த்துப் பார்த்து எனக்கும் அவருக்கும் தயார் செய்ய வேண்டியிருக்கிறது.' என்று மனதுக்குள் அலுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள் சசிகலா.

சசிகலாவுக்கு தான் பலவிதத்தில் கொடுத்து வைத்தவள்தான் என்று தோன்றியது. 'ஸ்டவ்' வெடித்து 'தற்செயலான' விபத்துகள் ஏராளமாக நடைபெறும் இந்தக் காலத்தில் இப்படி ஒரு அன்பான மாமியாரும் மாமனாரும்.

இதோ! ஆபீஸிலிருந்து உள்ளே வரும்போதே மலர வரவேற்கிறாள் மாமியார். "வாம்மா? முகம் அலம்பிட்டு வந்து டிபன் சாப்பிடு" என்று எவ்வளவு இயல்பான அன்போடு சொல்கிறாள்.



"இதோ, வந்துடறேம்மா" என்று புன்னகையோடு உள்ளே போனாள். இருபது பவுன் நகையோடு, சீர் வரிசைகளோடு இவர்கள் வீட்டில் மருமகளாய் நுழைந்து ஒரு சில நாட்களில் அத்தை சொன்னது இவள் காதுகளில் இப்போதுகூட ஒலிக்கிறது. "பாவம், உங்கப்பா இருபது பவுனெல்லாம் போட்டிருக்க வேண்டியதேயில்லை" என்று.

அன்று மாலை, கணவனிடம் சொன்னாள் சசி. "நாளைக்கு சாயங்காலம் சீக்கிரம் வந்துருங்க." அவனுக்கு, எதற்கு என்றுகூட நினைவில்லை.

"எதுக்கு?" என்றான்.

"கல்யாணத்துக்குப் போக வேண்டாமா?" என்றாள்.

"ஓ! அந்த போரா! அடாடா! இந்த சொந்தக்காரங்களுக்கு வேலையே கிடையாது. எப்பப் பார் கல்யாணம், கிரஹப்பிரவேசம், வளைகாப்பு ஏதானும் ஒண்ணு. பொழப்பே கிடையாது."

"ஆமா! என்ன செய்யறது! போய்த்தானே ஆகணும்? இத பாருங்க! ஒரு கல்யாணத்துக்குப் போறதுக்கு இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டமான்னு இருக்கு. நான் இனிமே பட்டுப் புடவையே கட்டப் போறதில்லை. வேஸ்ட் ஆஃப் மணி. பத்தாயிரமும், பன்னிரண்டாயிரமும் பட்டுப் புடவைக்குப் போடறதுக்குப் பதிலா 'இன்வெஸ்ட்' பண்ணினா 'எகானமி' யாவது இம்ப்ரூவாகும். நகைக்கடை மாதிரிப் போய் ஷோகேஸ் பொம்மை மாதிரி மேக்கப் பண்ணிட்டு நாலு நடை அப்புறமும் இப்புறமுமாய்ப் போயிட்டா ஜன்ம சாபல்யம்தான்" என்று பொரிந்தாள்.

பிரபு சிரித்தான். "நீ எகனாமிக்ஸ் படிச்சிருக்கேன்னு தெரியுது. அன்னிக்கு என்னமோ காட்டன் சாரிதான் கட்டுவேன்னு கட்டிட்டுப் புறப்பட்டே, என்ன ஆச்சு? எங்கம்மா நல்லா தலையில வெண்ணெய் தடவிட்டாங்க. அப்புறம் அதைக் கழட்டிப் போட்டுட்டு பளபளன்னு கட்டிட்டு வந்தியே" என்று கிண்டல் செய்தான்.

"ஆமா, உங்கம்மாதான் ஆச்சே! ஏதோ நாங்க உசிரோட இருக்கற வரைக்கும்னு ஒரு அஸ்திரத்தை எடுத்து விடறாங்களே, அதை மீறிகிட்டு என்ன செய்ய முடியும்?" என்றாள் சோகமாக.

உடனே பிரபு "அம்மா புரட்சிப் பெண்ணே! நீ என்ன வேணா செய். என்னோட ஆதரவு உண்டு. அவ்வளவுதான் ஆளை விடு" என்றான், சமாதானம் செய்யும் தோரணையில்.

அன்றைக்கு நடந்தது அப்படித்தான். ஒரே பிடிவாதம் பிடித்துக் காட்டன் புடவையைக் கட்டிக் கொண்டு புறப்பட்டாள். உடனே அத்தை அவளைத் தன்னுடைய அறைக்கு அழைத்துக் கொண்டு போனாள்.

"இத பாருடா, சசிம்மா, நான் சொல்றதைக் கேளு, நமக்குப் பிடிக்காட்டியும் சிலதெல்லாம் நாம் செய்ய வேண்டியிருக்கு. நீ சிம்பிளா இருக்கணும்னு விரும்பறேன்னு யாரும் நினைக்க மாட்டாங்க. 'எவ்வளவு வசதியிருக்கு, கஞ்சத்தனத்தைப் பாரு !' அப்படீம்பாங்க. 'மாமியாரைப் பாரு, எப்படி வர்றா. ஆனா, மருமக பாவம், எப்படி வச்சிருக்காங்கன்னு கூடச் சொல்வாங்க இத்தனை ஏன்? நான் கூட உன்னை மாதிரி இருக்கறப்ப, இரண்டு மூணு கல்யாணங்களுக்கு சிம்பிளாப் போனேன். உடனே, என் காது பட 'ஏன், வரதராஜுக்குப் பிசினஸ். டல்லா என்ன?'ன்னு ஜாடை பேசினாங்க தெரியுமா?



உடனே உங்க மாமா 'அம்மாடீ, நம்ம பிசினஸோ சிட்ஃபண்ட்ஸ் பிசினஸ் டல்லுன்னு பேர் வந்தா தொலைஞ்சோம். எனக்காகவாவது கொஞ்சம் கிராண்டாப் போவியாம்' கெஞ்ச ஆரம்பித்துவிட்டார்."

இப்படிப் பத்து நிமிடம் பேசிய அத்தைக்காகப் புடவையை மாற்றிக் கொண்டு புறப்பட்டாள். இன்றும் அப்படித்தான் என்று நினைத்துக் கொண்டு கணவனுடன் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தவுடன் அத்தையின் அறைக்கு சொல்லிக் கொள்ளப் போனாள். உடனே அவள் "இந்தா சசி, இந்தக் காசுமாலையைப் போட்டுக் கொள்" என்று அதை வேறு திணித்தாள்.

இன்னும் ஒரு எட்டு வைப்பதற்குள், சசி, பூ வைக்கலையா, நான் வாங்கிக் கட்டி வச்சிருந்தேனே!" என்று ஒரு செண்டைக் கொண்டு வந்து கொடுத்தாள். சசிக்குச் சிரிப்பு வந்தது. 'நடமாடும் நகை வங்கிதான்' என்று சொல்லிக் கொண்டாள் மனதுக்குள். இன்னும் கொஞ்சம் நின்றால் அத்தை 'வங்கி' 'வளையல்' என்று ஏதாவது ஆரம்பித்து விடுவாளோ என்று ஒரே ஓட்டமாய் நகர்ந்தாள்.

கல்யாண வீட்டில் மட்டுமென்ன? தாலி கட்டி முடியும்வரை அமர்வதே கஷ்டமாயிருந்தது. நகை மூட்டைகளைச் சுமந்துகொண்டு நடமாடும் பெண்களுக்கு இதெல்லாம் எப்படி சுவாரஸ்யப்படுகிறது என்று புரியவில்லை. மீண்டும் மீண்டும் அதே சடங்குகள்.. ஆடம்பரங்கள்.. இதில் வெகுவாகப் பாதிக்கப்படுபவர்கள் ஏழைகள். அவர்களின் தாழ்மையுணர்ச்சியை கிளறிவிட்டுக் குளிர் காய்கிறார்கள், இந்த மேல் மட்டத்துப் பெண்கள் என்று தோன்றியது சசிக்கு. படித்த பெண்கள்கூட இதற்கு விதிவிலக்கல்ல. இந்த அர்த்தமற்ற நாடகத்தைப் பார்க்க ஒன்றும் ரசிக்க

வில்லை. எரிச்சல்பட்டுப் போய்ப் புறப்பட்டு விட்டாள். "ஏன் சசி, இவ்வளவு சீக்கிரம்?" என்றவர்களுக் கெல்லாம் அலுவலகம் நல்ல சாக்காக அமைந்தது.

வீட்டுக்கு வந்ததும் முதல் வேலையாய் உடை மாற்றிக் கொண்டு அத்தையிடம் கொஞ்சம் அலுத்துக் கொண்டாள். "என்ன அத்தை, இது ஒரு பெரிய போர். எல்லாரும் நடிக்கிறார்கள். யாரும் அங்கே கல்யாணத் துக்காக, வாழ்க்கையில் இணையற ஜோடியை வாழ்த்த வரவில்லை. தங்களைப் பற்றி ஒரு விளம்பரம் போலத் தான் வருகிறார்கள்" என்றாள்.

உடனே அத்தை, "அது சரி. போ, இப்படியே ஒவ்வொருவரும் நினைத்தால் என்ன ஆவது?" என்றாள்.

அதிசயமாய் மாமனார் இடைபுகுந்து அவளைச் 'சசிகலா!' என்று அழைத்தார். "எத்தனையோ நமக்குப் பிடிபடாத விஷயங்கள் லைஃபில் இருக்கிறது. ஆனா லும், எல்லாவற்றையும் நாம் அனுசரிக்கிறோம். இட்ஸ் எ சார்ட் ஆஃப் காம்ப்ரமைஸ்" என்றார். அத்தை மீண்டும் தொடர்ந்தாள். "எல்லாரும் இப்படின்னா உன் கல்யாணத்துக்கு யார் வந்திருப்பா? அப்புறம் கல்யாணத் துக்குக் கைத்தடி அனுப்பின மணியகாரர் கதைதான். அந்தக் 'கதை' தெரியுமில்லை?" என்று அத்தை 'கதை' சொல்ல ஆரம்பித்தாள்.

'கின்னஸ்' புத்தகத்தில் ஒரே கதையைத் திரும்பத் திரும்பச் சொல்வதில் யாருக்காவது இடம் கொடுக்கலா மென்றால் அத்தைக்குக் கண்டிப்பாய் அந்த இடம் கிடைக்கும். அப்படியே பொறுமையாய்க் கேட்பதில் அவளுக்கும் இடம் கிடைக்கும்? எது எப்படியானால் என்ன? இது தொடரத்தான் போகிறது. திரும்பத் திரும்ப அதே விதமான சலிப்புதான். அடுத்த கல்யாணமும் வரத்தான் போகிறது. அப்போதும் இப்படித்தான்...



இப்படியேதான்.... நடக்கப் போகிறது. ஷியர் ஃபார்மா லிட்டீஸ் என்ற சலிப்புத்தான்.. ஆனால், போகணும்தான்.. அதுவும் ஆடம்பரமாய்..!

இந்த விஷயங்களை உடைக்க வேண்டும் என்ற வேகம் எத்தனையோ சசிகலாக்களுக்கு உண்டுதான். அதற்கொன்றும் சர்வாதிகாரம், ஜாதி, மதம்.. என்ற பெரிய பெரிய இரும்புத் தளைகள் தடையாயில்லை. 'அன்பு.. குடும்பம்.. கௌரவம்.. நாகரீக ஆசை...' என்ற சின்னச் சின்ன நரம்புத் தளைகள்தான் தடையாய் இருக் கின்றன என்பதுதான் எவ்வளவு நம்ப முடியாத விஷயம்.

# 16

## கிளைப் பாதை

"அண்ணா! நா.. உங்ககிட்டக் கொஞ்சம் பேச ணுமே!"

தயங்கித் தயங்கி குரல் வந்தது. கையிலிருந்த 'இர்விங் வாலஸை' மூடி வைத்துவிட்டு நிமிர்ந்து பார்த்தேன். பக்கத்து வீட்டு பதினெட்டே வயதான பச்சிளம் பாலகன் பாஸ்கர்! அற்புதமான அந்தி நேரம் ! கோவையின் சந்தடி மிகுந்த தெருவில் இரண்டாவது மாடியில் (மொட்டை !) இப்படியோர் சுகம் இருக்கிறது என்று சொன்னால் யாருமே நம்ப மாட்டார்கள் (இடத்தைக் கேட்காதீர்கள். சொல்ல மாட்டேன்) இடது ஓரக்கண்ணால் மேற்குத் தொடர்ச்சி மலையில் சூரியன் சிவப்பைப் பூசிக் கொண்டு ஒளிவதைப் பார்க்கலாம். வலது ஓரக்கண்ணால் எதிர் பஸ்-ஸ்டாண்டை சைட் அடிக்கலாம். மேலே தலையைத் தூக்கினால் வரிசை

வரிசையாக கொக்குகள் பறப்பதைப் பார்க்கலாம். கையில் வாலஸும் பக்கத்தில் பகோடா'வும் வைத்துக் கொண்டு "என்ஜாய்' பண்ணுகிற வேளையில் இவன் எங்கே வந்தான்? அவன் முகத்தைப் பார்த்தேன் பால் வடிகிற முகத்தில் இன்றைக்கு ஏனோ கொஞ்சம் கவலை வடிந்தது. என்ன சொல்லப் போகிறான்?

"சொல்லு." என்றேன்.

"அண்ணா.. வந்து... எப்படிச்.. சொல்றதுன்னு தெரியலை..?"

"அப்பத் தெரிஞ்சிட்டு வந்து சொல்லு!"- நான் புத்தகத்தை எடுக்கிறாற்போலக் கையை நீட்டினேன். அவன் ஓடிவந்து கையைப் பிடித்துக் கொண்டு விட்டான்.

"ப்ளீஸ்!". என்ற கெஞ்சல் வேறு. நான் கையை விடுவித்துக் கொண்டேன்.

"சொல்லு பாசு" பின்னே!" என்றேன்.

"அண்ணா, வந்து உங்க திக் ஃப்ரெண்ட் பார்த்திபன் இருக்காரில்லே...!"

"இருக்காரு."

"அவங்க வீட்டுல...சீதா.. இருக்கில்ல.."

"இருக்கு!"

"அதை... அதை... நான்... விரும்பறேன்!" பயல் முடித்து விட்டான். நான் ஒரு நிமிடம் ஒன்றும் பேசவில்லை. "இது எப்படி நிகழ்ந்தது?" என்பது போல அவனைப் பார்த்தேன். அவன் மறுபடியும் என்னைக் கெஞ்ச ஆரம்பித்தான்.

"அண்ணா, நீங்க மனசு வச்சா நடக்கும் பார்த்திபன் சாரோட ஃப்ரெண்ட்தானே நீங்க" என்று விசிறி வீச ஆரம்பித்தான். நான் பொறுமையாக எப்படி இந்தக் காதல் ஏற்பட்டது.. என்பதையெல்லாம் விசாரித்துக் கொண்டேன். அதிலெல்லாம் ஒன்றும் புதுமையில்லை.



வழக்கம் போல 'புத்தகப் பரிமாறலில்' தொடங்கி இருக்கிறது. சரி.. இப்போது அதெல்லாம் முக்கியமில்லை. இதை எப்படி நாம் செய்யப் போகிறோம்? பாசு சின்ஸியராகத்தான் சொல்கிறான். பார்த்திபனும் 'ஃபார்வர்ட் டைப்தான். மார்க்ஸ், எங்கல்ஸ் ஜாதி எதிர்ப்பு, கலப்புத் திருமணம் பற்றியெல்லாம் பேசுகிறவன்தான். பார்ப்போம். இது நடக்கலாம் என்றுதான் தோன்றியது. நான் பாசுவைத் தட்டிக் கொடுத்தபடி "பாசு, நான் எதுவும் பிராமிஸ் பண்ண மாட்டேன். ஆனா, சின்ஸியரா டிரை பண்ணுவேன். அதுவரைக்கும் பொறு. மூணாந்தரமா எதுவும் பண்ணிடாதே' என்றேன்.

அவன் நம்பிக்கையோடு நகர்ந்தான்.

ஆனால், எனக்குத்தான் ஒன்றும் புரியவில்லை. 'நீங்க மனசு வெச்சா நடக்கும்' என்ற பாசுவின் வார்த்தைகள்தான் திரும்பத் திரும்ப ஒலித்தன. வேலையில்லாமல் அப்பன் காசில் காலங் கழித்துக் கொண்டிருந்த ஒரு பட்டதாரி இளைஞனின் 'ஈகோ'வுக்கு இந்த வார்த்தைகள் எவ்வளவு கிலோ தீனி போட்டன என்பதைச் சொன்னால் உங்களுக்குப் புரியவா போகிறது?

ஓ.கே. நெக்ஸ்ட் ஸ்டெப். சீதாவை அது கல்லூரிக்குப் போகும் வழியில் யதேச்சையாய்ச் சந்திப்பது போல் சந்தித்துக் கிண்டினேன். ஏகமாய்ச் சிவந்து போன முகத்தோடு ஒத்துக் கொண்டாள். "அவர்தான்... முதலில்.. அப்ரோச்.. பண்ணினார்!" என்றாள் அதில் அவளுக்கு ஒரு பெருமை பாவம்.

அடுத்து வந்தது அந்தப் பெரிய முயற்சி ஒரு நாள் "சும்மா வாடா பார்த்தி! சென்ட்ரலுக்குப் போகலாம்" என்று ஒரு இந்திப் படத்துக்கு அழைத்துக் கொண்டு போனேன். படத்தின் சப்ஜெக்ட் வேறென்ன? காதலேதான்.

படத்தைப் பார்த்துவிட்டு, "ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு நடந்து போகலாண்டா, பார்த்தி!" என்றேன். ஞாயிற்றுக்கிழமைதானே. அவனும் "ரைட்டோ!" என்றான். ஆர்.எஸ்.புரத்தின் இருபுறமும் மரமடர்ந்த தெருக்களில் மாலை வேளைகளில் நீங்கள் நடந்து பார்த்திருக்கிறீர்களா? வாவ்! அது ஒரு சுகமான அனுபவம். நமக்குள்ளேயே, நமது மனதுக்குள்ளேயே அமைதியைத் தேடிக் கொண்டிருக்கிற உள்மனப் பகுதிக்கு நல்ல, அமைதியான அனுபவம். மெல்லக் காதலைப் பற்றிப் பேச்சுக் கொடுத்தேன். "வரவேற்க வேண்டிய விஷயம்!" என்றான் பார்த்தி. (இவன் வரவேற்பானா? பார்க்கனும்!) "வரதட்சணை, கொடுமை இதெல்லாம் அப்பதாண்டா ஒழியும்" என்றான்.

"ரொம்ப சரி!" (நல்லதாப் போச்சு!)

நான் இதுதான் தருணம் என்று பாசுவைப் பற்றிச் சொன்னேன். சீதாவைப் பற்றிச் சொன்னேன். நான் கேட்டதை, எனக்குப் பட்டதையெல்லாம் சொன்னேன். அவன் முகத்தில் லேசானதொரு அதிர்ச்சிக் கீற்று தெரிந்தாற்போலிருந்தது. அவனைச் சிந்திக்கவிடாமல் நான் தொடர்ந்து பேசினேன். அவன் அதையெல்லாம் கேட்டுக் கொண்டான். பிறகு மெதுவாக, மிக மெதுவாக "இதை நா எதிர்பார்க்கலை!" என்றான். பிறகு ஒரு நிமிடம் கழித்து "சீதாவை எங்க மாமா பையனுக்குக் கொடுக்கறதா பேச்சு இருக்கும் போலிருக்கே!" என்றான்.

எனக்கு 'சப்'பென்று போனது. சுதாரித்துக் கொண்டேன். மீண்டும் தயக்கத்தோடு வந்தது அவன் பேச்சு.

"நம்ம சிந்தனைங்கறது வேற! சுற்றியிருக்கறவங்களோட நிலைங்கறது வேற. இல்லையா?" என்றான்.

அவன் எனக்கு சமாதானம் சொல்லவில்லை. தனக்கே சொல்லிக் கொள்கிறான். ஹிப்பாகிரட்.



"ஓகே! ரகு, நான் முயற்சி பண்றேன்" என்று சொல்லிவிட்டு வேறு விஷயங்களைப் பேசத் தொடங்கினான்.

'இவன் கண்டிப்பாய் முயற்சி பண்ணப் போறதில்லை' என்று எண்ணிக் கொண்டேன்.

நான் பழகிய 'பார்த்தி' வேறு! அவன் லட்சியவாதி. நான் பாக்கற 'பார்த்தி' வேறு! இவன் யதார்த்தவாதி. இனி என்ன செய்ய! கடவுள்தான் 'பாசு'வைக் காப்பாற்ற வேண்டும். இந்த 'டீன் ஏஜி'ல் அவன் இதைப் பெரிய விஷயமாய் எடுத்துக் கொள்ளப் போகிறான். 'தாடி' வைக்கப் போகிறான். போதை.. என்று ஏதாவது ஆரம்பித்துவிடுவானோ. கவிதை எழுதுவான். திடீரென்று எனது மனம் சலித்துப் போனது.

ஒரு வாரம் வரை நான் 'பார்த்தி'யைப் பார்க்க முடியவில்லை. பாசு நம்பிக்கையோடு என் முகத்தில் பதில்களைத் தேடிக் கொண்டிருக்கிறான். இனி தாமதிக்க முடியாது என்ற சூழ்நிலையில் நான் முன்னைப் போலவே சீதாவைக் கல்லூரிப் பக்கம் வைத்துப் பார்த்தேன்.

அவள் கண் கலங்கியது. அண்ணா இது அப்பா அம்மா வரை கூடப் போகலை. போன வாரம் ஒரு நாள் எங்க பார்த்திண்ணா என்னிடம் தனியாகப் பேசினார். கண்டபடி திட்டிட்டார். 'இப்பவே, கல்யாணத்துக்கு அலையறயா? நம்ம ரஞ்சித்தோட (அவள் மாமா பையன்) இந்தப் பாசுவையெல்லாம் இணை போட முடியுமா? இனிமே இது தொடர்ந்தா நான் ரொம்ப பொல்லாதவனா இருப்பேன்'ன்னு மிரட்டினார்.

ப்ளீஸ், ரகு அண்ணா ! இந்தச் செயினைப் பாசு கிட்ட கொடுத்துருங்க. அவர் வாங்கித் தந்தது. எங்கண்ணனை எதிர்க்க எனக்குத் தைரியமில்லை. எதிர்த்து

செட்டிலாக எனக்கோ, பாசுவுக்கோ வழியோ வயசோ இல்லை. என்னால அவர் துன்பப்பட வேண்டாம்."

விடுவிடென்று நடந்தாள். கையிலிருந்த செயினைப் பார்த்தேன். நன்றாகத்தான் மின்னியது. ஆனால், பொன் னில்லையே! பாசுவிடம் செயினைக் கொடுத்தபோது நானும், அவனும் பட்ட பாட்டைச் சொல்லவே வார்த்தையில்லை.

ஆறு நாட்கள்! அவனை என்னோடேயே வைத்துக் கொண்டேன். தினமும் 'காம்போஸ்' கொடுத்துத் தூங்கச் செய்தேன். விட்றா கழுதையை பெரிய காதல்!" என்று இந்தத் தோல்வியை அலட்சியப்படுத்தச் சொல்லிக் கொடுத்தேன்.

பரீட்சைக்குப் படிக்கச் சொல்லி ஊக்குவித்தேன். என்னுடைய பராமரிப்பில் எப்படியோ ஒரு மாதத்தில் ஒரு மாதிரியாக மனம் தேறினான் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

இந்தக் காதல் விவகாரத்தில் பாசு, சீதா இவர் களுக்கு மட்டுமல்லாமல் தேர்ட் பார்ட்டியான எனக்கும் ஒரு இழப்பு ஏற்பட்டது.

ஆமாம்!

பார்த்தியிடம் முன்னைப் போல் என்னால் பழக முடியவில்லை. அவனது கோழைத்தனமான இன்னொரு பகுதியை நான் பார்க்க நேர்ந்துவிட்டதுதான் காரணம்.

அவர்கள் வீட்டு அந்தரங்கம் ஒன்று எனக்குத் தெரிந்தது அவனுக்கும் சங்கடமாக இருந்திருக்க வேண் டும். அவன் என்னை முழுக்கப் பகைக்க விரும்பாமல் மேலோட்டமாகப் பழகினான். நான் அவனிடம் முழுமை யான பழைய நட்புணர்வு இல்லாமல் மேலோட்டமாகப் பழகினேன்.

இனிமையான, இளமையான, இலக்கியத் தரம் வாய்ந்த கனவுகளையும் சிந்தனைகளையும் பங்கிட்டுக்



கொண்ட கந்தர்வ லோக சஞ்சாரம் போன்ற அந்த நட்பு?!

ஸ்டில் இட் இஸ் தேர்! பேச்சு வார்த்தை என்னும் அளவுக்கு சுருதி இறங்கி.

அதைவிட ஒன்று - பாசுவின் தோல்வி என்கிற அவமானம் என்னைக் கொஞ்சம் விலக்கியே வைத்து விட்டது.

ம்! காரியம் முடிக்கப் போன என் 'ஈகோ'வோ காயப்பட்டுத் திரும்பியது.

இதெல்லாம் நடந்து இப்போது ஐந்தாண்டு களுக்கு மேலாகி விட்டன. நான் இப்போது வேலையி லிருக்கிறேன். பாசுவும்கூட நல்ல வேலையிலிருக்கிறான். பாசுவுக்கும்கூடக் கல்யாணம் ஆகிவிட்டது. ஆனால், சீதாவின் மாமா பையன் ரஞ்சித் - வேறு பெரிய இடம் பார்த்துக் கொண்டான் என்று கேள்விப்பட்டேன். பார்த்திபன் வாயிலாக அல்ல!



# 17

## புரியுதா, புள்ளே?!

"த்தேய்.. செல்லா.. ஒரு டம்ளரு தண்ணி கொண்டா புள்ளே! என்னா வெயிலு.. என்னா.. வெயிலு" என்று ஆசுவாசப் பெருமூச்சு விட்டபடியே உள்ளே நுழைந்த அப்பாச்சிக் கவுண்டர் ஈஸிசேரில் சாய்ந்தார்.

"தண்ணி குடிக்காட்டி என்னே! எளநியே குடிக் கறது ஏம்மாமோய்!" என்றபடி உள்ளிருந்து வந்தாள் வேலாத்தாள்.

"ஆரது? வேலாளா? வா, வா. எப்ப வந்த புள்ளே? வீரப்பன் நல்லாருக்கானா?"

"இருக்காருங்க. இங்கியென்னமோ மருதானூட்ல சீரு செஸ்சு போடறமின்னாங்க. அதான் வந்தது வந்தம். இங்கியும் வந்து நாளாச்சில்ல, பாத்துப் போட்டுப் போலாம்னு வந்துனுங்க."

"அத்தானே பாத்தன். சோழியன் குடுமி சும்மா ஆடுமான்னு, மாமனூட்டுக்கு ஒரம்பரைக்கு வந்தியான்னு பாத்தா...?"

"நானாச்சும் வாரன். ஐயனும், அம்மாளும் ஒரு நா, ஒரு பொழுது வந்திங்களாக்கும்?" என்று வேலாத்தா சொல்லிக் கொண்டிருக்கும்போதே கவுண்டரின் துணைவி செல்லம்மாள் தண்ணீர் கொண்டு வந்து டீபாயின் மேல் வைத்தாள். கவுண்டர் கண்ணைச் சிமிட்டியபடியே, 'ம்.. அதுக்குத்தான் ஒன்னயப் புடிச்சுப் போடாமப் போச்சு அப்பவே" என்றார்.

உடனே செல்லம்மாள் ஒரு வெட்டு வெட்டிக் கொண்டு, "ஆமா, அப்பம் மக்க எல்லாம் பொண்ணுக் கேட்டுகிட்டு நடையா நடந்தது மறந்து போச்சாக்கும்?!" என்றாள்.

கவுண்டரும், வேலாத்தாவும் சிரித்தார்கள். அதே நேரத்தில் உள்ளே நுழைந்தான் அருணகிரி. தழையக் கட்டிய பாலியெஸ்டர் வேட்டியின் ஒரு நுனியைக் கையில் மேலோட்டமாகப் பிடித்துக் கொண்டு வந்தவன், ஊரிலிருந்து வந்த சித்தியைக் கண்டதும், "வாங்க, எப்ப வந்தீங்க?" என்று பதவிசாகப் பதுங்கினான்.

"இப்பத்தாங்கண்ணு வந்தன். என்னொ? காலேசு லீவாக்கும்?"

"ஆமாங்! ஒரு நாலு நாளைக்கு" என்று புன்னகைத்துக் கொண்டே, அப்பாவை நோக்கித் திரும்பி



னான். "ஏனுங்! டவுனுக்குப் போறனுங்க ஒரு வேலையா, சாயங்காலமா வந்துருவனுங்க" என்றான்.

கவுண்டர் அமர்த்தலாக "ம்.." என்று உறுமினார். "சேரியானா, போயிப்போட்டு வரைல, கந்தன் என்னமோ மோட்டருக்குக் காயிலோ என்னவோ வாங்கணுமின்னானா! கேட்டுட்டு வாங்கிக்க" என்றார்.

"செரீங்!" மிக ஒதுக்கமாகப் போனவன், சித்தியிடம் "சித்தி! காலேஜுக்குப் போனா பரிளாவைப் பாப்பனுங்க. ஏதாச்சும் சொல்லணுமா?" என்றான்.

"என்னத்தைச் சொல்றது. இப்பத்தானே ஞாயித்துக் கெழமை வந்து போட்டுப் போனா. கேட்டமின்னு வேணா சொல்லு!" என்றாள் சித்தி.

அருணகிரி நகர்ந்ததும், "மாமோய், ஒங்களை அப்ப பாத்தாப்பல அப்படியே இருக்கானாக்கும்!" என்று கொஞ்சம் பூரித்துக் கொண்டாள்.

" பய நம்மளைப் பாத்தா இந்தப் பம்மு பம்மறானில்லே! காலேசுக்குள்ள பெரிய்ய வேலையாமா, வேலா!" என்றார் கவுண்டர் பெருமிதத்துடன்.

அங்கிருந்து புறப்பட்ட அருணகிரி, சும்மா சொல்லக் கூடாதுதான்- 'பெரிய்ய' வேலைதான் செய்தான்.

அந்த மகளிர் கல்லூரிக் காம்பவுண்டுக்கு முன்னால் பைக் நின்றது. உள்ளே போய் தங்கை பரிமளாவுக்காகக் காத்திருந்தான். பரிமளா வந்தாள். வரும்போதே உதட்டைப் பிதுக்கிக் கொண்டு, "ஐயோ பாவம். அசட்டு அண்ணாவே! வாஸந்தி இன்னிக்கு ஊருக்குப் போயிட்டாளே !" என்றாள்.

அருணகிரிக்கு உள்ளூர ஏமாற்றம்தான். "நான் ஒண்ணும் வேற யாரையும் பாக்க வர்ல. உன்னைத்தான் பாக்க வந்தேன்" என்றான்.

"அப்பட்டமாப் பொய் சொல்லாதே, என்னையும் பாக்க வந்தே. அப்படித்தானே. சும்மா கலாட்டாவுக்

காகச் சொன்னேன். வாஸந்தி, இருக்கா. வந்துருவா" என்று சிரித்தாள்.

பொய்க் கோபத்துடன் கையை ஓங்கப் போனவன் சுற்றுப்புற சூழ்நிலையை உத்தேசித்துக் கையைக் கீழே போட்டு விட்டான். அதற்குள்ளாக அங்கு வந்த வாஸந்தி நாணம் குமிழியிட "வாங்க எப்ப வந்திங்க" என்றாள்.

"நா வந்துங்க... 24 வருஷம்.. பத்து மாத.." என்று இழுத்தவனைத் தடுத்த பரிமளா "ஐயே, அறுக்காத ! நான் ஐஸ்க்கிரீம் வாங்கிட்டு வரேன்" என்று நகர்ந்தாள்.

"பரிமளா ரொம்ப டிப்ளமாடிக் இல்லே?" என்றான் அருணகிரி. வாஸந்தி அசடு வழிந்து கொண்டு நின்றாள். இருவரும் சங்கடமான சந்தோஷத்துடன் நேரத்தை மௌனத்தில் கரைக்கையிலேயே பரிமளாவும் வந்தாள், ஐஸ்க்ரீம் கோப்பைகளுடன். கண்களில் குறும்பு கூத்தாடியது.

"அப்புறம், அண்ணா?" என்றாள்.

"ஒண்ணுமில்லடா. அம்மா இன்னிக்கு நம்ம வீட்டுக்கு வந்துச்சு. அப்பறம், நானும் உன்னையத் திரு விழாவுக்குக் கூப்பிட வந்தேன். நாளன்னிக்கு நேரா நம்மூருக்கு வந்துரு. நீங்களும் வாங்க" என்றான்.

"ஏய்.. என்னதிது. நான் எப்ப சொன்னேன்" என்று திகைத்த வாஸந்தியைத் தட்டிக் கொடுத்த பரிமளா, அருணகிரியைப் பாத்து, "நீ புறப்படு அண்ணா, நாங்க கண்டிப்பா வரோம்" என்று வெற்றிகரமாக உறுதி யளித்தாள்.

**அ**ப்பாச்சிக் கவுண்டர் அறையின் நடுநாயகமாய் அமர்ந்திருந்தார். பஞ்சாயத்து நடந்து கொண்டிருந்தது. அறையின் ஒரு ஓரத்தில் அருணகிரிகூட நின்று வேடிக்கை பார்த்தான். பரிமளாவும், வாஸந்தியும் உள்ளே ஒரு அறையிலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்



டிருந்தார்கள். அப்பாச்சிக் கவுண்டரின் குரல் அறையை ஆக்கிரமித்தது.

"இப்ப என்னடா சொல்ற! உன்னால சீரு செய்ய முடியுமா முடியாதா?"

கேள்வி கேட்கப்பட்ட முருகன் பேசாமல் நின்றான். இன்னொருவன்தான் சொன்னான்.

"இவனால முடியாம என்னங்க! நம்ம ஊருக் காரங்களே கஞ்சப் பயலுகன்னு அவனுக சாடை வுடறா னுக மாமா!" என்றான்.

"பின்ன பேசாமயாடா இருப்பானுக! இத பாரு முருகா, உன்னால செய்ய முடியாட்டி வுடு. துண்டு போட்டு வசூல் பண் உனக்காக நான் பண்றன் நின்னு. சாதி, சனத்துக்குள்ள மருவாதி வேணுமடா, செய்யற சீரைச் செஞ்சு போட்டு ஓங்க சண்டையுஞ் சவடாலும் வச்சுக்கங்கடா. அப்பாச்சிக் கவுண்டன் இருக்கானே, அவன் சொல்லக்கூடாதான்னு நாளைக்கு சாதியில எவனும் பேசக்கூடாது, என்ன, நாஞ் சொல்றது?" என்று கவுண்டர் தொடரு முன்பே,

"செரீங்! உங்க வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நான் செஞ்சு போடறவனுங்க" என்றான். பரிமளா முகமெல் லாம் சிரிப்பாக வாஸந்தியின் முகத்தைத் திரும்பிப் பார்த்தாள். அவள் நெற்றியில் சிந்தனைக் கோடுகள் அடர்ந்திருந்தன!

**சி**ல நாட்கள் கழித்து,

கவுண்டர் முன்னறையில் அமர்ந்திருந்தார். உள்ளே பாத்திரங்கள் 'லொட்' 'லொட்'டென்று வைக்கப் படும் சத்தமும், முணுமுணுப்புச் சத்தமும் கேட்டு விசித்திரமான பார்வையைக் கண்ணில் தேக்கிக் கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தார்.

செல்லம்மாள் முணுமுணுத்துக் கொண்டு நடந்தாள். "ஒரு நா, ஒருத்த ஒரு சொல்லு சொல்ல நடந்துருப்பனா. கொலமென்னா, பேரன்னா! இன்னிக்கு என் தலையெளுத்து இப்படியாச்சே.." என்று.

கவுண்டர் குரல் கொடுத்தபடி உள்ளே போனார். "அட! என்னொ, சொல்லிப் போட்டு பிலாக்கணம் வைக்கறது!" என்றார்.

"என்ன சொல்றது. ஒங்க அருமை மகனை அன்னிக்கு வந்தாளே அவகூட எங்கியெங்கெயோ பாத்தாங்களாமா, ஊர்க்கவுண்டன் புள்ளையின்னா, எப்படி வேணா செய்யலாமான்னு ஒவ்வொருத்தியும் இடிச்சுக் கறளுக.."

புலம்பிக் கொண்டே நின்ற மனைவியைப் பார்த்து நின்ற இடத்தில் ஒரு நிமிடம் உறைந்த கவுண்டர், உடனடியாக கந்தனை அனுப்பி அருணகிரியை அழைத்து வரச்செய்தார்.

மறுநாளெல்லாம் அருணகிரி எதிர்ப்பார்ப்புடன் காத்திருந்தான். மாலையில்தான் கவுண்டர் மெதுவாக ஆரம்பித்தார். "அருணகிரி, வேலா சித்தி அன்னிக்கு வந்தாளே, அவகிட்ட, முத்துவேலப்பர் சொல்லியனுப்பினாராமா. பெரிய பொண்ணுக்கு கண்ணாலம் செஞ்சு போடலாமின்னு இருக்காங்களாமா! நான் ஒன்னையக் கேட்டுப்போட்டுச் சொல்லலாமின்னு.."

அருணகிரி இடைமறித்தான். "இல்லீங்கய்யா.. அவங்களை வேற எடம் பாக்கச் சொல்லீருங்க.." என்றான் தீர்மானமாக.

"ஏன். அப்பத்தான் பட்டணத்துல சுத்தறதுக்குத் தோது இல்லியா?" என்றார் கவுண்டர், எல்லா விஷயமும் ஒரு நொடியில் புரிந்து போனது அவனுக்கு. விஷயம் காதுக்கு எட்டியே விட்டது.



"என்னடா பாக்குற? அப்பாச்சிக் கவுண்டனுக்கு ஆயிரங் கண்ணுடா!" என்றார்.

"இல்லீங்கய்யா நான் அந்தப் பொண்ணைத்தான் கட்டிக்கலாம்னு இருக்கறனுங்க!" என்றான் அருணகிரி இரும்புக் குரலில்.

கவுண்டரின் கண்கள் சிவந்தன. "டேய், இது ஒரு நாளைல முடியறதில்லைடா! யோசிச்சுச் சொல்லு. காலைல, இல்லே பத்து நா கழிச்சு சொல்லு. அப்படித்தான் அதே பொண்ணுன்னா, என்ற சொத்துல சல்லிக்காசு பேறாதுடோய். ஞாபகம் வச்சுக்க!" என்று எழுந்து உள்ளே போய் விட்டார்.

வெகுநேரம் உறக்கமின்றித் தவித்து விடியற்காலை உறங்கிப் போன கவுண்டர் ஏழு மணிக்கு எழுந்து வெளியே வந்தபோது கந்தன் ஒரு காகிதத்தை நீட்டினான், "சின்னய்யா குடுக்கச் சொல்லிப் போட்டு வெடியாலயே புறப்பட்டுப் போனாங்க" என்று சொல்லியபடி.

கடிதத்தைப் பிரித்தார்,

'அய்யாவுக்கு,

அப்பாச்சிக் கவுண்டன் மகனாக இருப்பதைவிட ஆண்மகனாக இருப்பதையே விரும்புகிறேன்.

என்றும் தங்கள்,

அருணகிரி,

என்றிருந்தது. அவ்வளவே.

இது நடந்து ஒரு வாரமிருக்கும். ஒரு நாள் கவுண்டர் முன்னறையில் தனது ஆஸ்தான இருக்கையில் அமர்ந்திருக்கையில் ஒரு கார் வந்தது. அருணகிரியும், வாஸந்தியும் இறங்கினார்கள் வாஸந்தி தயக்கமும், பயமுமாய்த் தொடர்ந்தாள்.

"அய்யா, காலைல நாங்க ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிட்டமுங்க" என்றபடி நின்றான் மகன். உள்ளே

யிருந்து செல்லம்மாள் திகிலோடு ஓடி வந்தாள், என்ன நடக்கப்போகிறதோ... என்று! ஒன்றும் நடக்கவில்லை.

கவுண்டர் ஐந்து நிமிடம் அமைதியாக இருந்தார். பின்னர் கந்தனைக் கூப்பிட்டார். "டேய், நம்ம ஐயரைக் கூட்டியாடா, கண்ணாலத்துக்கு நாள் பாக்கணும்னு" என்று விரட்டினார். செல்லம்மாவைப் பார்த்து, "புள்ளைய உள்ள கூட்டிட்டுப் போ, பரிமளாவுக்கு ஆளனுப்பு. அது அப்பனம்மா அட்ரஸ் கேட்டு தந்தி குடுக்கச் சொல்லு!" என்றார். செல்லம்மாள் சொன்னதைப் பேச்சில்லாமல் செய்கையிலேயே, வாஸந்தி அருணிடம் கண்ணால் பேசி அனுமதி வாங்கிக் கொண்ட பின்பே உள்ளே செல்வதை அடிக்கண்ணால் கவனித்துக் கொண்டு லேசான முறுவலுடன் மீசையைத் தடவி விட்டுக் கொண்டார்.

கல்யாண களேபரம் ஓய்ந்து, அருணும் வாஸந்தியும் பெண்வீட்டுக்குப் போயிருந்தார்கள். கவுண்டரும், செல்லம்மாவும் உட்கார்ந்திருந்தார்கள். வெற்றிலை மடித்துக் கொண்டே செல்லம்மாள் கேட்டாள்.

"ங்கோய்! நான் ஒண்ணு கேப்பனுங்க. கோபப் படுவீங்களா?" என்றாள்.

கவுண்டர், 'உல்லாச மூடில்' இருந்தார் போலும், "சும்மா, கேளு புள்ளே!" என்றார்.

"சொத்துல பைசா கெடையாது. அப்படி இப்ப டீன்னீங்க. அப்பறமென்னமோ, பேசாம கண்ணாலம் கட்டி வெச்சிட்டீங்களா?" என்றாள்.

கவுண்டரின் முகத்தில் ஒரு தீவிரத்தனம் படர்ந்தது. "ஆமா, புள்ளே அது அப்பாச்சிக் கவுண்டன் மகனுக்குச் செஞ்ச கல்யாணமில்ல. ஒரு ஆம்பள இன்னொரு ஆம்பளைக்குச் செஞ்ச மருவாதி. நம்பி வந்த அந்தப் புள்ளையைக் கைவிட்டுப் போட்டு வந்திருந்தான்னா, நம்ம மகன் நம்மட பேச்சைக் கேட்டானேன்னு எனக்குச் சந்தோஷந்தான். ஆனா, ஒரு பச்சைப் புள்ளய ஏமாத்திப் போட்டானேன்னு உறுத்தும் புள்ளே. ஆனா, என்ற மகன் நிமிர்ந்து நின்னான் பாத்தியா, எங்க பரம்பரையிலயே யாரையும் ஏமாத்தி எங்களுக்கு பளக்கமில்ல புள்ள. எம்மகனும் அதை நிரூபிச்சுப் போட்டான். அதனாலதான் கண்ணாலத்தை அப்படித் தடபுடலாப் பண்ணுனன் என்னோ! புரியுதா? புள்ளே" என்றார் கவுண்டர்.

செல்லம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால், கவுண்டருக்கு அந்தக் கல்யாணத்தில் வருத்தமில்லை. சந்தோஷந்தான் என்ற நிறைவு மட்டும் ஊற்றெடுத்தது.



# 18

## வானமே கூரை

இன்டர்நெட்டில் மேய்ந்து கொண்டிருந்த சண்முகம் மணியைப் பார்த்தார். நள்ளிரவு பன்னிரண்டு மணி.

பாழாய்ப் போன தூக்கம் வரமாட்டேன் என்கிறது. இப்படித்தான் சமீப காலமாகத் தூக்கத்தைத் துரத்திப் பிடிக்க வேண்டியிருக்கிறது.

தனிமை உணர்வு தன்னைத் தின்றுகொண்டிருப்பதை உணர்ந்தார். மகன் ஆஸ்திரேலியாவில் கம்ப்யூட்டர் இன்ஜினீயராகக் குடும்பத்தோடு செட்டிலாகிவிட்டான். அப்பாவுடன் பேசுவதற்காகவும், பார்ப்பதற்காகவும் 'வெப்காமிரா' கூட செட் பண்ணிக்

கொடுத்திருந்தான். ஆனால், பாவம் நேரம்தான் கிடைக்கவில்லை. இந்தக் கிழட்டு அப்பனிடம் பேசியே இரண்டு மாதம் இருக்கும்.

மகள் கோயம்புத்தூரில் கணவன் வீட்டில். இரண்டு நாளுக்கொருமுறை போனில் பேசுவாள். கொஞ்சம் ஆறுதலாய் இருக்கும். நமது வறட்டு சம்பிரதாயம் அவரை மகளோடு சென்று தங்கவிடாமல் தடுத்து விட்டது.

என்ன இல்லை அவருக்கு!

பிரமாண்டமான பங்களா.

கூப்பிட்ட குரலுக்கு ஆள்.

சமையலுக்கு சமையல்காரன். எல்லாந்தான் இருந்தது. மனைவியைத் தவிர. மனைவி இறந்து பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன.

ஆனால், ஓய்வுபெறும்வரை பணி, அவரைக் கவலைகளிலிருந்து தப்புவித்தது.

டெபுடி கலெக்டர் ஆகச் சென்னையில் கோலோச்சினார் வேலைப் பளுவும், பொறுப்பும் அவருக்கு வேறெந்த கவலையையும் நினைவு படுத்தவே இல்லை. நேரம் போதாமல் இருந்தது.

அரசாங்க இயந்திரத்தில் நிறையப் பேரைத் திருப்திப்படுத்த வேண்டிய அவசியம் இருந்ததால் பொழுது அவருடையதாக இருக்கவில்லை. இறக்கை கட்டிக் கொண்டு பறந்து கொண்டிருந்தது. திடீரென்று ஒரு நாள்!

எல்லா அதிகாரத்துக்கும் முற்றுப்புள்ளி விழுந்தது. 'ரிடையராகி விட்டாய்' என்று சொன்னார்கள்.

'ஆஹா! ஓய்வெடுத்துக் கொள்ளலாம்' என்று சந்தோஷமாய்ப் படுக்கைக்குப் போனார்.



வழக்கம் போல் காலை ஐந்து மணிக்கெல்லாம் விழிப்பு வந்தது.

ஹிந்து பேப்பர்காரன் வந்து விசிறியடித்துவிட்டுப் போனான்.

படித்தார், தமிழ்ப் பத்திரிகைகள் வந்தன. படித்தார்.

மீண்டும் உறங்கப் போனார்.

எட்டு மணிக்கு எழுந்தார். எல்லாவற்றையும் நிதானமாகச் செய்தார். மீண்டும் ஒரு முறை பத்திரிகைகளைப் படித்தார்.

டி.வி.-யில் பழைய படம் பார்த்தார்.

இரண்டு நாட்கள் சுகமாக இருந்தன.

மூன்றாம் நாள் முதல் வெறுப்பாய் இருந்தது. மகனிடம் பேசினார். முதலில் ஓரிரு முறை மகன் நேரம் செலவு செய்து பேசினான்.

இப்போதெல்லாம் "டாட் ஐ யம் இன் எ ஹர்ரி, அப்புறம் கூப்பிடறேனே?" என்கிறான். இரண்டு வரிச் செய்திகள் அவ்வப்போது இன்டர்நெட்டில் வந்து விழும். அப்படித்தான் இப்போது ஏதாவது மகன் செய்தி அனுப்பியிருப்பான் என்று இந்த நள்ளிரவில் துழாவிக் கொண்டிருந்தார். ஒன்றும் வரவில்லை.

'சை' என்று இருக்கையிலிருந்து எழுந்தார். யாராவது தனது இருத்தலைப் புரிந்துகொள்ள மாட்டார்களா என்று காத்திருத்தல் என்பது எவ்வளவு கொடுமையானது என்பது புரிந்தது.

எத்தனையோ முறை சகுந்தலா ஏதாவது முக்கிய விஷயம் பேச வேண்டும் என்று வந்து நின்றபோதெல்லாம் 'வேலை வேலை' என்று அவளைப் புறக்கணித்து விட்டு ஓடியிருக்கிறோம்? மகனையும், மகளையும் தூங்குகிற நேரத்தில் கொஞ்சிவிட்டுப் போகிறேன் என்று

ஓடியிருப்போம். அந்த நினைவுகளெல்லாம் சங்கிலி போல் வந்து சிந்திக்க வைத்தன.

பழைய அலுவலக நண்பர்களைப் பார்க்க சென்றார். பதவியில் இருந்த போது 'ஐயா! வர்றாங்க!' என்று ஒதுங்கியவனெல்லாம் "என்ன, சார், எப்படியிருக்கீங்க!' என்று மிதப்பாக விசாரித்தான். அதனால் இப்போதெல்லாம் காரியத்துக்காகப் பழகியவர்களின் தொடர்புகளைக் குறைத்துக் கொண்டார். அவர்களின் செயற்கையான நடத்தைக்குத் தனிமையே தேவலாம் போல் இருந்தது. உலகின் போலித்தனங்களும், உறவுகளின் உள்ளீடற்ற தன்மையும் அவரை வெகுவாகத் தாக்கின.

திடீரென்று ஒரு நாள், மறுநாள் காலை வாக்கிங் போவதாகத் தீர்மானித்தார் சரியாகக் காலை 5 மணிக்குக் கிளம்பினார். அன்றிலிருந்து தினமும் அது தொடர்ந்தது.

அந்த வளைவுக்குச் செல்லும்போது அரை மணி நேரமாகி விடும். சற்று நேரம் ஒரு தேநீர்க் கடையில் அமர்ந்துவிட்டுத் தேநீர் குடித்துவிட்டுத் திரும்ப நடந்து வருவார்.

அப்போதுதான் அவன் அங்கு குடிவந்த நேரம். அந்தத் தெருமுனையில் தனது சக்கரப் பலகையில் அமர்ந்து கொண்டு செயலற்ற கால்களை வைத்துக் கொண்டு அமர்ந்திருப்பான். சில சமயம் படுத்திருப்பான்.

பக்கத்திலோ ஒரு நாள் பரந்தாமன் சிரிப்பார். மறுநாள் நடராசர் நடனம் ஆடுவார். மற்றொரு நாள் இயேசு சிலுவையில் அறையப்பட்டு உலகத்துக் கருணையை எல்லாம் முகத்தில் தேக்கித் தொங்குவார். அடுத்த நாள் பளீர் வெள்ளையில் ஒரு மகுதி மினுமினுக்கும், ராமகிருஷ்ணர், விவேகானந்தர் எல்லாம்கூட அவன் கைவண்ணத்தில் உயிர்பெறுவார்கள். அற்புதமான ஓவியங்கள் உயிர்ப்பெற்று நிற்கையிலே அவன் மட்டும் உயிரற்ற சவம்போல ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பான்.



திறமை எங்கெல்லாம் புதைந்து இருக்கிறது? சண்முகத்துக்கு வியப்பாய் இருக்கும்.

ஒரு நாள் இவர் போகும்போது அவன் விழித்துக் கொண்டிருந்தான்.

"வாப்பா, தேநீர் வாங்கித் தருகிறேன்" என்று அழைத்தார்.

தயங்காமல் வந்தான். தேநீர் வாங்கிக் குடித்துவிட்டுத் தன்னிடத்துக்கு வந்தான். பின்னர் அவரது வாக்கிங் போலவே இதுவும் வழக்கமானது.

"என்ன ஓவியரே?" என்று அவரும், "வாக்கிங் ஐயா!" என்று அவனும் பரஸ்பரம் அழைத்துக் கொள்வார்கள்.

அவர்களுக்கிடையே ஒரு நட்பு பூத்தது.

சில நேரம் அந்தக் கடையிலேயே அவர் பெஞ்சிலேயும், அவன் தனது சக்கரப்பலகையிலும் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள்.

அவனிடத்திலே ஒரு நாய் இருந்தது. இவரைத் தெருக்கோடியில் பார்த்தாலே அவனைப் போய் எழுப்பி விடும்.

சண்முகம் அதைப் பார்த்துப் புன்னகையோடு நடந்து கொண்டிருக்கையில் அவன் தெருக்குழாயில் முகம் கழுவிக் கொண்டு தேநீர்க் கடைக்கு வந்து விடுவான்.

ஒரு நாள், "இந்தாப்பா! உனக்கு ஒண்ணு கொண்டு வந்திருக்கேன்" என்று கலர் சாக்பீஸ் டப்பாவை நீட்டினார். அவன் மிக மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டான்.

மெதுவாகப் பேசுவான். பேசுகிற தமிழ் மட்டும் மாநில வாடையுடன் இருக்கும்.

அதிகப் பணம் கொடுத்தால் வாங்கிக் கொள்ள மாட்டான். அதனால் சண்முகம் "இந்தாரும், ஓவியரே, உமது நேற்றைய ஓவியத்துக்கு எனது பணமுடிப்பு" என்று ஒரு இருபத்தைந்து ரூபாயைக் கவரில் போட்டுக் கொடுப்பார்." மிகச் சிறப்பாக ஓவியம் வந்திருக்கிற நாட்களில் இப்படிக் கொடுத்தால் அவனும் வாங்கிக் கொள்வான்.

"ஒரு சிறிய அறை பார்த்துத் தருகிறேன். தங்கிக் கொள்கிறாயா?" என்று ஒரு நாள் கேட்டார்.

"இதைவிடப் பெரிய கூரை எது?" என்று வானத்தைக் காட்டிக் கேட்டான். அதற்குப் பிறகு சண்முகம் அவன் போக்கிலேயே விட்டு விட்டார்.

இன்று விழிக்கும்போதே மனம் சரியில்லை சண்முகத்துக்கு.

நேரம் வேறு ஆகிவிட்டது. காகங்கள் கரைய ஆரம்பித்து விட்டன. லேசான வெளிச்சம்கூட வந்து விட்டது.

சண்முகம் நடந்தார். மூலையில் திரும்பும்போதே ஏதோ வித்தியாசமாகப் பட்டது. 'ஓவியர்' படுத்துக் கிடந்த விதம் சரியாயில்லை.

நாயும் கூட அவன் முகத்திலே மோதி எழுப்பிக் கொண்டிருந்தது. அவன் அசையவில்லை.

அவனது சட்டைப் பாக்கெட்டில் வெள்ளையாக ஏதோ தெரிந்தது. சண்முகம் அருகில் சென்று பார்த்தார். ஓவியர், பரந்தாமன் படத்தை வரைந்துவிட்டு அதன் அருகிலேயே கிடந்து உயிரை விட்டிருப்பது புரிந்தது.



சட்டைப் பாக்கெட்டில் துருத்திக் கொண்டிருந்த கடிதத்தை எடுத்தார். அழகான ஆங்கிலத்தில் எழுதியிருந்தது.

'வாக்கிங், ஐயாவுக்கு,

பல முறை நான் யார் என்று தெரிந்துகொள்ள நீங்கள் முயற்சி செய்திருக்கிறீர்கள். நான் யாரென்று கூறவில்லை.

தமிழகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட எங்கள் குடும்பம் குஜராத்தில் வசித்தது. கொடிகட்டிப் பறந்த குடும்பம் அது. ஆனால், பூகம்பம் என் கண் முன்னாலேயே என் பங்களாவைத் தரைமட்டமாக்கி எனது மனைவியை, மகனைப் பலி வாங்கி விட்டது. அடுத்த நாள் காலை எனது இடிந்து கிடந்த பங்களாவுக்கு எதிரே வரிசையில் ரொட்டிக்காக நின்றுகொண்டிருந்தேன். அப்போதுகூட நான் நம்பிக்கை இழக்கவில்லை.

அங்கிருந்து குஜராத்தின் வேறு பகுதிக்குச் சென்று மானத்துடன் உழைத்துபிழைத்தேன்.

மீண்டும் விதி என்னைத் தாக்கியது. மதக் கலவரத்தி ரயிலில் வந்து கொண்டிருந்த என்னைத் தாக்கினார்கள். எந்த நரம்பில் அடிப்பட்டதோ எனது கால்கள் செயலிழந்தன. வெறித்தனமாக ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்ட மக்களைப் பார்த்த வேதனை என்னை உலுக்கியது.

நொந்த உள்ளத்துடன் சென்னை வந்து சேர்ந்தேன். நான் பார்க்காத செல்வமா? ஆடம்பரமா? அத்தனையும் நொடியில் அழிந்துபோனபின் வானமே கூரை, பூமியே சொர்க்கம் என்று வாழத் துவங்கினேன் . நான் யார் என்பதையே மறந்து வெறும் மனிதனாக உயிரை ஒட்ட வைத்துக் கொண்டிருந்தேன்.

வெறுமைக்கும், தனிமைக்கும் மட்டும் பலியாக மாட்டேன் என்று விரதம் வைத்துக் கொண்டேன்.

பிறர்க்கு மகிழ்வைத் தரவே இந்தத் தரை ஓவியங்களை வடித்தேன். எனக்கு நெஞ்சு வலிக்கத் தொடங்கிய இந்த நிமிடம் வரை நான் உபயோகமாகவே வாழ்ந்தேன்.

உங்களோடு பழகியதில் எனக்கு மகிழ்ச்சி! உங்களிடம் ஒரு உதவி கோருகிறேன். எனக்குக் கிடைத்த காசுகளைச் சேர்த்து ஒரு ஐயாயிரம் ரூபாயை டீக்கடைக் காரரிடம் கொடுத்து வைத்துள்ளேன். எனது அந்திமச் சடங்குகள் ஆகும் செலவு போக மீதத்தை 'உதவும் கரங்கள்' போன்ற ஏதாவது ஒரு அமைப்புக்குக் கொடுத்துவிட வேண்டிக் கொள்கிறேன்.

நன்றி!

இப்படிக்கு,

என்று ஓவியர் குறித்திருந்த பெயரைப் படித்தவுடன் சண்முகத்திற்குத் திகைப்பேற்பட்டது.

குஜராத்தில் புகழ்பெற்ற குடும்பம் அது.

சண்முகம் தன் செலவிலேயே அவருக்கு அந்திமக் கிரியைகள் செய்தார். அவரது பணத்தை அப்படியே உதவும் கரங்களில் சேர்த்தார்.

இந்தப் பணிகள் முடிந்த பிறகு ஒரு மாலை நேரம் டெலிபோன் டைரக்டரியை எடுத்து ஒரு லிஸ்ட் எடுத்தார்.

இரவாகி விட்டது.

'ஐயா, என்ன செய்கிறார் இன்னும் சாப்பிட வராமல்' என்று வேலைக்காரன் வந்து எட்டிப் பார்த்த போது,

'உதவும் கரங்கள்'

'விச்ராந்த்'

'சிவானந்த குருகுலம்'



'ரக்ஷா முதியோர் இல்லம்... கோவை' என்று பெரிய பட்டியலை வைத்துக் கொண்டு விலாசம் தேடிக் கொண்டிருந்தார்.

"ஐயா, சாப்பிடலீங்களா?" என்ற முருகேசனிடம், "நீ சாப்பிட்டு எனக்கு ஹாட்போக்கிலே வை. நேரம் கிடைக்கும்போது வந்து சாப்பிடுறேன். இப்ப எனக்கு நிறைய வேலையிருக்கு" என்றார் தலையே நிமிராமல்.

ஆமாம், அவருக்கு நிறைய வேலையிருக்கிறது.

# 19

## நீ நீயாக!

வழக்கம் போல பஸ்ஸில் கூட்டம் பிதுங்கி வழிந்தது.

இதயமொழிக்குக் கோபம் உள்ளே பொங்கியது. பொங்கி என்ன செய்ய? அப்பா மேல்தான் கோபப்பட வேண்டும். அப்பா மேல் கோபப்பட்டுக் கொள்ளலாமேயன்றி வெளியே காட்ட முடியாது. செல்லுபடியாகாது.

வீட்டில் கார் இருக்கிறது. முதலில் அலுவலகம் வீட்டுக்கு அருகிலேதான் இருந்தது. அதனால் ஸ்கூட்டியிலேயோ, காரிலேயோ போய் விடுவாள். ஆனால், கம்பெனியை இப்போது பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் மாற்றிவிட்டார்கள். நல்ல வேலை- விட விருப்பமில்லை.

"அவ்வளவு தூரம் காரில் போக வேண்டாம். டிராஃபிக் அதிகம். ஸ்கூட்டியும் எடுக்காதே! பஸ்ஸிலும்

போய்ப் பழக வேண்டும் "என்றார். அதனால்தான் பஸ்ஸில் வரவேண்டியுள்ளது.

உள்ளுக்குள்ளே யோசித்துக் கொண்டே திரும்பி னாள். அப்போதுதான் கவனித்தாள் அந்த இளைஞனை!

இரண்டு மூன்று நாட்களாகத்தான் இந்த பஸ்ஸில் வருகிறான். பார்த்தால் பஸ்ஸில் வருகிற ஆள் மாதிரித் தெரியவில்லை. அது சரி! பஸ்ஸில் வருகிற ஆள். நடந்து போகிற ஆள் என்று முகத்தில் எழுதி ஒட்டியிருக்குமா என்ன?

தனக்குள் சிரித்துக் கொண்டாள். தன் பார்வை அவன் மேல் படிகிற அதே நேரத்தில் அவனது பார்வை யும் தன் மேல் படிந்தாற்போல உணர்ந்தாள்.

வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ஓரிரு வினாடிகள் கழித்துத் தன் பார்வை மீண்டும் அவன் மேல் படிவதை அவளால் தடுக்க முடிய வில்லை...! அவன் கண்களில் குறும்பு மின்னினாற்போல இருந்தது.

எப்போதும் இதயமொழி பஸ்ஸின் நடுப் பகுதிக்குப் போய் விடுவாள். கொஞ்சம் 'இடிபாடுகள்' குறைவு என்று எண்ணம்.

ஒரு மாதமாகத்தானே பஸ்ஸில் போகிறாள். வருடக்கணக்கில் போகிறவர்களாக இருந்தால் கூட்டம் இருந்தாலும் அதைக் கண்டுகொள்ளாமல் தன்னை குறுக்கி, பக்கவாட்டில் பயணித்து என்று பலவித உத்தி களைக் கையாண்டு ஒரு இடைச்செருகலாகத் தன்னை செருகிக் கொள்ளும் கலையைக் கற்றிருப்பாள். அந்த லாவகமெல்லாம் இன்னும் கைவந்து சேரவில்லை.

ரங்கநாதன் தெருவில் கால் வைத்தால் போதும், தெருவின் அந்தக் கோடிக்குக் கொண்டு போய்க் கூட்டம்



விட்டு விடும் என்பார்களே... சென்னைக்காரர்கள் அது நினைவுக்கு வந்தது.

அப்போதுதான் கவனித்தாள். பேருந்து மக்கள் தன்னைத் தள்ளிக்கொண்டே வந்து அந்த இளைஞன் அமர்ந்திருந்த இருக்கைக்கருகே கொண்டு வந்து விட் டார்கள் என்று.

அட! ஆண்டவா! இப்போது பார்த்துத்தானா அவன் பக்கத்திலே அமர்ந்திருந்த ஆள் எழுந்திருக்க வேண்டும். இடம் காலியானவுடன் அவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"மேடம்! உட்கார்றதுன்னா உட்காருங்க! எனக் கொண்ணும் ஆட்சேபனையில்லை! என்றான்.

அவள் ஒரு நிமிடம் விழித்தாள். பிறகு குறும்பு வழியப் புன்னகைத்துக் கொண்டே தனக்கு முன்னால் நின்றுகொண்டிருந்த பாட்டியை அழைத்து "பாட்டி! நீங்க வேண்ணா உட்காருங்க!" என்று கை காட்டி விட்டாள்.

'என்னமோ... குறும்பாகப் பார்த்து சிரித்துக் கொண்டிருக்கிறானே! இப்போது பார்த்தால் எவ்வளவு அசடு வழியும், என்று கற்பனை செய்து கொண்டாள்.

ஐந்து நிமிடம் கழித்து மெதுவாக அவன் அமர்ந் திருந்த இடம் நோக்கி ஓரக்கண் பார்வை பார்த்தாள். அவன் இயல்பாகப் பாட்டியிடம் பேசிக் கொண் டிருந்தான். பாட்டி ஏதோ சொல்ல, இரண்டு பேருமாகச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

சாதாரணமாகத் திரும்புவது போல திரும்பி அவள் முகத்தைக் குறும்பாகப் பார்த்துவிட்டு மறுபடியும் பாட்டியிடம் பேச்சில் ஆழ்ந்தான்.

அவள்தான் திணறிப் போனாள்! அப்போது அவ ளுக்குத் தெரியவில்லை. இன்னும் சில நாட்களில் அவள்

சற்றும் எதிர்பாராத விதத்தில் திணறடிக்கப் போகிறான் என்று.

"அப்பா! என்னப்பா. இது! எனக்கொண்ணும் கல்யாணம் வேண்டாம்ப்பா!, என்று கெஞ்சிக் கொண் டிருந்தாள் இதயமொழி.

"இத பாரு! இருபத்தொண்ணு முடியப் போகுது! சரியான வயசும்மா! எனக்கும் கடமை முடியுமில்லே!" என்று அப்பா ஒரே பிடியாய் நின்றார்.

மாப்பிள்ளை வீட்டார் காரில் வந்து இறங்கி னார்கள். "ஆமா.. பெரிய கார்! இப்பல்லாம் கீழ் நடுத்தரக் குடும்பங்கள்கூட கார் வைத்துக் கொண்டுதான் பெண் பார்க்க வருகிறார்கள்!" என்று பொருமிக் கொண்டாள்.

இரண்டு காரில் வந்து இறங்கினார்கள். முதல் காரில் இருந்து இரண்டு மூன்று பெரியவர்கள் இறங்கி னார்கள். அதில் அந்தப் பெரியவரின் முகம் பரிச்சய மானாற்போலவே இருந்தது. யோசிக்கையிலேயே அதற்கு விடை அடுத்த காரில் வந்து இறங்கியது.

அவன்தான்! பஸ்ஸில் கொஞ்ச நாட்களாக குறும்புப் பார்வையுடன் பயணம் செய்து கொண்டிருந்தானே அவன்தான்!

அவள் வியப்பாகப் பார்க்கையில் அவன் எதுவுமே தெரியாதவன் போல வணக்கம் சொன்னான்.

பெயர் சொன்னார்கள்! ஆற்றலரசு என்று!

அவள் நல்லவேளையாக அம்மா, அப்பாவிடம் அவனைப் பற்றி எதையும் சொல்லியிருக்கவில்லை.

குடும்பப் பின்னணி, வசதி, எல்லாமும் இதய மொழியின் பெற்றோர்க்குப் பிடித்திருந்தது.

அவளிடம் பேச வேண்டுமென்றானாம். அவளது அறைக்கு வந்தான்.



அவள் கொஞ்சம் திணறலோடு புன்னகைத்தாள்.

"ஹலோ! இதயத்துகூட ஆற்றலும் சேர்ந்தா ரொம்ப நல்லாயிருக்கும் இல்லே!" என்றான் அலட்டலாக.

"நீங்க தினமும் பஸ்ல வந்துகிட்டிருந்தீங்க..!, என் றாள் மெல்லிய குரலில்.

"எல்லாம் காரணமாத்தான்! தேவியாரை தினமும் பாக்கனும்னு ஒரு எண்ணம்... அப்புறம் பொது இடங் கள்ல பார்த்தா... கொஞ்சம் நல்லாப் புரிஞ்சுக்கலாம் இல்லே!" என்றான்.

அதுவரை இருந்த உற்சாகமெல்லாம் வடிந்தாற் போல உணர்ந்தாள் இதயமொழி.

தன்னை அப்ஸர்வ் செய்து முடிவெடுக்க வந்திருக் கிறான்.

"முடிவெடுத்துட்டீங்களா?" என்றாள்.

"பின்னே?!" என்றான் மறுபடியும் பெருமையாக.

"வெளியிடத்துல நடந்துக்கற மாதிரியே வீட்லே யும் இருப்பேன்னு தீர்ப்பெழுதீட்டீங்களா?" என்றாள்.

அவன் நெற்றியில் முடிச்சுகள் விழுந்தன.

"இதயமொழி!" என்றான் ஆழ்ந்த குரலில்.

அவள் அவனை நேராகப் பார்த்தாள்.

"என்னைத் தங்கத்தை உரசிப் பார்க்கிற மாதிரிப் பாத்துட்டீங்க! உங்களை நான் எப்படி ஜட்ஜ் பண்றது?" என்றாள்.

அவன் லேசாக அதிர்ந்தான்.

"எனக்கும் டைம் குடுங்க! நானும் உங்களைப் பத்தி ஒரு ஜட்ஜ்மெண்டுக்கு வரணுமில்லே..." என்றாள்.

அவன் கொஞ்சம் திகைத்துத்தான் போனான்.

இரண்டு நாட்கள் உறக்கமில்லாமல் கழித்துவிட்டான் ஆற்றலரசு.

"அரசு.. என்னப்பா விஷயம்?" என்று கேட்டார் அப்பா.

"ஒண்ணுமில்லப்பா!" என்று சிரித்துச் சமாளித்தான்.

இன்று மூன்றாவது நாள்!

அலுவலகத்துக்குள் அமர்ந்திருந்தான். தொலைபேசி மணி ஒலித்தது. எடுத்தான்.

"ஹலோ! அரசு.. நான் இதயமொழி!" என்றாள்.

இப்போது அவள் குரலில் குறும்பு கொப்பளித்தாற் போல் இருந்தது.

"சொல்லுங்க!" என்று உற்சாகமானான்.

"நான் உங்களைச் சந்திக்கணுமே!" என்றாள்.

"டெஃபனட்லி!" என்றான்.

சந்தித்தார்கள்!

இப்போது இதயமொழி பேசினாள்.

"அரசு! இந்த ஒரு வாரத்துல நீங்க எப்படி என்னை ஜட்ஜ் பண்ணினீங்களோ அதே மாதிரி நானும் உங்களை ஜட்ஜ் பண்ணியிருக்கேன்!" என்றாள்.

'எப்படி?' என்பது போலப் பார்த்தான்.

"ஆமா! எனக்கு இடம் குடுக்க வந்தீங்களே! அப்ப நான் பாட்டியை உட்கார வச்சேன்.. அப்ப.." என்றாள்.

அவன் தொடர்ந்து பார்த்தான்.

"கொஞ்சம் ஏமாற்றம் உங்க முகத்துல தெரிஞ்சாலும் உடனடியா பாட்டிகிட்டே இயல்பாய் பேச ஆரம்பிச்சுட்டீங்க! வயசானவங்ககிட்டே கன்ஸர்னோட பேசறது ஒரு நல்ல பண்பு இல்லையா! அதே மாதிரி ஸ்டூடண்ட்ஸ்கிட்டே புத்தகப் பையெல்லாம் வாங்கி இயல்பா வச்சுகிட்டீங்க. இதெல்லாம். நல்ல விஷயம் தான். ஆனா ஒரு விஷயம் பிடிக்கலே! அது என்ன தெரியுங்களா?"

"ம்..சொல்லு!" என்றான்.

"இந்தத் தீர்ப்பெழுதறது! தீர்மானிக்கிறது. அதாவது நான் இப்படித்தான் இருப்பேன்னு ஒரு ஜட்ஜ்மெண்ட் வச்சுகிட்டு சம்பந்தம் பேச வந்தீங்களே. அது!" என்றாள்.

அவன் முகத்தில் சுவாரஸ்யம் கிளம்பியது!

"கணவன் மனைவிக்குள்ளே எப்பத் தெரியுங்களா... உறவு பொய்யாகுது! ஒருத்தரைப் பத்தி ஒருத்தர் தீர்ப்பு, அதாவது ஒரு மதிப்பீடு வச்சுக்கும்போதுதான்."

அவள் ஆழ்ந்து கேட்க ஆரம்பித்தாள்.

"ஆமாங்க! இப்பத்திக்கு எனக்கு உங்களைப் பிடிக்குது! உங்களை எனக்குப் பிடிக்குது!" என்று சொல்லும் போது, அவன் முகம் மலர்ந்தது. ஆனால், குறுக்கிடாமல் கேட்டான்.

"ஆனா.. நீங்க விரும்பின மாதிரி மனைவின்னு ஒரு இலக்கணம் வச்சுகிட்டீங்கன்னா அது வம்பு! நானும் இலக்கணம் வச்சுப்பேன். பெரும்பாலும் நிஜ வாழ்க்கையில அது ஒத்து வராது... கற்பனை மனிதர்களுக்கும், நிஜ மனிதர்களுக்கும் கண்டிப்பா பெரிய இடைவெளி இருக்கும். அதனாலே.." என்றாள்.

"ம்..!"

"நாம கல்யாணம் பண்ணிக்கலாம். எப்படீன்னா. என்னை நான் இருக்கிற வாக்கில அப்படியே நீங்க ஏத்துக்கறதானா! நான் உங்களை அப்படியே ஏத்துக்கறேன்! என் மனசுல ஒரு ஃப்ரேம் போட்டு வச்சிட்டு உங்களை அதுல பொருத்திப் பாக்காம.. நீங்க எப்படி இருக்கீங்களோ... அப்படியே ஏத்துப்பேன்...!" என்றாள்.

ஆற்றலரசுவின் ஆபீஸ் விருந்தினர் மாளிகையில் இருந்தார்கள்.

ஆற்றலரசு எழுந்தான். கொஞ்ச நேரம் சிந்தித்தாற் போல ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டு நின்றான்.

அவள் அமைதியாக காத்திருந்தாள்.

மெல்லத் திரும்பிய அவன் ஒரு புன்னகையுடன் சொன்னான். இல்லை கேட்டான்.

"ஒரு சின்ன விஷயம் சொல்லலாமா?" என்று.

அவள் தலையசைத்தாள்.

"நீ ரொம்ப புத்திசாலி...! என்றான்.

"ஆமா! அந்த ஆபத்து வேற இருக்கு! யோசிச்சுக் குங்க" என்றாள் இதயமொழி.

அவன் சிரித்தான். அருகில் வந்தான். "நீ.. நீயாக..! நான், நானாக! தட்ஸ் வெல் செட்...! என்றான்.

கொஞ்சம் நெருங்கினாற்போல நின்றான்.

"ஏதோ சத்தம் கேட்கலே?" என்றான்

அவள் கேள்விக்குறியுடன் நிமிர்ந்து பார்க்க, "கெட்டிமேளச் சத்தம்" என்றான்

சத்தம் எழாமல் காதலுடன் அவளைப் பார்த்து சிரித்தான்.

அவளும் விடுதலையடைந்தாற்போன்ற உணர்வுடன் ஒரு பெருமூச்சுடன் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

"ஆமா..! கேட்குது!" என்றாள். இருவரும் சிரித்தார்கள்.



# 20

## கனவுக் கதாநாயகன்

அன்றைக்குக் காலையிலேருந்து பத்தாவது முறையாக படித்துவிட்டு கதைப் புத்தகத்தை மூடி வைத்தாள் பாரதி. மூடி வைக்கும்போது பூப்போல மெதுவாக மூடினாள் என்றால் அந்தக் கதைப் புத்தகத்தின் மேலும், கதாசிரியை மேலும் அவளுக்குள்ள ஈர்ப்பைப் புரிந்து கொள்ள முடியும்.

மெதுவாக நடந்து சென்று தங்கள் வீட்டிலிருந்த அந்தப் பழைய, மரச் சட்டம் போட்ட பெரிய கண்ணாடி முன்பாக நின்றுகொண்டு தனது நீண்ட பின்னலை முன்னாலே எடுத்துப் போட்டு அழகு பார்த்தாள். உண்மையாகவே அழகாக இருந்தது. "என்னமோ, இந்த அம்மா கதை வேறு, வாழ்க்கை வேறு, கதைப் புத்தகமே பழியாய்க் கிடக்காதேடி" என்பாளே, ஆனால், இப்ப என்ன ஆச்சு! தனது அபிமான கதாசிரியை எழுதுவது போலேதான் தன் வாழ்க்கையிலும் நடக்கிறது. அம்மா என்ன நோக்கத்தோடு தன்னை உறவினர் வீட்டுக் கல்யாணங்களுக்கெல்லாம் அழைத்துச் சென்றாளோ அது நிறைவேறத்தானே செய்தது.

'தான் நினைத்து மனதில் வரித்ததைப் போலவே ஆறடி உயரக் கதாநாயகன் தன்னைத் திருமண வீட்டில் பார்க்கவில்லையா? அழகை அங்கீகரிக்கவில்லையா? பெண் பார்க்க தேதி கேட்டு ஆளனுப்பவில்லையா? இன்றைக்குப் பெண் பார்ப்பது என்று முடிவாக இல்லையா?' என்று மானசீகமாகப் பேசிக் கொண்டு

தனது ஒப்பனையைப் பார்த்துக் கொண்டாள். அளவாக அழகாகவே இருந்தது. இனிமேலும் எல்லாமே சரியாக நடக்கும் என்ற நம்பிக்கை தோன்றியது.

மெதுவாக அந்த அறையை விட்டு எட்டிப் பார்த்தாள். அப்பா குறுக்கும் நெடுக்குமாக நடப்பது தெரிந்தது. பாவம் அப்பா! மூன்று பெண்களைக் கரையேற்ற வேண்டுமே என்ற கவலை அவர் நெற்றி நிறைய கோடுகளாக மண்டியிட்டு அமர்ந்திருந்தது.

'கவலைப்படாதீர்கள் அப்பா! பைசா வேண்டாம் எனக்கு பாரதியை மட்டும் கொடுங்கள் போதும்' எனக் கேட்கப் போகிறான் இந்த வரன். என் பெண்களே கவிதைகள்தான் என்று பெருமிதமாகப் பாரதி, சரோஜினி, கவிதா என்று பெயர் வைத்துப் பெருமையாகப் பேசுகிறவரின் நிமிர்ந்த தோள்கள் சமீப காலத்தில் கொஞ்சம் கூனிக் குறுகியதாகத் தெரிந்ததே. அதெல்லாம் சரியாகிப் போய்விடும் என்று அப்பாவிடம் மனதுக்குள் பேசிக் கொண்டாள்.

ஆயிற்று! பத்து மணிக்கு வருகிறோம் என்றிருக்கிறார்கள் என்று நினைக்க, நினைக்கவே கார் வரும் ஓசை கேட்டது. அப்பா ஓடிப் போய் வரவேற்பதும், அம்மா பரபரப்பாய் வியர்க்க, விறுவிறுக்க சமையல்கட்டை விட்டு ஓடி, "வாங்கோ! வாங்கோ!" என்று வரவேற்பதும் புரிந்தது.

மாப்பிள்ளை வீட்டார் நிறைய பேர் வரவில்லை. மொத்தமாகவே ஐந்தாறு பேர்தான்.

பாரதி வந்து நமஸ்காரம் செய்து விட்டுப் போனாள். இரண்டாம் முறையாகக் காபி கொண்டு வந்து ஒவ்வொருவருக்கும் கொடுக்கையில், சேகரனின் முகத்தை ஜாடையாய்ப் பார்த்தாள். அவன் கிறக்கம் முகத்தில் தெரிந்தாலும் கம்பீரமாய்த்தான் அமர்ந்திருந்தான்.



பாரதி உள்ளே வந்தாள். உள்ளேயென்றால் பேச்சு சத்தம் கேட்கிற தூரம்தான். பழைய தொட்டி கட்டு வீடு. மாப்பிள்ளை வீட்டார் அமர்ந்திருந்த கூடத்துக்குப் பக்கத்து அறைதானே! எல்லாம் தெளிவாய் கேட்டது.

"சார்! எல்லாம் வெளிப்படையாய் பேசிடறது நல்லது. பெண் மகாலட்சுமியாத்தான் இருக்கா. கல்யாணமே இப்போதைக்கு வேண்டாம்னு சொன்ன பையன் ஒத்துண்டுட்டான்னப்பவே நேக்கு விஷயம் புரிஞ்சுடுத்து. இருந்தாலும் நேரில பாக்கறப்ப நன்னாப் புரியறது!" பெரிய ஹாஸ்யமாகச் சொல்லி சிரித்தார் சேகரனின் அப்பா. அப்பா, அம்மா முகம் விகசித்துப் போயிருக்கும். பெருமையாய் உணர்ந்தாள் பாரதி.

"எல்லாம் நல்லதுதான். ஆனால், சில விஷயங்களைப் பேசித்தானே ஆகணும். "நீங்களும் நடுத்தரக் குடும்பம். நாங்களும் நடுத்தரம்தான். இருந்தாலும் எதை நிறுத்த முடியும்னு சொல்லுங்கோ. ஆனா, ஒரு நாள் கல்யாணத்துக்கு வீணா அதிகம் செலவழிக்க வேண்டியதில்லை. ஓரளவுக்கு செஞ்சாப் போதும்."

பாரதியின் அப்பா பரசுராமனுக்கு மனசெல்லாம் நிறைந்தாற்போலிருந்தது.

சேகரனின் அப்பா நடராஜன் தொடர்ந்தார். ஆனா, கையில என்ன கொடுப்பேள்? நகை என்ன போடுவேள்?ன்னு தெளிவாச் சொல்லுங்கோ. ஏன்னா, சேகரனுக்குப் பின்னாலே எனக்கு இரண்டு பொண்கள் கல்யாணத்துக்கு வந்துண்டிருக்கா."

நிறுத்தினார்.

பரசுராமன் மெதுவாக ஆரம்பித்துச் சொன்னார். "நேக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை. எனக்கு மூணும் பெண்கள். பூர்வீகத்திலிருந்து கிடைச்ச இந்த வீடு ஒண்ணுதான் இருக்கு. மத்தபடி நான் வாங்கற

சம்பளம்தான். பாரதி மேலே படிக்க விரும்பலை. அதனாலே ப்ளஸ்டுவோடு நிறுத்தினேன்."

நடராஜன் இடைமறித்தார்.

"அதுதான் பிரச்சினையே. படிச்சு வேலைக்குப் போறவளானால் கொஞ்சம் நன்னாயிருந்திருக்கும். அதுதான் என்ன பண்றதுன்னு தெரியலை. எங்க பையனாவது கவர்ன்மெண்ட்டு வேலையில் இருக்கறவனா இருந்தாப் பரவாயில்லை. என்னதான் பத்தாயிரம் சம்பளம்னாலும் பிரைவேட் கம்பெனி, நிலைமை ஒரே மாதிரி இருக்காதே."

பாரதியின் அம்மா கணவனைக் கவலையாய்ப் பார்த்தாள். என்ன பேச்சு இப்படிப் போகிறதே என்று பார்த்தார். பரசுராமன் நேரடியாக விஷயத்துக்கு வந்தார்.

"நீங்க என்ன எதிர்பார்க்கறேள்னு சொன்னா, முயற்சிக்கறேன்" என்றார்.

"சார்! நானும் தெளிவாச் சொல்லிடறேன். பெரிய ரூபா ஒரு ரூபா கைல குடுத்துடுங்கோ. ஐம்பது பவுன் நகை போட்டுடுங்கோ. மத்தபடி, கல்யாணம் நீங்க கோயில்ல வச்சாலும் சரி, ஒரு ரிசப்ஷன் பண்ணிரலாம். விஷயம் முடிஞ்சுடும்."

அதிர்ந்துபோனார் பரசுராமன். இவ்வளவு அவர் எதிர்பார்க்கவில்லை. எதற்கும் உறுதிப்படுத்திக் கொள்வோம் என்று மீண்டும் கேட்டார்.

"பெரிய ரூபான்னா...?"

"என்ன சார் இப்படிக் கேக்கறேள். பெரிய ரூபான்னா ஒரு லட்சம்தான். இது எல்லாருக்கும் தெரிந்ததுதானே. ஆனா, இன்னொண்ணும் சொல்லிடறேன். ஒரு குழந்தை வரைக்கும் சீர் செஞ்சா போதும். சொத்துப் பங்கெல்லாம் பின்னாடி பாத்துக்கலாம். இப்ப அதைப் பத்தி பேச்செடுக்க மாட்டோம்."

பாரதி உள்ளே ஆணியடித்தாற்போல் உறைந்து போய் நின்றுகொண்டிருந்தாள்.

பாரதியின் அம்மா லட்சுமியும், பரமேசுவரனும் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு விழித்துக் கொண்டிருந்தார்கள். அதற்குள்ளாக சேகரன் அப்பாவிடம் கேட்டான்.

"அப்பா ஒரு நிமிஷம்! நான் பெண்கிட்டே பேசணுமே?" என்று.

பாரதியின் அப்பா அரைகுரையாய்த் தலையசைத்துக்கொண்டு "அதுக்கென்ன பேசட்டுமே!" என்று பாரதி இருந்த அறையைக் காட்டினார்.

பாரதி விதிர்விதிர்த்துப் போனாள். ஜன்னல் பக்கம் சாய்ந்து தலையைக் குனிந்து கொண்டாள். உடம்பெல்லாம் ஏதோ பாய்வது போல் இருந்தது. கண்டிப்பாய் இந்தப் பிரச்சினைக்கு சேகரன் ஏதாவது விடிவு சொல்வான். தன்மேல் பைத்தியமாய் இருக்கிறான் என்று நம்பிக்கையான எண்ணங்கள் ஓடின.

சேகரன் அறைக்குள் வந்தவுடன் கதவை ஒருக்களித்தாற்போல் மூடினான். பாரதி ஒரு நிமிடம் அதிர்ந்துபோனாள். இதோடா வம்பு என்று. நல்ல வேளை! கதவிலிருந்து இடைவெளியில் தன் உருவம் தெரிகிற மாதிரி நின்றுகொண்டாள் அதைப் பார்த்து அவன் முகத்தில் ஒரு குறும்புச் சிரிப்பு மலர்ந்தது.

"பாரதி...." என்றான்.

"ம்...!" என்றாள்.

"பாரதி... உன்னைப் பார்த்ததுல இருந்தே நேக்கு உன் ஞாபகம்" என்றான்.

"......!"

"ஆனா... என் நிலைமையைப் புரிஞ்சுக்கோ. எங்காத்துலயும் ரெண்டு பொண்கள் கல்யாணத்துக்கு இருக்கா. பெரிய இடத்துல இருந்தெல்லாம்... நேக்கும் ஜாதகம் வந்தது. ஆனா... நேக்கு மனசுக்கு பிடிக்கலே. அதனால..." என்று ஒரு நிமிடம் நிறுத்தினான்.

பாதி தீர்க்கமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"உங்கப்பாவண்டை சொல்லு. அந்தப் பணத்துக்கு எப்படியாவது ஏற்பாடு பண்ணச் சொல்லு...!" என்றான்.

பாரதி "பாக்கறேன்..." என்றாள்.

"பாக்காதே! செய்!" என்றான். தலையசைத்து விட்டு வெளியே போனான்.

அடுத்த நாள் இரவு!

அப்பா சாப்பாட்டை அளைந்துகொண்டே மனைவியைப் பார்த்தார்.

"ஏண்டி... ரேணு! வீட்டை வேண்ணா அடமானம் வச்சர்லாமா?" என்றார்.

"என்னவோ... செஞ்சுக்கோங்கோ! இவளை தாட்டி விட்டுட்டா... அடுத்து ரெண்டும் வரதுக்கு இன்னும் இரண்டு மூணு வருஷம் இருக்கு! எப்படியோ கடனை அடைச்சுடலாம்" என்றாள் ரேணுகா.

அப்பாவின் பக்கத்தில் வந்து அமர்ந்தாள் பாரதி.

"அப்பா! இந்த வரன் வேண்டாம்!" என்றாள்.

நேற்றிரவெல்லாம் இதைப் பற்றி யோசித்தாள் பாரதி.

ஏதோ பெண் தங்கள் தகுதிக்குக் குறைவு மாதிரியும் அழகாக இருக்கிறாளே என்பதற்காக எடுக்கிறோம் என்பது போலவே பேசினார்களே பிள்ளை வீட்டுக்காரர்கள் என்ற எண்ணம் தோன்றியது.



சேகரன் தன்னிடம் தனியாகப் பேச வந்தபோது "கவலைப்படாதே! நான் எப்படியாவது அப்பாகிட்டே பேசி சமாளிக்கறேன்" என்று சொல்வான் என்று எதிர் பார்த்தாள். மாறாக, அவனும் அதே தோரணையில் பேசவும், அவளுக்கு மனம் விட்டுப் போனது.

கனவுகளெல்லாம் கலைந்து போனாற்போல உணர்ந்தாள். அதனால்தான் அப்பாவிடம் இப்படிச் சொன்னாள்.

"என்னம்மா... சொல்றே!" என்றார் அப்பா அதிர்ந்து போய்.

"ஆமாம்ப்பா! ஏதோ போனாப் போகுதுன்னு கல்யாணம் செய்யற மாதிரியே பேசறா. வேண்டாம்ப்பா! நேக்கு என் தகுதிக்கு ஏத்த மாதிரி வேலை பார்த்துக் குடுங்கோ! இப்ப என்ன, நேக்கு பத்தொன்பதுதானே ஆறது. ஒரு மூணு வருஷம் வேலை பார்க்கறேன். அப்படியே கரஸ்பான்டன்ஸ்ல டிகிரி முடிக்கறேன். கம்ப்யூட்டர் கோர்ஸ் அது இதுன்னு ஏதானும் பண்றேன். தகுதியை உயர்த்திக்கறேன். படிப்பையும் பாத்துண்டு பணம் சேமிக்கறேன். அப்பா... ஒண்ணு மட்டும் சொல்றேன். வரதட்சணைன்னு கேக்கற எந்த மாப்பிள்ளையும் வேண்டாம். நேக்குக் கல்யாணமே ஆகல்லேன்னாலும் சரி..." என்றாள். அப்பாவும், அம்மாவும் ஒரவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"அப்பா...! எதுக்குக் கவலையாய்ப் பாக்கறேன். நான் தெளிவா முடிவெடுத்துட்டேன்" என்றாள்.

அப்பாவின் பதிலை எதிர்பாராமல் எழுந்து அறைக்குப் போனாள். ஆமாம். பாரதி தெளிவாகத்தான் இருந்தாள்.

தன் அழகுக்காக மட்டுமே எந்தக் கனவுக் கதாநாயகனும் வந்து தன்னைத் தூக்கிக் கொண்டு போகப்

போவதில்லை. அழகு மட்டுமே தகுதியாக இல்லாமல் தன் திறமைகளை வளர்த்துக்கொள்வோம் என்ற உறுதியோடு தன் மனப்பிம்பத்தில் உருவாக்கி வைத்திருந்த 'கனவுக் கதாநாயகனிடம்' சற்றே! விலகியிரும் பிள்ளாய் என்றாள்.

தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள். ஆனால், மகிழ்வாக கொஞ்சம் தன்னம்பிக்கையோடு கூட.

∴ ∴ ∴